உ

செட்டிநாடு

வார இதழ்

மலர்-25 இதழ்-5
மன்மத-கார்த்திகை-1
17-11-55
வியாழன் வெளியீடு
தேவகோட்டை
ஆண்டுச்சந்தா ரூ 4
வெளிநாடு ரூ 7

ஆசிரியர்:- பாலகவி இராமநாதன்செட்டியார்

நற்றிணை—தெளிவுரை :முல்லை

வினைவயிற் சென்று முடித்து மீளுந்தலைவன் தேர்ப்பாகனை நோக்கிப் 'பாகனே! நமது காதலி தன் புதல்வன் துயிலு மிடம் புகுந்து கொஞ்சும் சொல்லை யாம் கேட்டு மகிழ விரைந்து தேரைச்செலுத்துவாயாக' எனக் கூறியது.

மணிகண் டன்ன மாநிறக் கருவிளை, யொண்பூந் தோன்றியொடு தண்புத லணியப், பொன்றொடர்ந் தன்ன தகைய நன்மலர்க், கொன்றை யொள் ளிணர் கோடுதோறுந் தூங்க, வம்புவிரித் தன்ன செம்புலப் புறவி, னீர ணிப் பெருவழி நீளிடைப் போழச், செல்க பாகநின் செய்வினை நெடுந் தேர், விருந்து விருப்புறூஉம் பெருந் தோட் குறுமகள், மின் னொளி ரவிரிழை நன்னகர் விளங்க, நடைநாட் செய்த நவிலாச் சீறடிப், பூங்கட் புதல்வன் றூங்குவயி னொல்கி, வந்தீ கெந்தை யென்னு, மந்தீங் கிளவி கேட்க நாமே 221 :-இளவேட்டனார்

பாகனே! விருந்தை எதிரேற்கும் விருப்பங்கொண்ட பெரிய தோளையுடைய இளநங்கையாகிய நமது காதலிமின்போல ஒளி விளங்குகின்ற அணிகலங்களால் நல்ல மாளிகை யெங்கும் விளங் கும்படி நாட்காலையில் நடைபயின்றறியாத சிறிய அடிகளையும் பூவையொத்த கண்ணையுமுடைய புதல்வன் தூங்குமிடத்திலே சென்று 'எந்தாய் வருக' என்று அழைக்கின்ற அழகிய இனிய சொல்லை நாம் கேட்டு மகிழும்படி நீலமணியாற் செய்து வைத்தது போன்ற கருநிறத்தையுடைய காக்கணங்கொடி ஒள்ளிய காந்தளு டனே குளிர்ந்த புதல்தோறும் மலர்ந்து அழகுசெய்யப் பொற் காசைத் தொங்கவிட்டாற்போல அழகுடைய நல்ல சரக்கொன்றை யின் ஒள்ளிய பூங்கொத்துகள் கிளைகள்தோறும் தூங்க இவற்றால் நறுமணம் பெற்ற சிவந்த முல்லை நிலத்தில் நீரமைந்த பெருவழி யின் நீண்ட இடமெங்கும் சுவடுபிளந்து செல்லும் நினது செய் வினையுடைய தேர் விரைந்துசெல்லுவதாக :-பாலகவி

பசுந்தமிழ் மலர்

பாலகவி

சமரவெஞ் சூலத்தர் கோடீச் சுரவெற்பிற் சாற்றுமன்போ
டமர ருணவிற் றினைமாவுந் தேனு மளிப்பிரேனிற்
கமலையன் னீரேன் றவப்பயன் மேலிங்ஙன் கண்டலவோ
குமரக் கடவுள் குடிகோண் டனனிக் குறிஞ்சியிலே

:-கோடீச்சுரக் கோவை 150

உரை: 'கமலை அன்னீர் - செந்தாமரை மலரில் எழுந்தருளியிருக்கின்ற திருமகளை ஒத்தவர்களே, சமரம்-போர் செய்வதற்குரிய, வெம்-கொடிய, சூலத்தர்-முத்தலைச் சூலத்தையுடையவராகிய சிவபெருமானுடைய, கோடீச்சுர வெற்பில்-கோடீச்சுர மலைச் சாரலிலே, சாற்றும் அன்போடு-சொல்லப்பெறுகின்ற உண்மையான அன்புடன் -அமரர் உணவில்-வானோர்களது உணவாகிய அமுதத்தைப்போல, தினைமாவும் தேனும்அளிப்பிரெனில்-தினைமாவும் தேனும் எனக்குத் தருவீர்களானல், என் தவப்பயன்-அது நான் செய்த தவத்தின் பயனகும், மேல் - முன்னளில், இங்ஙன் கண்டு அலவோ-இதனை அறிந்தல்லவா, குமரக் கடவுள்-குமரப்பெருமான், இக்குறிஞ்சியில் - இந்தக் குறிஞ்சி நிலத்தில், குடி கொண்டனன் குடிகொண்டு இருந்துவிட்டான்' என்பதாகும்.

கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகரென்னும் புலவர் பெருமானல் இயற்றப்பெற்றது, கோடீச்சுரக்கோவை. பாவலர்கள் தாம் பிறந்த இடங்களிலும் பழகிய இடங்களிலும் பற்றுள்ள இடங்களிலும் உள்ள கடவுளர் பேரிலும், தம்மைஆதரித்த பெருமக்கள்பேரிலும் அவர்களைப் பாராட்டிப் பத்தியினுலும் செய்ந்நன்றியறிவாலும் செய்த பிரபந்தங்களும் தனிப்பாடல்களும் தமிழ் மொழியிற் பல உள்ளன.

இந்த முறையில் இவ் வாசிரியர், தாம் பிறந்த ஊராகிய

கொட்டையூரென்னுந் திருத்தலத்தில் கோடீச்சுரமென்னுந் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற இறைவரைத் தலைவராக வைத்துக் கோடீச்சுரக் கோவையையும், தாம்பழகியதும் தமக்குப் பற்றுள்ளதுமான தஞ்சைப்பதியில் எழுந்தருளியிருக்கின்ற பெருவுடையாரைத் தலைவராக வைத்து ஒரு உலாவையும், தம்மை ஆதரித்த தஞ்சையரசராகிய சரபோசி மன்னரைத் தலைவராக வைத்து ஒரு குறவஞ்சியையும் இயற்றியுள்ளார்.

தமிழிலுள்ள நூல்கள் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என்னும் இரண்டு பிரிவினுள் அடங்கும். பெருங்காப்பியத்திற்குக் கூறப்பெற்ற இலக்கணங்களுள் ஒன்றோ சிலவோ குறைபாடுடையனவாயிருப்பனவற்றைச் சிறுகாப்பியமென்று கூறுவர். எனவே தொண்ணூற்றாறு வகையினவாகக் குறிக்கப்பெறுகின்ற பிரபந்தங்கள் சிறுகாப்பிய வகையில் அடங்குவன என்பது அறியவேண்டுவதாகும். பெருங்காப்பியங்களைப் படித்து அறிந்து கொள்ள வேண்டிய பொருள்களைப் பிரபந்தங்களைப்படிப்பதால் எளிதில் அறிந்துகொள்ளலாமென்று பெரியோர் சொல்லுவர். அதனாலேயே, பிரபந்தங்களையும் பெருங்காப்பியங்களைப் போலப் போற்றி இயற்றுதலும் கற்றலும் நம் நாட்டில் தொன்றுதொட்டு நிகழ்ந்து வருகின்றன

பிரபந்த வகைகளில் கோவை, இயற்றுதற்கும் படித்தற்கும் அருமை வாய்ந்ததாகும். 'யாவையும் பாடிக் கோவை பாடு என்ற பழமொழி இதனை வலியுறுத்தும். திருவாசகம் பாடிய பின்னரே திருவாதவூரடிகள் திருக்கோவையாரைப் பாடியருளினார்களென்னும் வரலாறு இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

சிவக்கொழுந்து தேசிகர் இயற்றியனவாக வைத்திய நூல்கள் மூன்றுஉள்ளன. திருப்பெருமணநல்லூருக்கு ஒரு புராணமும் திருவிடைமருதூருக்கு ஒரு புராணமும் இவரால் இயற்றப் பெற்றுள்ளன. இவரது பாடல்கள் எளிய நடையில் அமைந்து சொல்லணி - தொனியலங்காரம் முதலிய பலவகைச் சுவைகளுடன் விளங்குகின்றன. கோடீச்சுரக் கோவையிற் காணப் பெறும் அளவிற்கு வேறு எந்த நூலிலும் தொனியலங்காரம் காணப்பெறவில்லை என்பதை எண்ணும்பொழுது இவ்வாசிரி

யரது ஒப்புயர்வற்ற ஆற்றலைப் பாராட்டாமலிருக்க முடியாது

பாடல்களில் சொல்முரண், பொருள்முரண் மடக்கு முதலிய வற்றை அமைத்துச் சிலேடைப் பொருள் பொருந்தப் பாடுகின்ற இவரது திறமை, மற்றையோரிடம் இல்லாததாகும். பரம்பரைச் சைவாசாரிய மரபில் உதித்தவராகிய இவ்வாசிரியர் அதற்கேற்ப அழுத்தமான சிவபத்திப்பெருக்கம் உடையவராகத் திகழ்ந்திருந்தாரென்பதை இந்நூலில் கோடீச்சுரப் பெருமானைக் கூறும்பொழுது அவருக்குப் பேசியுள்ள அடைமொழிகளால் நன்கு அறியலாம். அவற்றுள் ஒன்று 'எனைத்தன் னடிமை யெனத்தடுத் தாண்டருளீசர்' என்பதாகும்.

அகமும் புறமுமாகிய தமிழிலக்கண வகைகளுள், அகப்பொருளிலக்கணத்திற்கு இலக்கியமாயமைந்த பிரபந்தங்களில் முதன்மைவாய்ந்தது கோவையேயாகும். கலம்பகம் முதலிய மற்றைப் பிரபந்தங்களிலும் அகப்பொருளிலக்கியச் செய்யுட்கள் உள்ளனவேனும் கிளவிகளாக வகுத்துத் துறைகளாக விரித்து ஒரு வரலாற்றுத் தொடர்ச்சியமையக் கோக்கப்பெற்றுப் பாடப்பெறுவது இப்பிரபந்தமாதலின் இது கோவை எனப் பெயர் பெற்றது.

அகப்பொருளுக்குரிய ஏழுதிணைகளுள் கைக்கிளையும் பெருந்திணையும் முறையே ஒருபால் அமைவதாயும், பொருந்தாததாயும் இருப்பனவாதலின், ஏனைய குறிஞ்சி, முல்லை, பாலை, நெய்தல் மருதம் ஆகிய ஐந்துமே கோவை நூல்களில் மிகுதியாக இடம்பெறுகின்றன. அதனால் ஐந்திணைக்கோவைஎன்றும் இது வழங்கப்பெறுகின்றது. 'திருந்து தமிழிலக்கணவைந் திணைக் கோவை' என்பார் சிவப்பிரகாச சுவாமிகள்.

தொல்காப்பியத்தில் அகப்பொருளிலக்கணம் கூறப்பெற்றுள்ளதெனினும், அச் செய்திகள் ஒருகதைபோலத்தொடர்ந்த துறைகளாகக் கூறப்பெறவில்லை. அங்ஙனம் தொடர்புபெறக்கூறப் பெறுகின்ற இலக்கண நூல்கள் இறையனாரகப்பொருளும்நாற்கவிராசநம்பியகப் பொருளுமேயாம். இவையிரண்டனுள் இறையனாரகப்பொருள்முன்னர்த்தோன்றியதாதலின் அதனைப் பின்பற்றித் தொகை வகை விரி முதலியன அமைய நம்பியகப்பொருள் பின்னே தோன்றியது.

கோவைகளில் தலையாயதும், திருச்சிற்றம்பலமுடையாரது வேண்டுகோளுக்குத் திருவாதவூரடிகளால் இயற்றப் பெற்றதுமான திருக்கோவையாருக்கும் மற்றைக் கோவைகளுக்கும் சிற்சில வேற்றுமைகள் உண்டு. ஏனைய கோவைகளனைத்தும் இறையனாரகப்பொருளிற் கூறப் பெற்றுள்ள இலக்கணத்திற்கு இலக்கியமாய் அமைந்தன என்பது உணரத் தக்கதாகும்.

தமிழ்மொழியிலுள்ள கோவை நூல்கள் பல. அவ்வெல்லாக் கோவைகளும் ஒரே வகையான இலக்கண அமைதியுடையனவேனும் ஒரே வகையான செய்திகளை உணர்த்துவனவேனும் ஆசிரியர்களது அறிவாற்றல்களால் ஒவ்வொன்றிலும் தனித்தனியான பல நயங்கள் அமைந்துள்ளன.

கோடீச்சுரக்கோவையில் உள்ள செய்யுட்கள் 444. அறிவுந் திருவும் ஆற்றலும் படைத்துப் பதினாறாட்டைப் பருவம் உடையவனாய் விளங்குகின்ற தலைவன், பாங்கரும் ஏவலினரும் சூழ வேட்டையாடச் சென்று அவர்களைப் பிரிந்து மானொன்றைத் துரத்திச்செல்லுகையில், மலைச்சாரற் சோலையில் பாங்கியருடன் வந்து மலர்கொய்யப் பிரிந்து தனித்துநின்ற பேரழகுடைய மலைவாணர் மகளொருத்தியைப் பண்டை விதி கூட்டப் பார்க்கிறான்.

ஊழ்வினைத் தொடர்பால் ஒருவருள்ளத்தில் மற்றொருவர் உள்ளம்புகக் களவிற் புணர்ந்து களிப்படைகிறார்கள். பிறரறியாத நிலையில் சிலநாட்கள் அவர்களது கூட்டம் நிகழுகின்றது. தொடர்ந்து இன்பம் நுகருதற்கு அவர்களிடையே பாங்கனும் பாங்கியும் முன்னின்று துணை செய்கிறார்கள். பாங்கியின் உதவியை நாடித் தலைவன் அவளிடம் பேசுவது முதலாகவுள்ள நிகழ்ச்சிகள் 'பாங்கியிற் கூட்டம்' என்ற தலைப்பில் கூறப் பெறும்.

தலைவியை உடன்படுத்த முதலில் மறுத்த தோழி அவனுக்கும் அவளுக்கும் முன்னரே உண்டாகியிருக்கின்ற நட்பினை அறிந்து, அவளை அவன் குறித்தஇடத்தில் கொண்டு வந்து விட்டுப் பிரிந்துவிடுகிறாள். இருவரும் இன்பம் துய்த்த பின்னர் தலைவியைத் தோழி ஆயத்துய்த்துத் தலைவனிடம் 'இன்றுபோல் என்றும்

(12ம் பக்கம் பார்க்க)

சைவாலயங்களில் சம்ஸ்கிருத அர்ச்சனையே வேண்டும்.

சித்தாந்த பண்டித பூஷணம் ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை

(முன்தொடர்ச்சி)

அவர் கொள்கையுஞ் சோரவிடப்பட்டதாகும். ஆலய சம்பந்தமான விதிகளைக் கொண்ட பிரமாண நூலென ஏதேனுமொன்றிருந்து அது மதிக்கப்பட்டாலொழிய அவ்விருப்பங்களுள் இது தகும், இது தகாது என எந்த விருப்பத்தையும் நிச்சயிக்க முடியாது. நவீனருக்கு அத்தகையதொரு பிரமாண நூலெனஎதுவு மில்லை. ஆகலின் பொது மக்களிடமிருந்து கிளம்பினதெனக் கூறிக்கொண்டு அவ்வொரே காரணத்தால் எந்த விருப்பத்தையும் அவர்செயற்படுத்துவர். மேலும் அவருக்கு அந்நாஸ்திகருடைய விருப்பங்க ளத்தனையும் உடம்பாடே. அவற்றுள் எதனையும் அவர் எதிர்க்க முற்படார். ஆனால் அவர் நாஸ்திகத்தைத் தூஷிப்பது முண்டு. அது 'நான் அடிக்கிறமாதிரி அடிக்கிறேன். நீ அழுகிறமாதிரி அழு' என்றபடியாகும். இந்நிலையில் அவர் தமிழர்ச்சனைப்போராட்டம் ஆரம்பிக்கவும், அதற்கு அந்நாஸ்திகர் ஆதரவு நல்கவும் சந்தர்ப்பம்நேர்ந்தால் ஆலயங்கள் என்ன வாகும்? தோட்டக்காரனுங் கள்ளனுஞ் சேர்ந்தால் தோட்டம்ஆவதுபோல் அவையுமாகும். உண்மையில், நவீனருக்கு அந்நாஸ்திகர் ஆதரவு கொடுக்கவில்லை. நவீனரே சைவ வேடத்துள் மறைந்து நின்று அவருக்கு ஆதரவு தந்துகொண்டிருக்கின்றனர். அந்நாஸ்திகரின் விருப்பங்கள் செயற்படுதற்குச் செய்யப்படும் ஆரம்பமுயற்சியே நவீனரின் தமிழர்ச்சனைப் பிரசாரம். அதனைச் சைவ சமூகம் அறிக.

தி-க, தி-மு-கக் கூட்டத்தினருக்குக் கடவுளிடத்துநம்பிக்கை வந்தது குறித்துத் தமக்கு மகிழ்ச்சி ஏற்பட்டதாக நவீனர் சொல்கிறார். ஆனால் நவீனருக்குக் கடவுள் நம்பிக்கை எவ்வளவிலிருக்கிறது? முதலில் அதைப் பார்க்கலாம். ஈசுரபக்தி யென்பதொன்று. மோக்ஷமென்பதொன்று. அவற்றுள் தெள்ளறிஞர் ஈசுரபக்தியையே விரும்புவர்; மோக்ஷத்தை விரும்

பார். ஏன்? ஈசுரபக்தியே மோக்ஷத்துக்கு வித்து. ஆனால் அம்மோக்ஷத்தை யருள்பவன் ஈசுரன். அஃதவனது கடன். ஆகலின் அப்பக்தியே எல்லா வுயிர்களுக்கும் அவசியம். அதனை யுடைத்தாதலே அத் தெள்ளறிஞராவார் தமக்குக் கடனாகக் கொள்ளவேண்டும். அக் கடனை வற்புறுத்தவே 'கூடுமன்பினிற் கும்பிடலே யன்றி- வீடும் வேண்டா விறலின் விளங்கினர்' எனத் திருமுறை அவ்விரண்டையும்ஒப்புநோக்கிப் பக்தியை விசேடித்தது. அது மோக்ஷத்தைத்தாழ்த்திக்கூறியதாகாது. ஆனால் ஈசுரன், பக்தி, மோக்ஷம் என்பன ஒன்று. சமூக சேவையென்பது ஒன்று. அப்படி வைத்துக்கொண்டு அவ் விரண்டையும் ஒப்புநோக்கினர் நவீனர். அவரும் நானும் போன்றோர் கடவுளைக் காணாதவர். கடவுளொருவருளரென்பதை அவர் எப்படி ஏற்பர்? அவருள் மற்றவர் ஏற்பது எப்படியோ? கடவுள் ஒருவருளர், அவர் சிவ பெருமானே என்ற உண்மையை உத்தேச லக்ஷண பரீக்ஷை என்ற முறையால் நிச்சயம் பண்ணின சைவசமய நூல்கள்: சைவர் அம்முறைபற்றி அவ் வுண்மையை ஏற்று வருகின்றனர். ஈசுரனை நேரிற் காண்பதற்கு முதன்முதல் வேண்டப்படுவது அந்நிச்சய புத்தியே நவீனருக்கு அம்முறையும், அம்முறையில் உளனென நிச்சயிக்கப்பட்ட ஈசுரனும் வேண்டாம். அவர் வேதசாத்திரங்களை - புராணங்களைப் படிப்பதனால் கடவுளைக் காணமுடியாது. இயற்கையிலே தான் கடவுளைக் காண முடியும் என்று கூறுகிறார் வால்டேர்' (2-6-55 தமிழ்நாடு) என்கிறார். வேதசாத்திர புராணங்களைப் படிப்பதனால் கடவுளைக் காண முடியாதென்று வால்டேர்சொன்னதை எற்றுக்கொண்டதனால் திருக்குறள் திருவாசக முதலியவற்றைப் படிப்பதனாலுங் கடவுளைக் காணமுடியாதென்று அவர் சொன்னவரானார். அவர்'தமிழக வாழ்க்கையில் அறத்துறையில் திருக்குறளும், அருளியல்துறையில் திருவாசகமும் தலையாயநிலையில் இருக்கிறது' (26-8-55 தினமணி) என்று பிரசங்கிப்பதெல்லாம் அலங்காரப் பேச்சே. ஈசுரன் கற்றவர் விழுங்குங் கற்பகக் கனி; கல்லா நெஞ்சில் நில்லான். திருக்குறளுக்கு உரை கண்ட பரிமேலழகர் வேதசாத்திர புராணப்பயிற்சியால் வளர்ந்த அறிவை'ஆகமவறிவு' என்றும், அதற்குப்பயன் 'அவன்றாளைத் தொழுது பிறவியறுத்தல்' என்றுங்கூறினர். (தொடரும்)

உ
சிவமயம்
பாலரூவாயர் துணை



அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

செட்டிநாடு

மன்மத கார்த்திகை 1

கந்த சஷ்டி

பரங்கருணைத் தடங் கடலாகிய முருகப்பெருமான், தீமையைச் செற்று நன்மையை வாழவைத்த திருநாள், கந்தசஷ்டித் திருநாளாகும். அப்பெருமானது திருத்தாள்களை 'உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்' எனவும் திருக்கைகளை 'செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை' எனவும் நக்கீரதேவர் கூறுவார்.

அடியாரெல்லாரும் ஆண்டவனிடம் வேண்டுவது அவனுடைய திருவடிகளையேயாகும். சிவஞான போதம் 'பொல்லார் இணை மலர் நல்லார் புனைவரே' என்று கூறியது. இறைவனுடைய தாளில் அடியார்களது தலைகள் 'தாடலை போல் அத்துவிதமாய்க் கூடலே முத்தி என்று ஞானநூல்கள் அறிவிக்கின்றன.

இறைவன் ஒருவன். உயிர்கள் பல. உயிர்களனைத்தும் இறைவனடியை அடைய வேண்டியவை; அடைந்துகொண்டேயிருக்கின்றன. அவையனைத்தையும் தாங்குதற்குரிய திண்மை அத் திருவடிகளுக்கு உண்டு. தஞ்சமென வந்தடைந்த அனைவரையும் தகுதிநோக்காது ஏற்றுக்கோள்ளுவான் அவன். பிழைசெய்தாலும் பீடுவழங்குகின்ற அவனை 'ஏதுபிழை செய்தாலும் ஏழையேனுக்கிரங்கித், தீதுபுரி

யாத தேய்வம்' என்று பெரியோர் ஏத்தினர்.

உறுநரைத் தாங்குகின்ற தண்ணளியையுடைய முருகப்பெருமான், செறுநரைத் தேய்க்கும் மறக்கருணையையும் உடையவனுயிருக்கின்ருன். செறுநர்த் தேய்த்தல் என்பதற்கு மாற்ருரை யழித்தல் என்பது பொருளன்று. அவ்வாறு பொருள் கூறினல், அது முருகப் பெருமான் செய்த செயலுக்கு முரணிநிற்கும். மாற்ருரது தீத்திறலே அழித்தல் என்று பொருள் கூறுவதே பொருந்தும்.

பெருமானுல் தோற்கடிக்கப் பெற்ற தாரகனும் சிங்கமுகனும் சூரபன்மனும் அழிந்தார்களில்லே. ஆனையூர்தியாய் ஐயனுரையும் சிங்கவூர்தியாய்த் துர்க்கையையும் தாங்கும் பெருவாழ்வை முறையே தாரகனும் சிங்கமுகனும் பெற்றனர். சேவலும் மயிலுமாய்ச் சூரபன்மன் முருகப்பெருமானதுகோடியாக-ஊர்தியாகப்போற்றப் பெறுகின்ருன். தீக்குணம் படைத்த அவுணர்களாயிருந்த இவர்களேச் சேகமேலாம் பரவும் செவ்விய பேறுபெறும்படி செய்த சேவ்வேளே மாற்ருரை அழித்தவனென்று எவ்வாறு சொல்லமுடியும்? அவர்களே வாழவைத்தவனேன்று சொல்லுவதே பொருந்துவதாகும்.

புண்ணுள்ள இடத்தைக்கீறி ஆற்றும் அறுவை மருத்துவரை நோயாளிக்கு ஊறு செய்கின்றவரென்று யாரும் சொல்லுவதில்லேயல்லவா? தீயவரது தீமையை ஒழித்து நல்லவராக அவரை ஆக்கும் திருமுருகப்பெருமானே, அச்செயலுக்குரிமையுள்ள கந்தசஷ்டித் திருநாளில் முறையாக வழிபட்டால், நமக்கு வருகின்ற எல்லாத் தீங்குகளும் நீங்கி நாம் இன்ப வாழ்வு வாழலாம்.

கோத்தமங்கலம்

அருள்நெறித் திருக்கூட்ட மூன்ருவதாண்டு நிறைவு விழா 11-11-55 மாலேயில் சிவாலய வழிபாடுமுடிந்து பாலகவிஇராமநாதன்செட்டியார் தலேமையில் நிகழ்ந்தது. திருக்கூட்டத் தலேவர் சி ராம மு லெ இலக்குமணன்செட்டியார் வரவேற்புரை கூறினுர்கள். வித்துவான் மாணிக்கம்பிள்ளே, பண்டித முத்துவேங்கடாசலமய்யர் ஆகிய இருவரும் சொற்பொழிவாற்ற அரு இராமநாதன் அவர்கள் நன்றிகூற வாழ்த்துடன் விழா நிறைவெய்தியது.

★டெலிவிஷனில் காட்டப்படும்★

புதுடில்லி அக் 28-

இந்தியாவின் பழம் பெருஞ் சிறப்புமிக்க கைநுட்ப வேலைப் பொருள்கள் இந்நாட்டில் முதன் முறையாக டெலிவிஷனில்காட்சி வழங்கப் போகின்றன.

அதற்குரிய ஏற்பாடு இங்கு இந்தியத் தொழிற் கண்காட்சியிலுள்ள அமெரிக்கப் பகுதியின் டெலிவிஷன் நிலையத்தில் நடந்தேறுகின்றது. இக் கண்காட்சி அக்டோபர் 29ல் தொடங்கும்.

தந்த வேலைப்பாடுகளும், மர வேலைப்பாடுகளும், பித்தளை வேலைப்பாடுகளும்; பாய்முடைதல், அரக்கு வளையல் செய்தல் மட்கலம் வனைதல் முதலியனவெல்லாம் டெலிவிஷன் காட்சியில் தோன்றும். இக் காட்சிக்கு ஏற்பாடு செய்திருப்போர் அகில இந்திய கைநுட்பவேலைக் கழகத்தாராவர்.

இந்தப் புதுடில்லி டெலிவிஷன் நிலையம் அக்டோபர் 29 முதல் ஒவ்வொருநாளும் மாலை 6-15 முதல் 10-15 வரை பல நிகழ்ச்சிகளை ஒளிபரப்பிக் காட்டும். இவற்றுள் கைநுட்ப வேலைப் பொருள்களைப்பற்றிய காட்சி நான்குமுறை பத்துப் பத்து நிமிஷநேரம் நாள்தோறும் நடக்கும்.

கைநுட்பவேலை டெலிவிஷன் காட்சி கண்ணைக் கவரும் வனப்பும் நுண்ணிய வேலைப்பாடும் அமைந்த பல்வேறு பொருள்களைக் காட்டுவதுமல்லாமல் அவற்றைச் செய்யும் தொழில்முறை நுட்பங்களையும் காட்டும். அந்தந்தத் தொழிலில் தேர்ச்சியுற்ற கைவினைஞரும் கலைஞரும் அகில இந்தியாவிலிருந்தும் இங்கு வருவர்; அவர்கள் வேலைசெய்யும் திறனை டெலிவிஷன் காமிராக்கள் எடுத்துக்காட்டும்.

டெலிவிஷன்நிலையம் 50 அடிக் குறுக்களவுள்ள வட்டவடிவமான ஒரு கட்டடம். அதனுள்ளிருந்து பரப்பப்படும் காட்சிகளைக் காண்பதற்கு அந் நிலையத்தைச் சுற்றியும் அமெரிக்கப் பொருட்காட்சிப் பகுதியின் பல்வேறு இடங்களிலும் டெலிவிஷன் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

அமெரிக்கப்பகுதியில்தனியே கட்டப்பட்ட இந்த டெலிவிஷன்

நிலயத்தில் கைநுட்ப வேலைபற்றிய நிகழ்ச்சிகளை யன்றி, இந்தியர் பலர் கலந்துகொள்ளும் நாடகங்கள், பேட்டிகள், உரையாடல்கள், நாட்டியங்கள், இசை விருந்துகள் முதலியவையும் நடக்கும். அமெரிக்காவில் டெலிவிஷனில் காட்டப்பட்டுத்திரைப் படமாகப்பிடித்த சிறந்தநிகழ்ச்சிகளும் காட்டப்படும்

ரேடியோ கார்ப்பரேஷன் ஆப் அமெரிக்கா என்னும் கம்பெனியின் பத்து என் ஜினியர்கள் இந்த டெலிவிஷன் நிலயத்தைக் கவனித்துக்கொள்கிறார்கள். அதனை அமைத்தவர்களும் அவர்களே.

தேவகோட்டை

தேவகோட்டை நவ 11-

தேவகோட்டை நகரசபைத் தலைவர் தேர்தல் கூட்டம்இன்று மாலை 4-40மணிக்கு ரெவினியூ வட்டார அதிகாரி திரு, செந்தில்நாயகம் தலைமையில் நடந்தது.

முதலில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். பின்பு தலைவர் தேர்தலுக்கு திரு தி சு பழ ப சித சுப்பிரமணியன்செட்டியார் (காங்) பெயரை திரு எம் வி இராமநாதன்செட்டியார்(காங்) முன்மொழிந்தார்- திரு சா மீனாட்சிசுந்தரம் (சுயே) வழி மொழிந்தார். வேறு எவருடைய பெயரும் அறிவிக்கப்படவில்லை. ஆகவே நகரசபை முன்னாள் தலைவரான திரு சுப்பிரமணியன் செட்டியார்(காங்)ஒருமனதாகப் புதிய தலைவராகச் சுயேச்சைகளின் ஆதரவுடன் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

புதிய தலைவரைப் பாராட்டி திரு. அருணாசலம் செட்டியார், திரு மீனாட்சிசுந்தரம், திரு பரஞ்ஜோதி ஆகியோர்பேசினர். புதிய தலைவருக்கு ஏராளமான மலர் மாலைகள் சூட்டப்பட்டன.

சந்தா நேயர்களுக்கு!

ஐயன்மீர்!

கடந்த புரட்டாசி வரையுள்ள தங்கள் சந்தாப்பாக்கிகளை அனுப்பித்தரும்படி 10-10-55ல் கார்டுகள் எழுதியிருந்தோம். அதன்படி பாக்கியுள்ள தொகையை அனுப்பித்தரும்படி மீண்டும் வேண்டுகிறோம்.

அன்புள்ள,
அமைச்சர்

(5ம்பக்கத் தொடர்ச்சி)
மறவாமல் இவளை அன்போடு பாதுகாத்தருளுக' என்று வேண்டி விருந்துண்ணுதற்கு அவனை அழைக்கிருள். அவளது இனிய வேண்டுகோளுக்கிசைந்த தலைவன் கூறும் கூற்றுயமைந்தது மேற்கண்ட செய்யுள்.

குறிஞ்சி நிலத்துக் கருப்பொருள்களில் தினைமாவுந் தேனும் இனிமையுடையன. எத்துணையினிய பொருளாயினும் அன்பில்லாதார் கைவழியாக வந்தால் அது, நஞ்சேயாகும். 'என்பெல்லாம் பற்றி யெரிகின்றதையகோ, அன்பில்லா ளிட்டவமுது' என்பது ஒரு பழம் பாடல். இயற்கையிலேயே இனிமைவாய்ந்த பொருள்கள் அன்புடையார் கைவழியாகக் கிடைக்குமானல், பொன் மலர் புதுமணத்துடன் கிடைத்தாற் பெறும் மகிழ்வை அளிக்குமல்லவா?

குறிஞ்சி நிலத்துக் கோமகளாகிய வள்ளிநாச்சியார் உள்ளன்போடு கொடுத்த தினைமாவையுந் தேனையும் உண்டு சுவைகண்டதனுலேயே முருகப் பெருமான் குறிஞ்சிநிலத்திற் குடிகொண்டு விட்டானென்று தலைவன் கருதுகின்றுன். மேன்மைபெறத்,தெள்ளித் தினைமாவுந் தேனும் பரிந்தளித்தவள்ளிக்கொடியை மணந்தோனே என்பது கந்தர் கலிவெண்பா. வானவர்க்கு அமுதங்கொடுத்தவன் திருமகள் கொழுநனுன திருமால். எனக்கு அமுதனைய உணவுதரும் நீங்கள் திருமகளேயனையவர்களென்று கூறித் தனது பேற்றுக்குமகிழும் தலைவனின் களிப்புக்கு அளவு காணமுடியுமா?

கீழச்சிவற்பட்டி

இளவரசன் நாநடராசன் அவர்கள் இயற்றிய வணிகமண்டலசதக அரங்கேற்றுவிழா 13-11-55 மாலையில், நகரச்சிவாலய முன்மண்டபத்தில் பாலகவி இராமநாதன் செட்டியார் தலைமையில் நடைபெற்றது. சீனிவாசன் பி ஏ வரவேற்புரைகூறினுர். நூலரங்கேற்றம் நிகழ்ந்ததும் பண்டித முத்துவேங்கடாசலமய்யர், சுப சீனிவாசன் ஆகியோர் நூலைப்பாராட்டிப் பேசினர். திருமதுரைத் தமிழ்ச் சங்கச்சார்பில் நூலாசிரியருக்குக் கொடுக்கப்பெற்ற செந்தமிழ்ச் செல்வத் திருமணி என்ற சிறப்புப்பெயர் பொறித்த பட்டயம் வழங்கப் பெற்றது. இசைமணி எஸ் வி எஸ் அழகப்பா கடவுள் வணக்கமும் வாழ்த்தும்பாடினுர்-

படித்தோம்!

சிவாஜிஆண்டுமலர்: திருச்சியிலிருந்து வெளிவரும் சிவாஜி வாரஇதழின்21வதுஆண்டுமலர் பேரறிஞர்பலரது கட்டுரைகள், கதைகள், கவிதைகளுடன் தீபாவளிநன்னாளில் வெளியிடப்பெற்றுள்ளது.விலை ரூபாய் ஒன்று.

வடநாட்டு யாத்திரை:-ஆசிரியர் திருமுருக கிருபானந்தவாரியார். விலை ரூ 1-4-0 இந்நூல் சயபுரட்டா. சி 25ல் தொடங்கி மார்கழி 25ல் நிறைவெய்திய நூலாசிரியரின் வடநாட்டுயாத்திரைக்குறிப்புகளை உணர்த்துகின்றதாயினும் நூலைப்படிப்பவரது தூலஉடல் இருந்த இடத்திலேயே இருக்க நுண்ணுடம்பாகிய மனம் ஆசிரியரைப்போல வடநாட்டு யாத்திரையைச் செய்துமுடித்துவிடுகின்ற உதவியைச் செய்வதாயிருக்கின்றது. திருவருட் குறிப்புடையஒவ்வொருவருக்கும் இன்றியமையாது வேண்டப்பெறும் நூல்களில் இதுவும் ஒன்று என்பது நமது கருத்து.

வணிகமண்டல சதகம்: கீழச்சிவப்பட்டி செட்டிமார் கழக வெளியீடு. செந்தமிழ்ச் செல்வத் திருமணி நா நடராசன் இயற்றியது. விலைஎட்டணு. தனவணிக மண்டலத்தின் சிறப்பு, இங்குத் தோன்றிய சான்றேர்களைப் பற்றிய குறிப்புகளைச் செம்பாகமான செய்யுட்களில் வெளியிட்டு மண்டல சதக ஆசிரியர்களில் ஒருவராக இவரும் இடம்பெற்றுக் கொண்டதும கிழ்ச்சிக்குரியசெய்தியாகும்.

சிவபதமடைந்தார்கள்

பலவான்குடி திரு, ராம கும சு குமரப்பசெட்டியாரின் அரும்பெறல் அன்னையாரும், கோனுபட்டில் கோயில் செட்டியாரென்ற சிறப்புப் பெயருடன் வாழ்ந்து புகழ்நாட்டிய சுப்பிரமணியன் செட்டியார் மகளாரும் சிவா பழநியப்ப செட்டியார் மகாதேவ முருகப்பசெட்டியார் ஆகியோரது மூத்த சகோதரியாரும் ஆகிய திருமதி வள்ளியம்மைஆச்சிஅவர்கள் 10-11-55 மாலை 4-30மணிக்குத் தமது 90-வது வயதில் இறைவனடி அடைந்தார்கள். அவர்களதுநல்லுயிர் சிவானந்தப் பெருவாழ்வு பெற்று இன்புறத் திருவருளை வேண்டுகிறேம்.

தொடர்கதை:

வாழ்க்கைப் பாதையில்...?

அழ. கருப்பையா

பின்பு தன்னைச் சமாளித்துக் கொண்டு, 'அன்றே என்முடிவை வெளியிட்டுவிட்டேன் கல்யாணி. நீ வாழ நான் வழி சொல்கிறேன். உனக்குக் கொஞ்சம் பணம் தருகிறேன். பெற்றுக் கொண்டு செல். இட்லிவியாபாரம் செய்து பிழைத்துக் கொள். இனி இப்பக்கம் எட்டிப் பார்க்காதே: போ. இப்பொழுது இவ்வளவு பேசும் நீ அன்று என்னைக்கண்டு சாகஸம் செய்தாயே, அப்பொழுது நினைத்திருக்க வேண்டும்' என்று கூறிப் பணத்தை நீட்டினன் மனேகர். வாங்கமறுத்தாள் கல்யாணி.

'பணத்திற்காகவா என் அன்பு, உடல் அனைத்தும், என் என் வாழ்வையே உங்களிடம் தந்தேன். மாம்பழத்தின் சதையை உண்டுவிட்டுக் கொட்டையை வீசுவதுபோல என்னிடம் இன்பத்தை உறிஞ்சிவிட்டு உதறியெறிகிறீர்கள். காமத் தீயில் எரியும் உங்கள் உள்ளம்...'

'எரியும் நெருப்பினுள் உருகும் நெய்தான். போ. என் முன் நில்லாதே. இனிமேலும் இங்கு நின்றுகொண்டு வீண்கதை பேசாதே. கல்லூரி நண்பர்களும் மங்கையும் வரும் நேரமாகிவிட்டது' என்றான் மனேகரன்.

'அத்தான்! என்னைக் கெடுத்தீர்கள், தவிக்கவிட்டீர்கள். இப்பொழுது மங்கையோடு மகிழ்ச்சிஊஞ்சலில் ஆடுகிறீர்கள். வேறொருத்தி அகப்பட்டால் மங்கையின் கதியும் என் கதிதானு? மங்கையையாவது மணந்துகொண்டு மகிழ்வோடு வாழுங்கள்' என்றாள் கல்யாணி.

'நாயே! போ வெளியே'

'அன்று அன்பே என்றீர்கள். இன்று நாயே என்கிறீர்கள். மனிதனுடைய புத்தி நேரத்திற்கொருமாதிரி ஏன் மாறுகிறதோ தெரியவில்லை'

'கோபத்தைக் கிளப்பாதே கல்யாணி. நேரத்தைக் கடத்தி இங்கு நின்றுகொண்டேயிருந்தால் கொலையும் புரிவேன்'

'கொல்லுங்கள் என்னை. உங்களால் வாழ்விழந்தேன். இனி உயிரையும் உங்கள் கையிலேயே தருகிறேன். கொல்லுங்கள் என்னை. உங்கள்மேல் அன்பு கொண்ட குற்றத்திற்காகக் கொல்லுங்கள் என்னை. ஆருயிரே என்று அணைத்தகைகள் அழிக்கட்டும் என்னை. உங்களால், வாழ்க்கையிலே காதல் மனிதனை மேன்மைப்படுத்தும் என்ற வார்த்தைகள் வாழ்க்கையிலே காதல் மனிதனை இழிவு படுத்தும் என்று மாறட்டும்...' என்றாள். கோபம் மிகுதியான மனேகர் மேஜையின்மீதுகிடந்த கத்தியை எடுத்து வீசினான். மனேகரைக் காண்பதற்காக மாடிப்படிகளைக்கடந்து வந்துகொண்டிருந்த மங்கையின்மீது பாய்ந்தது அவன் வீசிய கத்தி.

மார்பிலே இரத்தம் பீறிட்டெழ மங்கை கீழே விழுந்தாள். சிறிதுநேரம் மனேகரனும், கல்யாணியும் திகைத்து நின்றனர். பின்பு மனேகரன் ஒருமுடிவுக்கு வந்தவனாய்ப் போலீஸ் ஸ்டேஷனுக்கும் மருத்துவ நிலையத்திற்கும் 'போன்' செய்தான். கல்யாணி மங்கையைத் தன் மடிமீதுகிடத்தி விசிறிக்கொண்டிருந்தாள்.

22

கோர்ட்டு கூடியது. வழக்கின் முடிவைக்காண மக்கள் கூட்டம் ஹைகோர்ட்டைச் சூழ்ந்துநின்றது. போலீஸ் லாரியிலிருந்து இறங்கினாள் கல்யாணி. அவளை அழைத்துக்கொண்டு சென்று கோர்ட் ஹாலிலுள்ள கைதிக் கூண்டில் நிறுத்தினார்கள்.

காதலித்துக் கைவிட்டவனைக் காணவந்தேன். முடிவு தெரிய வேண்டும், வாழ்க்கைத்துணைவியாக ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் வேலைக்காரியாகவாவது ஏற்றுக்கொள்ளட்டும் என்ற எண்ணத்தோடு வந்தேன். கைவிட்ட காதலன் கத்தியை வீசினான். காதகி நான் செத்திருக்க வேண்டும், ஒன்றுமறியாத உத்தமி மங்கை மீது பாய்ந்தது கத்தி. வாழ்க்கைத் துணையாக ஏற்றுக்கொள்கிறேன் என்று சத்தியம் செய்தவன் வழக்கு மன்றத்திலே கைதிக்கூண்டில் நிறுத்திவிட்டான். உண்மை என்றும் சாகாது. உண்மையைப் பேசுவது, உண்மையைச் செய்வது உயர்ந்த லக்ஷியங்களுக்கு வழிகாட்டும். மங்கையும் மனேகரனும் வாழட்டும். நான் அவர்களுக்கு இடையூறாக நிற்கவில்லை.

தெரிந்து கொள்ளுங்கள்

தனது சுகாதார அபிவிருத்தித் திட்டத்தின் பகுதியாக, சமுதாயநலத் திட்ட நிர்வாகம் சமுதாய அபிவிருத்தித் திட்டப் பிரதேசங்களில் ஏற்கெனவே ஆரம்ப சுகாதார நிலையங்கள் 375ஐ ஏற்படுத்தியிருக்கிறது.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்திய ரயில்வேக்களுக்காக ஒதுக்கிவைக்கப்பட்ட ரூ. 400 கோடியில் 1955 ஜூன் 30ந் தேதிவரை ரூ 306,17 செலவு செய்யப்பட்டிருப்பதகாக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

டேரா டூனில் உள்ள இந்திய வனத்துறை ஆராய்ச்சிக்கழகம் வெட்டு மரஉபயோகத்தில் புதியதொரு தொழில்நுட்ப முறை பற்றி ஆராய்ச்சி நடத்துவதற்காக வெட்டுமர எஞ்சினீயரிங் பிரிவொன்றை ஏற்படுத்தியிருக்கிறது.

மெட்ரிக் நிறுவை - அளவை முறைபற்றிப்பொதுமக்களுக்குப் பழக்கம் ஏற்படுத்துவதற்காக இப்பொழுது உபயோகத்தில் இருந்து வரும் தராசுகளையும் இதர அளவை-நிறுவைசாதனங்களையும், முக்கியமாக ரயில்வேக்களிலும் தபால்-தந்தி இலாகாவிலும் உபயோகத்தில் இருந்து வருபவற்றை, மீட்டர் கணக்கில் குறிப்பிட வேண்டுமென்று, ஸ்ரீ நித்யானந்த கனுங்கோவைத்தலைவராகக் கொண்ட மெட்ரிக்-அளவை நிரந்தரக் கமிட்டி முடிவு செய்திருக்கிறது.

சாலைகளில் இருக்கும் மைல் கல்கள், பர்லாங் கல்கள் முதலியவற்றைக் கூடிய சீக்கிரத்தில் மீட்டர் அளவுப்படி மாற்றியமைக்க வேண்டுமென்றும், இடைக்கால ஏற்பாடாக ஒரு பர்லாங்கை இரண்டு ஹெக்டா மீட்டர்கள் என்று குறிப்பிடலாம் என்றும், ஐந்தாவது கல் ஒவ்வொன்றையும் கிலோமீட்டர் எனக் குறிப்பிடலாமென்றும், இவ்வாறு குறிப்பிடுவதால் ஏற்படக்கூடிய அளவு வித்தியாசத்தை ஒரு வசதியானஸ்தானத்தில் சரிக்கட்டி அமைத்து விடலாம் என்றும், மெட்ரிக்அளவை முறை நிரந்தரக்கமிட்டி முடிவு செய்திருக்கிறது.

ஆசிரியர் பாலகவி இராமநாதன் செட்டியாரால் தேவகோட்டை செட்டிநாடுஅச்சகத்தில் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.

உ

செட்டிநாடு

வார இதழ்

மலர்-25 இதழ்-6
மன்மத-கார்த்திகை-8
24-11-55
வியாழன் வெளியீடு
தேவகோட்டை
ஆண்டுச்சந்தா ரூ 4
வெளிநாடு ரூ 7

ஆசிரியர்:- பாலகவி இராமநாதன்செட்டியார்



குறிஞ்சி

களவில் வந்தொழுகுந் தலைவன் ஒருநாள் ஒருபுறமாய் வருவதை யறிந்த தோழி, அவன் கேட்டு விரைந்து-வரைந்து கொள்ளுமாற்றால் அழுங்கிக் கூறியது.

கருங்கால் வேங்கைச் செவ்வீ வாங்குசினை, வடுக்கொளப் பிணித்த விடுமுரி முரற்சிக், கைபுனை சிறுநெறி வாங்கிப் பையென, விசும்பாடாய்மயில் கடுப்ப யானின்று, பசுங்காழல்குல் பற்றுவன னூக்கிச், செலவுடன் விடுகோ தோழி பலவுடன், வாழை யோங்கிய வழையமை சிலம்பிற், றுஞ்சுபிடி மருங்கின் மஞ்சுபடக் காணாது, பெருங்களிறு பிளிறுஞ் சோலையவர், சேணடுங் குன்றங் காணிய நீயே 222 :-கபிலர்

தோழீ! பல வாழைகளும் உயர்ந்த சுரபுன்னைகளும் உள்ள மலையிலே துயிலுகின்ற பிடியானையின் பக்கத்தில் மேகம் படிய அதனைக் காணாது பெரிய களிற்றியானை பிளிறுகின்ற சோலையையுடைய அவரது நெடிய உயர்ந்த மலையை நீ பார்த்தாவது கவலை தணியும்படி கரிய அடிப்புறத்தையுடைய வேங்கையினது சிவந்த மலர்களையுடைய வளைந்த கிளையில் தழும்புபடும்படி வளைய விட்ட கயிற்றினாலாகிய கைவன்மையால் செய்த முடக்கத்தையுடைய சிறிய ஊசலையிழுத்துப் பைய உன்னை ஏற்றிவைத்து யான் இப்பொழுது உன் அல்குலின் மேலே கிடந்த பைம்பொன்னாலாகிய வடத்தைப்பற்றி விசும்பிலே பறக்கின்ற அழகிய மயிலைப்போல உன்னை ஆட்டிச்சென்று மீளும்படி விடுவேனோ?

பசுந்தமிழ் மலர்

பாலகவி

கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் றன்னைப்
பாலனென் றிருந்தே னந்நாட் பரிசிவை யுணர்ந்தி லேன்யான்
மாலயன் றனக்கு மேனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்தியிம் மூர்த்தி யன்றே

:-கந்தபுராணம் 7720

உரை:- 'கோலம் - பேரழகு வாய்ந்த, மாமஞ்ஞை தன்னில்- பெரிய மயிலின்மேலே, குலவிய- எழுந்தருளியிருக்கின்ற, குமரன் தன்னை-இளைய வடிவங்கொண்ட முருகப்பெருமானை, பாலனென்று - ஏதுமறியாச் சிறுவனென்று, அந்நாள் - முற்பொழுதிலே, இருந்தேன்-அறியாதிருந்தேன், பரிசு இவை-அவனது அளவிட முடியாத பெருந்தன்மைகளை, உணர்ந்திலேன் யான்-நான் இதுகாறும் சிந்தித்துத் தெளிந்தேனில்லை, மால் அயன் தனக்கும் - திருமாலுக்கும் பிரமனுக்கும், ஏனை வானவர் தமக்கும்-மற்றைத் தேவர்களுக்கும், மூலகாரணமாய்-அடிப்படையான காரணப்பொருளாய், நின்ற-என்றும்நிலைபெற்றுநின்ற, மூர்த்தி-அநாதியாகியபரம்பொருள்,இம்மூர்த்தி அன்றே-இந்தப் பெருமானல்லவா' என்பதாகும்.

தமிழகத்துச் சைவப் பேராசிரியர்களுள் சேக்கிழார் பெருமானும், கச்சியப்ப சிவாசாரியரும், பரஞ்சோதி முனிவரும் தலைசிறந்தவர்கள். திருத்தொண்டர்களை - சிவபெருமானை - முருகப்பெருமானை உள்ளவாறு அறிவிக்கும் ஒப்பற்ற பெருநூல்களை ஆக்கித் தந்து நமக்கு உய்யும் வழியை உதவிய இவர்களுக்கு நாம் எவ்வாற்றானும் கைம்மாறு தந்து கடனைத்தீர்த்துக்கொள்ள முடியாது. தமக்கெனத்தோன்றி வாழாது நமக்கெனத் தோன்றி வாழ்ந்த அருளாளர்களது திருவாக்குகளை முறையாகப் படித்தறிந்து உண்மைநெறியில் ஒழுகி ஊதியம் பெறுவதற்குக் கூட இக்காலச் சூழ்நிலை தடையாயிருக்கின்றதென்றால், இந்நாளில் வாழ்கின்ற நமது தவக்குறையின் நிறையை நினைந்து வருந்தாமலிருக்க முடியுமா?

சைவர்களது மூன்று கண் களாகிய திருத்தொண்டர் புராணம் - திருவிளையாடற்புராணம்- கந்தபுராணம் ஆகியவற்றுள் மூன்றாவதாகிய கந்தபுராணம் ஞானக்கண் என்று பேசப்பெறுகின்ற நெற்றிக்கண் ஆகும். ஞானம் ஒளிவடிவமானது. அஞ்ஞானம் இருள் வடிவமானது. ஒளிவடிவமுடைய நெருப்பு என்று நெற்றிக்கண் குறிக்கப் பெறும்.

இறைவனது நெற்றித் தனிக் கண்ணெருப்பிலிருந்து வெளிப் பட்ட ஆறு தீப்பொறிகளும் ஆறுமுகக் கடவுளாயின. நெற்றிக்கண்ணிலிருந்து வெளிப் பட்ட நிமலனை உணர்த்தும் புராணத்தைநெற்றிக்கண்என்று கூறுவது பொருத்தமேயல்லவா? எந்தப்பொருளையும் தூய்மைப் படுத்துவது நெருப்பு. 'சுடச்சுடரும் பொன்' என்பார் திருவள்ளுவர். அவுணத் தன்மையாகிய அழுக்கை யகற்றிச் சூரபன்மனை தியரை வாழவைத்தது, சுப்பிரமணியப் பெருமானின் நெருப் புத்தன்மை என்பதும் நினைவு கூரத்தக்கதாகும்.

ஈசானமாகிய மேல் முகமும் தற்புருடம், அகோரம், வாம தேவம், சத்தியோசாதம் ஆகிய கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்குத் திசைமுகங்களும் அதோமுகமாகிய கீழ்முகமும் ஆக ஆறுமுகங்களுடன் ஆண்டவன் வீற்றிருந்து, ஆறு நெற்றிக்கண்களிலுமிருந்து சிதறிய தீப்பொறிகள், வாயுவால் - அக்கினியால்-கங்கையால் சரவணப் பொய்கையில் சேர்க்கப்பெற்று ஆறுகுழந்தைகளாக - உமையம்மையாரால் அவ்வாறு குழந்தைகளும் ஒன்ருக்கப்பெற்றுக் கந்தனென்று பேர்கொண்டு விளங்கியதென்பது வரலாறு- 'அந்தமில்லதோர் மூவிரு வடிவுமொன்ருகிக், கந்தனென்று பேர் பெற்றனன் கவுரிதன் குமரன்'என்பது கந்தபுராணம்.

ஆறுமுகப் பெருமானின் வரலாறு கூறுகின்ற கந்தபுராணம் ஆறு காண்டங்களையுடையது. அப்பெருமான் என்றும் மாரு இளமையுடன் அழகும் உடையவன்.'மணங்கமழ்தெய்வத்துஇள நலம்' என்றும் 'தெய்வஞ் சான்ற திறல்விளங்கு உரு' என்றும் அவனது இளமையழகுகளைத் திருமுருகாற்றுப்படை தெரிவிக்கின்றது.

நம்போன்ற உயிர்களுக்குள்ள இளமையும் அழகும் விரைவில்

அழிந்துவிடுவன. 'நீரிற் குமிழி இளமை' என்பார் குமரகுருபர முனிவர். இறைவனது இளமையும் அழகும் என்றும் அழியா திருப்பன. என்பதை 'என்றும் இளையாய் அழகியாய்' என்ற சொற்றொடர் அறிவிக்கின்றது.

அழியாத அழகும் நீங்காத இளமையும் அவனுக்கு இருப்பதனாலேயே அவனை முருகன் என்று ஆன்றோர் அழைத்தனர். பொறிகள் ஐந்தனுள் கண் ஒன்று மட்டும், சென்று பற்றும் இயல்புடையது. மற்றைய நான்கும் நின்று பற்றுபவை. அவற்றுள் மூக்கால் நுகரத்தக்க மணம், அதனையுடையபொருள்சேய்மையிலிருப்பினும் அதிலிருந்து வெளிப்பட்டு வந்து நுகர்பவரது பொறிக்குப் புலனாகி இன்புறுத்துவது. அதுபோல முருகப்பெருமானது கருணையும் அவனிடமிருந்து வெளிப்பட்டுவந்து அடியவர்களை ஆட்கொள்ளும் இயல்பினதென்பது அறியத்தக்கதாகும். 'இன்பம் விளைய அன்பின் அணையும் என்றும் இளைய பெருமாளே' என்பார் அருணகிரிநாதர்.

ஆணவ வடிவினனாகிய சூரபன்மன் ஆண்டவனது ஆற்றலை அறியாதவனாய்ப் போர் தொடுத்தான். முன்னை நல்வினைப்பயத்தால் போர்க்களத்தில் முருகப்பெருமானது விசுவரூபக் காட்சி அவனுக்குக் கிடைத்தது. பாசிக் குட்டையில் கல்லையெறிந்தால் அக்கல் படும்வேளையில் பாசி விலகிப் பின்னர் மூடிக்கொள்வது போல, உயிரறிவில் ஆண்டவன் உணர்ச்சி உண்டாகும்பொழுது மெய்ஞ்ஞானம் உதித்து அவ்வுணர்ச்சி மாறும்பொழுது அஞ்ஞானம் தலைப்படும்.

முருகப்பெருமானது பேருருவக்காட்சியில் ஞானம் பெற்ற சூரன், அப்பெருமானது சிறப்பையுணர்ந்து கூறுகின்ற மொழிகளில் சிலவற்றை ஆசிரியர் இப்பாடலில் அறிவுறுத்தியுள்ளார். இயற்கையிலேயே அழகு வாய்ந்ததாகிய மயில், அழியா அழகுடைய ஆண்டவனைச் சார்ந்து பின்னும் பேரழகுடையதாக ஆயிற்றென்பதனைக் 'கோலமா மஞ்ஞை' என்ற சொற்றொடர் குறிக்கின்றது.

'குமரனைப் பாலனென்று அந்நாளிற் கருதினேன்' என்பதில் அவ்விரு பருவங்களுக்கும்உள்ள வேறுபாட்டைக்கூட அறியாதவனாயினேன் என்னும் பொருள் தோன்றி அறியாமையின் உச்சியில் சூரன் இருந்தானென்பதை அறிவிக்கின்றது.

படைத்தலும் காத்தலும் அழித்தலுமாகிய முத்தொழில்களையும் செய்கின்ற நான்முகனுதியோரும் மற்றைத் தேவரும் ஆண்டவனுணைப்படி தொழில்களைச் செய்பவர்கள். அவர்களதும் அவர்கள்போன்ற மற்றைய உயிர்களதுமாகியஎல்லாச் செயல்களுக்கும் இறைவனே காரணமாயிருக்கின்றுன். இதனுலேயே 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்ற பழமொழி வழங்குகின்றது.

காசிபமுனிவரின் பிள்ளையாகப்பிறந்து, வேத வேதாங்கங்களையெல்லாம் ஓதியுணர்ந்து, செயற்கரிய பெருந்தவத்தைச் செய்து சிவபெருமானிடத்துப் பெறற்கரிய பெருவரங்களைச் சூரபன்மன் பெற்று வாழ்ந்தானுயினும், இறைவனது முழு முதற்றன்மையையும் ஆற்றலையும் அறிகின்ற தகுதி அவனுக்கு இல்லாதுபோயிற்று. ஆண்டவனது அருளில்லாத பொழுதுஅவனைப் பற்றி அறியும் அறிவும், அதனுற் பெறத்தக்க பேறும் கிடைக்காது போகும் என்பது ஆன்றேர் கண்டறிந்த உண்மை. காட்டுங் திருவருளே கண்ணுகக் கண்டுபா வீட்டின்ப மெய்ப் 'பொருளை 'மேவுநாளேர்' என்பது தாயுமான சுவாமிகள் திருவாக்கு.

பசு பாச ஞானங்கள் இறைவனை அறிவதற்கு உதவிசெய்ய மாட்டா என்பதும், பதியறிவொன்றே அதற்குக் கருவியாய் அமைவது என்பதுமாகிய சைவ சித்தாந்த உண்மையைச் சூரபன்மன் வாக்கில் 'பாலனென்றிருந்தேன்' உணர்ந்திலேன், இம் மூர்த்தியன்றே' என்ற முடிபுகளைவைத்து ஆசிரியர் நிலை நாட்டியுள்ளார்.

இநதப் பேருண்மையை மாற்றுனுகிய சூரபன்மன் உணர்ந்து, நமக்கும் அறிவிக்கின்றதாக ஆசிரியர் கூறும் சதுரப்பாட்டுக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றேம். ஞானக்கருவூலமாகிய கந்தபுராணத்தில் இது போன்ற அரிய திருப்பாடல்கள் பல விளங்கிக்கொண்டிருக்கின்றன.

காரைக்குடி

நகரசபைத் தலைவராக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் திரு அரு அருணசலம் அவர்களுக்கு 17-11-55-ல் சென்னை மராமத்துத்துறை அமைச்சர் திரு சண்முகராசேசுவரசேதுபதி தலைமையில் ஒரு பாராட்டுக்கூட்டம் நடைபெற்றது.

சைவாலயங்களில் சம்ஸ்கிருத அர்ச்சனையே வேண்டும்.

சித்தாந்த பண்டித பூஷணம் ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை

(முன்தொடர்ச்சி)

'தத்த மாற்றங்க ணிறுவிய சமயிகள் பலருங்-கத்து புன்சொலை வினவினரவன்செயல் காணுர்-சுத்த வாதுள முதலிய தந்திரத் தொகுதி - யுய்த்துணர்ந்திடு நீரரே யொருசிறிதுணர்வார்' என்றது கந்தபுராணமும். வால்டேர் கருத்து அதற்கு மாறு? ஆயின் அது கண்டனத்துக்கேயுரியது. ஆனல் நவீனர் அதைத் தமக்குச் சாதகமாக எடுத்துக்காட்டினர். இவ்வுலகையே துன்பஞ்சிறிதுங் கலவாத இன்பநிலையமாக்கவேண்டும்; மக்கள் அதனை ஆரத்துய்க்கவேண்டும்; அந்நாள்விரைவில் வருமாறு உழைப்பதே மக்களின் முன்னேற்றத்துக்கு உழைப்ப தாகும்என்பது அவருக்கு ஆசையான பேச்சு. 'பக்தியின் மூலம் - அன்பின்மூலம் - தொண்டின்மூலம் ஏற்றத் தாழ்வற்ற ஏழ்மை இல்லாத-துன்பமே அணுகாத ஒரு சமுதாயத்தை காண்பது நமது கடமையாகும். அந்த லட்சிய உலகைக் காண்கின்றவரை ஓயாது - அயராது உழைத்தல் வேண்டும். துன்பம் இருக்கும்வரை-வறுமை சூழ்ந்துள்ளபோது பட்டினி பாதிக்கும்பொழுது கடவுளை மறுத்துப் பேசுகின்ற சூழ்நிலை தான் வரும். ஆகையால் நாம் அருள்நெறியைப் பரப்பும் முன் அவர்களின் அவதியைப்போக்குதல் வேண்டும். நம்மைச் சுற்றியுள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்வேண்டும். உண்ண உணவும் உடுத்த உடையும் அனைவருக்கும் கிடைக்கும்படி செய்தல் வேண்டும். அது தான் நிர்மாணப் பணியாகும்' (30-8-55 தினமணி)என்ற அவரது பேச்சுக்காண்க. வேதோக்தமான ஈசுரநிச்சயம் அந்தலக்ஷியவுலகைக் கனவென்று சொல்லும். ஆகலின் அவ்வீசுரனை ஒதுக்கிவிட்டு, இயற்கையிலே தான் காணமுடியுமென வால்டேராற் கூறப்பட்ட கடவுளைக் கொண்டாரவர். அக்கடவுளை வால்டேராவது கண்டாரா? பிறர் கண்டனராயின் அவருள் இரண்டொருவர்பெயரையாவது சொன்னரா? நவீனரும் எடுத்துக்காட்டினரிலர். அப்படியொரு கடவு ளிருந்தாலன்றோ

அவரைக் கண்டவரு மிருப்பர். அவர்பெயரும் வெளிவரும். நவீனர் அக்கடவுளையே கடவுளெனக்கொண்டிருப்பதால் உண்மையான ஈசுரனுக்கு அவருள்ளத்தில் இடமில்லாமற் போயிற்று. இனிப் பக்தி யென்பதற்கு அவர் தரும் விளக்கம் யாது? 'பக்தி என்பது கடவுளுக்கு வழிபாடு செய்வதல்ல; பிரார்த்தனை செய்வதல்ல, ஏழைகளைக் காப்பாற்றுவதுதான் பக்தி. இது தான் தமிழ்நாட்டின் மதம்' (21-7-55 தமிழ்நாடு) என்கிறார் அவர். அதிலுள்ள இரண்டு 'தான்' களும் அவ்விளக்கத்தை வலியுறுத்துகின்றன. ஈசுரனோடு ஈசுர பக்தியும் அவருக்குப் போயிற்றென்பதை அவ்வாக்கியத்தா லறிக. ஏழைகளைக்காப்பாற்றும் விஷயம் பின்னர் ஆராயப்படும். இறுதியாக மோக்ஷத்தைப்பற்றி அவர் சொல்வதென்ன? 'மோட்சத்தைப்பற்றி இப்போது நாம் கவலைப்பட வேண்டியதில்லை. மோட்சமும் பக்தியும் தானாகவே வரும்' (2–6-55 தமிழ்நாடு) என்கிறார் அவர். அறியாமையிலிருந்து விடுபடுவதே மோக்ஷம். அந்த மோக்ஷங் கிடைக்கவில்லையே யென்ற கவலை வேண்டாமா? என்ன அநியாயம்! அறியாமையிற் கிடந்து உழல வேண்டும் போலும். அதற்கேற்ற காலந் தானே இது? மோக்ஷம் பற்றிய கவலை இப்போது வேண்டாமென்றால் பின்னை எப்போது வேண்டும்? மோக்ஷமும் பக்தியும் தாமாக வருமென்றாரவர். அங்ஙனமாயின் அவை அவருக்கும் எனக்கும் ஏன் வரவில்லை? உள்ளம் பண்படவில்லை யென்னலாம். அதனைப் பண்படுத்துவது எமது முயற்சி. பண்பட்டபின் அவை வந்தால் எமது முயற்சியால் அவை வந்தன என்றே சொல்லப்படும். அன்றியும் 'தமிழன் மோட்சத்திற்குச் செல்வதையே விரும்பாதவன். தமிழன் மீண்டும் மீண்டும் மானிலத்திலே பிறந்து சேவை செய்ய விரும்புகிறவன். தமிழனுடைய மதத்தின் வழியே வேறு. அதனுடைய நெறி அருள்நெறி...... வாழ்வுநெறி...' (21-7-55 தமிழ்நாடு) என்கிறார் அவர். அதிலுள்ள 'செல்வதையே' 'வழியே' என்பவற்றின் ஏகாரத்தைக் கவனிக்க. விரும்பப்படாத பொருள் மோக்ஷமே யாகுக; அது தானாக வந்தாலும் உதைத்துத்தள்ளப்படும்- பக்தியும் அப்படித்தான். அத்தகைய சந்தர்ப்பம் நோக்கித் தான் 'வலிய வந்தவள் கிழவி' என்னும் பழமொழியும் உண்டாயிற்று.

(தொடரும்)

உ
சிவமயம்
பாலருவாயர் துணை



அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

செட்டிநாடு

மன்மத கார்த்திகை 8

திருக் கார்த்திகை

சிவபரத்துவத்தை நினைவூட்டும் திருநட்சத்திரங்களுள்ஒன்று, திருக்கார்த்திகை. இருபத்தேழு நடசத்திரங்களுள் மூன்றாவதாக அது எண்ணப்பெற்று, ஒவ்வொருநட்சத்திரச் சுற்று வட்டத்திலும் ஒவ்வொரு முறை வந்துகொண்டிருக்கிறதென்றாலும், கார்த்திகைமாதத்தில்வரும் கார்த்திகை நட்சத்திரமொன்றே திருக்கார்த்திகை என்று அடைமொழி கூட்டி அழைக்கப்பெறுகின்றது.

திருமாலும் பிரமனுமாகிய இருவரையும் கருவிகளாக வைத்துத் தனது முதற்பெருந் தன்மையைத் திருக்கார்த்திகை நன்னாளிலேயே நிலைநாட்டிக்காட்டினான் ஆண்டவன். முக்கட்பெருமானது நெற்றிக்கண் நெருப்பிலிருந்து தோன்றிய ஆறுகுழந்தைகளும் கார்த்திகை மாதரது முலைப்பால்குடித்து மகிழ்ந்ததாகக் கந்தபுராணம் கூறுகின்றது. அதனால் முருகப்பெருமானுக்கு உமாசுதன், காங்கேயன் என்ற பெயர்களோடு கார்த்திகை சிறுவன் என்ற பெயரும் வழங்கப் பெறுகின்றது.

சிவபெருமானது திருவருளால் நிகழுகின்ற நிகழ்ச்சிகளின் வகைகளை அளவிட்டுச் சொல்லவோ அறுதியிட்டுச்சொல்லவோ முடியாது. உலகம் உண்மையை அறிந்துகொள்ள வேண்டுமென்று

கொண்ட பெருங்கருணையால் அவன் புரியும் திருவிளையாடல்கள் பலவற்றுள் திருவண்ணுமலையில் திருமாலும் பிரமனுங் காணப், பாத மலர் பாதாளம் ஏழினுங் கீழ் சோற் கழிவான இடத்திலும், போதார் புனைமுடி எல்லாப் பொருளும் முடிவான மேலிடத்திலும் செல்லச் செந்தீப் பிழம்பாக நின்றது, சிறப்புடையதாகும்.

'அண்ணு மலை' என்பது எட்டாத மலை என்னும் பொருளையுடையது. இதனை 'அருணகிரி என்றும் கூறுவர். அருணம்-சிவப்பு அருணகிரியாயெழுந்த ஆண்டவனை 'மீதெழு பண்டைச் செஞ்சுடர்' என்று சேக்கிழார் பெருமான் அருளியுள்ளார். அன்னப்பறவையாய் விசும்பிற் பறந்து முடிகாண முயன்றுன் நான்முகன். வெள்ளைப் பன்றியாய் நிலத்தைக் கீண்டு அடி காண உழைத்தான் திருமால்.

மூலப்பிரகிருதிக்கு மேலே அறியாதவர்களாகிய திருமாலும் நான்முகனும் முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து நிற்கின்ற முழுமுதற் கடவுளின் அடிமுடிகளைக் காண முயன்றுல் தோல்விதானேகிடைக்கும்? அவர்களிருவரும் அந்த முயற்சியில் அடைந்த தோல்வி, உண்மையை உணரவிரும்பும்நம்போன்ருருக்கு ஒரு ஒப்பற்ற வெற்றியாகி 'மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கு மேட்டா மூல காரணமாகிய மூர்த்தியை அறிவுறுத்திக் கொண்டிருக்கிறது. அந்நிகழ்ச்சி நிகழ்ந்த திருக்கார்த்திகை நன்னுள் **29-11-55**வெ யாகும். அந்நாளில் ஐம்முகப் பரனையும் ஆறுமுகச் சிவனையும் தீபவொளியிற் கண்டு வழிபட்டு வேண்டிய வேண்டியாங்கு அடைவோமாக.

சோதியே! சுடரே!
சூழொளி விளக்கே!
:மணிவாசகர்

தீப மங்கள சோதீ
நமோ நம: :அருணகிரியார்

திருக்கார்த்திகை விரதம் எந்தநாள்?

-: சிவசூரியநாராயணபிள்ளை :-

நடப்பு மன்மத வருஷம் கார்த்திகைமாதம் திருக்கார்த்திகை விரதம் 12உ எனச் சிலபஞ்சாங்கங்களும், 13உ எனச் சில பஞ்சாங்கங்களும் குறிப்பிட்டுள்ளன. இதனுள் எந்தநாள் கந்தன் கருணைக்குகந்தநாள் என்பதுபற்றிக் கச்சியப்பசிவாசாரியசுவாமிகளின் கருத்தினைச் சிந்தை செய்வோம்.

கந்தபுராணம் - கந்த விரதப்படலம்

'நாரதன் வினவியீதுநான் புரிந்திடுவனென்னாப் பாருலகதனில் வந்து,பரணிநாளபராணத்தி, லோர்பொழுதுணவு கொண்டேயொப்பில் கார்த்திகை நாடன்னில், வீரவேற்றடக்கையண்ணல் விரதத்தையியற்றலுற்றான்' 'அந்தநாள் செல்லப் பின்னருரோகணியடைந்தகாலைச், சந்தியா நியமமெல்லாஞ் சடக்கென முடித்துக் கொண்டு, கந்தவேள் செம்பொற்றண்டைக் கான் முறைவழிபட்டேத்தி, வந்த மாதவர்களோடும் பாரணம் மகிழ்ந்துசெய்தான் என்பதால், பரணிநாளபராணத்தில் ஓர்பொழுதுணவுகொண்டே ஒப்பு இல்லாத கார்த்திகைநாள் தன்னில் கந்தன் விரதத்தைச் சிந்தையுட்கொண்டு அனுட்டித்து, உரோகணிநாட்காலையில் விரதபூர்த்திபெற்று, மகிழ்ச்சியுடன் பாரணஞ் செய்தான் என்று பெறப்படுகிறது, இதனைக் கவனிக்காது குறித்த 12உயில் கொள்ளவேண்டுமானால்11உ அபராண காலத்தில் பரணி இல்லை-அசுபதிதான்இருக்கிறது. மேலும் 13உ காலையில் உரோகணி இல்லை - கார்த்திகைதான் இருக்கிறது. முன்னும் பின்னும் தடைபடுதலால் திருக்கார்த்திகைவிரதம் 12உ அல்லவென்பது வெட்டவெளிச்சம்! 13-ந் தேதியோ முன்னும் பின்னும் ஒத்து நடுநாயகமாகக் கார்த்திகை விளங்குகிறது. அஃதோடும் அன்று மதிநிறைந்த நன்னாளாகவுந்தோன்றுகிறது.ஆதலின் 13ந் தேதியே திருக்கார்த்திகை விரதம் நோற்றுவேண்டியவேண்டியாங்கெய்தப்பெற்று இலங்கிட வேண்டுவோம் வேண்டுவோமே.

இவ்வுயரிய உத்தமோத்தம விரதநாளைப் பிழையாக்கிடும் பஞ்சாங்க கணிதர் பஞ்சாங்கம் வெளியிடுதலால் யாதாகுமோ? என்பதைச் சிந்தித்துத் திருந்தக்கடவர்.

மகம் - மாமகம்

சிவசூரியநாராயணபிள்ளை

மகம் பௌர்ணமித் தொடர்புடையதால் மாகம்-மாசி என்ற மாதப் பெயருண்டாயது. இது வருடமொரு முறை வரும். இதனை மாசிமகம் என்பர். சிம்மத்திற் குருவிருக்க மாசியில் வரும் மகம்மாமகம். இது பன்னிரண்டு வருடத் திற்கொரு முறை வரும். இதனை மகாமகம் மாமாங்கம் என்றும் கூறுவர். நடப்புவருஷத்தில் மகத்திற் சஞ்சரிக்கும் குருவை மாசி மாதம் 13ந்தேதி நிறைமதி மகத் தோடு கூடுதலால் அன்றே மகாமகம். எமது பஞ்சாங்கத்தில் மாசிமகம் என்றுமட்டும் குறித் திருக்கிறோம். ஆனதால் மகாமகம் இவ்வருஷத்திலா? வரும் வருடத்திலா? எனச் சிலர் சந்தேகிக்கின்றனர். இவ்வருடத் திற்றான் மகாமகம் என்று அவர்கட்கு என் பணிவான பதிலைத் தெரிவித்துள்ளேன். கலைமகள் வாக்கிய பஞ்சாங்கம் எவரும் எளிதில் அறியத்தக்க, நிறைந்த விஷயங்களடங்கியது. ஆகையால் அதனை அனைவரும் ஆதரிக்க அன்போடு பணிகின்றேன்.

நோட்டீஸ்

In the D. M. Court of Pudukkottai

O. P. 41 of 55

சிதம்பரம்-1, சடையப்பன்-2, அண்ணாமலை3 மீனாக்ஷிஆச்சி-4

—மனுதார்கள்

பெரியகருப்பன் செட்டியார்-1 மீனாக்ஷிஆச்சி2

—கவுண்டர் மனுதார்கள்

இதனால் எல்லாருக்கும் தெரிவிப்பது என்னவென்றால்:- அரிமளம் லேட் செ. ராம. சித. ராமநாதன்செட்டியாருக்கு ஓரியண்டல் and நேஷனல் இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளிலிருந்து சேரவேண்டிய தொகைகள் ரூ 1503ஐயும் தங்களுக்குச் சேர வேண்டுமென்று மனுதார்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் ஷை மனுவிற்கு விசாரணை டயம் 30-11-55. சம்பந்தப்பட்டவர்கள் ஷை உயில் இக்கோர்ட்டில் காலை 11மணிக்கு ஆஜராகிக் கக்ஷிகளைத் தெரியப்படுத்திக்கொள்ளலாம்.

ராமநாதசாஸ்திரிகள்

புதுக்கோட்டை 15-11-55 } மனுதார்கள் வக்கீல்



தேவகோட்டைப் பிள்ளைத் தமிழ்:- திருப்புகழ்ச் சுவாமிகள் என்ற சிறப்புப்பெயருடன் ஆயிரக்கணக்கான பாடல்களை இயற்றிய வண்ணச்சரபம் ஸ்ரீ தண்டபாணிசுவாமிகள் தேவகோட்டை நகரச்சிவாலயத்தி லுள்ள முருகப்பெருமானுக்குச் சாத்திய பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தம். நூலாசிரியர் பேரரும் சிறந்த புலவருமாகிய தி. செ. முருகதாசபிள்ளையவர்கள் குறிப்புரையுடன் அழகாக அச்சிடப் பெற்றுள்ளது. விலை அணஎட்டு கிடைக்குமிடம்: தி. செ முருக தாசபிள்ளை. கௌமார மடாலயம் திருவாமாத்தூர் விழுப்புரம் போஸ்ட்.

வரப்பெற்றோம்

அறிக்கைகள்:- தருமபுர ஆதீனக் கிழைக்கலைக் கல்லூரி, உயர்நிலைப்பள்ளி, தேவார பாடசாலை ஆகியவற்றின் 1954-1955 ஆண்டு அறிக்கைகள் வரப் பெற்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் கருணையால் நிகழ்ந்த அக்கல்விநிலையங்களின் பயனுடைய நிகழ்ச்சிகளை அறிந்து மகிழ்கிறோம்-

மெய்கண்டதேவர் குருபூசை

மெய்கண்டதேவர் குருபூசை விழா நாகர்கோயில் நன்னெறி மன்றத்தின் பிரார்த்தனைக் கூட்டமாக சுசீந்திரம் திருவாவடுதுறை ஆதீனமடத்தில்13-11-55 மாலை நடைபெற்றது. மன்றப் போதகர் ஸ்ரீ மத் மதுரானந்தா தலைமைதாங்கினர். திருமுறை யோதல், தியானம், பஜனை, நன்மொழிகேட்டல், மௌனம்ஆகிய நிகழ்ச்சிகள் வழக்கம்போல்நிறைவேறின. மெய்கண்டார் வணக்கப்பாக்களும், மெய்கண்டதேசிக மாலையும், பஜனை வேளையில் ஓதப்பெற்றன. நன்மொழிகேட்டல்வேளையில் தசாவதானி, சைவப்பிரசாரகர் திரு பி ஆறுமுகம்பிள்ளையும் சைவப் புலவர் திரு பி. எ. நடேசபிள்ளையும் முறையே மெய்கண்டதேவர் சைவசித்தாந்தம் என்னும் பொருள்கள் பற்றிச்சொற்பொழிவாற்றினர்.

தொடர்கதை:

வாழ்க்கைப் பாதையில்...?

அழ. கருப்பையா

நானே குற்றவாளி யென்று ஒப்புக்கொண்டு சிறைச்சாலைக்குச் செல்கிறேன் என்ற எண்ண எழுத்துக்கள் கல்யாணியின் கண்களிலிருந்து கண்ணீர்முத்துக்களாக உருண்டோடின.

வழக்கறிஞர்கள் தங்கள் தங்கள் இடங்களில் உட்கார்ந்திருந்தனர். கோர்ட் ஹாலின் ஒரு மூலையில் நின்றுகொண்டிருந்தார் சொர்ணநாதர். அவர் கண்களிலிருந்து கண்ணீர் துளி துளியாய்க் காலைப்பனியெனப் பெய்தது தரையிலே. கல்யாணியின் இதயவீணையிலே இன்பநாதத்தை எழுப்பிய மனோகரன் மகிழ்வோடுஉட்கார்ந்திருந்தான்- நாதத்தை எழுப்பிய விரல்கள் ஓய்ந்தன. கல்யாணியின் இதய வீணை உடைந்துவிட்டது. இன்பநாதம் துன்பகீதமாகஎழுந்தது.

மனோகரனின் வழக்கறிஞர் தம் வாதத்தைத் துவக்கினர். 'மாட்சிமிகு நீதிபதியவர்களே! ஒரு புறத்திலே இன்மையின்இழிவும் மறுபுறத்திலே உடைமையின் உயர்ச்சியும் காண்கின்றோம். வறுமைப்பட்டாள்...... வாடினாள் கல்யாணி. சொர்ணநாதர் தம் நண்பர் என்ற உரிமையால், தன் வீட்டிற்கு வர உரிமையளித்தார் கல்யாணிக்கு. மனோகரன் தன் கல்லூரி நண்பன் என்ற காரணத்தினால் அவனைக்காண அடிக்கடி வருவாள் மங்கை. மங்கையும் மனோகரனும் இன்பமாகப் பேசிக்கொள்வது பிடிக்கவில்லை கல்யாணிக்கு. ஏன் பிடிக்கவில்லை? பணம் படைத்தோன், படித்தோன் மனோகர். எனவே அவனை மணந்துகொண்டால் இன்ப ஊஞ்சலிலே சொகுசாக ஆடலாம் என்று எண்ணினாள். மங்கை மனோகரோடு பழகுவதைக் கண்டதும் தன் திட்டத்தில் குறுக்கிட்ட மங்கையைத் தீர்த்துக்கட்டத் திட்டமிட்டிருந்தாள். அதற்குரிய சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தாள் கல்யாணி.

ஓர்நாள்......மனோகரன் செய்தித்தாளைப் பார்த்துக் கொண்டி

ருந்தான். அதுபோழ்து தன்னை மணந்துகொள்ளும்படி வற்புறுத்தினுள் கல்யாணி; மறுத்தான் மனேகரன். இருவருக்குமிடையே பேச்சு முற்றியது. அப்பொழுது, மனேகரனிடம் சேக்ஸ்பியர்எழுதிய 'ரோமியோ ஜூலியட்' புத்தகத்தை வாங்குவதற்காக மங்கை வந்தாள். தன் காரியங்களுக்குக் குறுக்கே நிற்கும் மங்கையைத் தீர்த்துக்கட்ட அதுதான் சரியான சமயமென்று உணர்ந்த கல்யாணி மறைத்துவைத்திருந்த கத்தியை வீசினுள். மங்கையின் மார்பிலே கத்திபட்டுக் குருதி கொப்பளித்தது. மங்கை மயங்கிக் கீழே விழுந்தாள்.

நீதிபதியவர்களே! இதுதான் நடந்த விஷயம். கல்யாணியோடு வாழ விரும்பி, அதற்குக் குறுக்கே நின்ற மங்கையை மனேகரன் குத்தினுன் என்பது பொருந்தாத கூற்றேயாம். மனேகரன் குத்தியிருந்தால், இன்று, மருத்துவ நிலையத்தில் மங்கை மனேகரனேடு பேசியிருக்கமாட்டாள். மேலும் மங்கை பணக்காரி; மனேகரனும் அப்படியே. உல்லாசபுரியின் உப்பரிகையிலே உலவ இருவருக்கும் சம அந்தஸ்து உண்டு. அப்படியிருக்க மனேகரன் ஏன் மங்கையைக் கொல்ல நினைக்க வேண்டும்? எனவே, கனம் நீதியதியவர்களே, கல்யாணிதான்குற்றவாளி என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது கல்யாணிக்குத் தக்க தண்டனை தருமாறு வேண்டுகிறேன்'

'கல்யாணி! நீ ஏதாவது கூற விரும்புகிருயா?' என்று கேட்டார் நீதிபதி.

'நான் உண்மையைக் கூறுவதால் என் நிலையை உணர்ந்துவிட்டுவிடுமா இந்த நீதிமன்றம்? நாட்டிலே நல்லவளாக உலவ விரும்பினேன். கற்பைக்காத்து உயிரிழந்தாளே என் அக்காள் அவள் வழிநிற்க எண்ணினேன். அவள் வாழ்வை நாசம் செய்த குடும்பமே என் வாழ்வையும் வளரவிடாமல் தடுத்துவிட்டது. நீதிபதியவர்களே! நீங்கள் என்னைச் சிறையிலே தள்ளலாம்- அதனுல் என் காதலர் உள்ளம் மகிழலாம். மகிழ்ச்சி யாரிடமும் நிலையாக நிற்பதில்லை. மனேகர் மங்கையையாவது மணந்து வாழ்க்கை நடத்தட்டும். நான்தான் ஏமாந்தேன். மங்கையாவது மானமுடன் வாழட்டும்' என்றுள் கல்யாணி.

(தொடரும்)

தெரிந்து கொள்ளுங்கள்

1958 ஏப்ரல் 1ந் தேதிக்குள்ளாக நாடு முழுவதும் மதுவிலக்கைப் பூரணமாக அமுலுக்குக்கொண்டுவந்துவிட வேண்டுமென்று மதுவிலக்கு விசாரணைக் கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது.

இந்தியாவின் நிலப்பரப்பில் சுமார் நாலில் ஒரு பாகம் வனப் பிரதேசமாகும். ஆனால் வனப் பிரதேசத்தில் சுமார் 57 சதவிகிதம்தான் உபயோகத்தில்இருந்து வருகிறது.

இந்தியாவில் சைக்கிள் உற்பத்தி 1955.ம் ஆண்டின் முதல் கால் வருடத்தில் 98,600 ஆக இருந்தது, இரண்டாவது கால் வருடத்தில் 1,23,200ஆக உயர்ந்துவிட்டது.

இந்தியாவில் அலுமினியம் உற்பத்தி, 1954ம் ஆண்டின் இரண்டாவது கால் வருடத்தில் 927.9 டன்னாக இருந்தது, 1955ம் ஆண்டில் இதற்குச் சரியான காலத்தில் கிட்டத்தட்ட இருமடங்கு உயர்ந்து 1,865.8 டன்னாகப் பெருகிவிட்டது.

இந்தியாவில், 1954ல் இரண்டாவது கால் வருடத்திலே மொத்தம் 63,8000 மின்சார விசிறிகள் உற்பத்தி செய்யப்பட்டன; 1955ம் ஆண்டில் இதற்குச் சரியான கால் வருடத்தில் உற்பத்தியான மின்சார விசிறிகளின் மொத்த எண்ணிக்கை 76,700 ஆகும்.

சர்க்கார் உதவியுடன் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கான திட்டத்தின் கீழ் 5,632 வீடுகளைக் கட்டுவதற்காக 1955 ஆகஸ்ட் செப்டெம்பர் மாதங்களில் இந்திய சர்க்கார் மொத்தம் 2,03,44,380 ரூபாய் நிதியுதவியாக வழங்கியுள்ளது.

இப்போது டில்லியில் நடைபெற்று வருகின்ற இந்தியத் தொழில்கள் கண்காட்சியில் 3,000கிலோவாட்மின்சார சக்தி கொண்ட ஒருமின்சார உபநிலையமொன்று பிரத்தியேகமாக நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. இதற்குமுன் நடைபெற்ற பொருட்காட்சிகளிலெல்லாம் உயர்ந்தபட்சம் 500 கிலோவாட் மின்சாரசக்தியே உபயோகிக்கப் பட்டது,

ஆசிரியர் பாலகவி இராமநாதன் செட்டியாரால் தேவகோட்டை செட்டிநாடு அச்சகத்தில் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.

உ

செட்டிநாடு

வார இதழ்

மலர்-25 இதழ்-7

மன்மத-கார்த்திகை-15

1-12-55

வியாழன் வெளியீடு

தேவகோட்டை

ஆண்டுச்சந்தா ரூ 4

வெளிநாடு ரூ 7

ஆசிரியர்:- பாலகவி இராமநாதன்செட்டியார்



நெய்தல்

பகற்குறியில் வந்து மீளும் தலைவனைந் தோழி இங்ஙனம் பகலில் வருவதை வீட்டாரறியின் இல்வயிற் செறிப்பர். ஆதலால் இரவில் வருக எனக்கூறி அதனையும் மறுத்து வரைவு கடாயது

இவடன்,காமம் பெருமையிற் காலையென் றுணி, னன்புபெரி துடைமையி னளித்தல் வேண்டிப்,பகலும் வருதி பல்பூங் கான,லிந்நீரா கலோ வினிதா லெனினிவ, ளலரி னருங்கடிப் படுகுவ ளதனு: லெல்லி வம்மோ மெல்லம் புலம்ப, சுறவினங் கலித்த நிறையிரும் பரப்பிற், றுறையினுந் துஞ்சாக் கண்ணர், பெண்டிரு முடைத்திவ் வம்ப லூரே 223 :-உலோச்சனுர்

மெல்லிய நெய்தல் நிலத் தலைவனே! இவள் தனது காமமிகுதியால் காலைப்பொழுதென்று கருதாது உனது அன்பைப் பெரிதென மதிக்கின்றமையால் இவளுக்குத் தலையளி செய்யவேண்டிப் பகற் பொழுதிலும் பலபூக்களையுடைய கடற்கரைச் சோலையில் வந்து கொண்டிருக்கின்றாய். இவ்வாறு நீவிரிருவீரும் களவிலொழுகுதல் இனி தேயாமென்றாலோ: இவள் ஊராரது பழிமொழியால் இற்செறிக்கப்பெறுவாள். ஆகலின் இனி இரவில் வருவாயாக. இவ்வூர் சுறாமீனினம் மிக்க நிறைந்த கடற்பரப்பிலுள்ள துறையிடத்தும் துயிலாத கண்ணராகிய பெண்டிரையும் உடையதாயிருக்கின்றது.

பசுந்தமிழ் மலர்

பாலகவி

மூவ றழீஇய வருண்முத லோன்றில்லைச் செல்வன்முந்நீர்
நாவ றழீஇயவிந் நானிலந் துஞ்சு நயந்தவின்பச்
சேவ றழீஇச்சென்று தான்றுஞ்சும் யான்றுயி லாச் செயிரேங்
காவ றழீஇயவர்க் கோதா தளிய களியன்னமே

:-திருக்கோவையார் 191

உரை:-'மூவல் தழீஇய - மூவலூர் என்னுந் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற, அருள்-திருவருளையுடைய, முதலோன்-முழுமுதற் பரம்பொருளாயுள்ளவனும், தில்லை- தில்லைப்பதியிலே வீற்றிருக்கின்ற, செல்வன் முத்தித் திருவை உடையவனுமாகிய இறைவனது, முந்நீர் - கடலாற் சூழப்பட்ட, நாவல் தழீஇய-நாவலந் தீவிலேயுள்ள, இந் நால் நிலம்-இந்த நானிலம் முழுவதும், துஞ்சும் - தூங்கிக் கொண்டிருக்கின்றது, யான் துயிலாச் செயிர்-நான் தூங்காதிருப்பதற்குக் காரணமாகிய துன்பத்தை, எம் காவல் தழீஇயவர்க்கு-எமது காவலை உடைய காதலருக்கு, ஓதாது - சொல்லாமல், அளிய களியன்னம் - அளியினதாகிய மகிழ்ச்சியையுடைய அன்னம், சென்று - போய், நயந்த இன்பச் சேவல் - தான் நயந்த இன்பத்தையுடைய சேவலை, தழீஇ - தழுவி, தான் துஞ்சும்-ஒரு கவலையுமின்றித் தூங்குகின்றது' என்பதாகும்.

அறிவாற் சிவனேயாய வாதவூரடிகளால் இயற்றப்பெற்றது, திருக்கோவையார். இந்நூலின் சிறப்பை அறிந்து கொள்ளுதற்கு 'திரு' என்ற அடைமொழியும் 'ஆர்' என்ற உயர்வு சிறப்பு விகுதியும் கூட்டி இது வழங்கப் பெறுவதொன்றே போதியதாகும். திருவாசகம், திருக்குறள் என்பன போன்ற அடைமொழி கொண்ட நூல்களும், சித்தியார், நாலடியார் போன்ற உயர்வு சிறப்பு விகுதி கொண்ட நூல்களும் தமிழில் உள்ளன. ஆனல் அடைமொழியும் சிறப்பு விகுதியும் கொண்டு

சொல்லப்பெறுவது திருக்கோவையாரென்பதை அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

இந்நூலில் இல்லாத பொருள் எதுவும் இல்லை என்பதை 'பல் காற்பழகினும் தெரியாவுள வேல், தொல்காப்பியந்திரு வள்வர் கோவையார், மூன்றினு முழங்கும் என்ற இலக்கணக் கொத்துரை புலப்படுத்துகின்றது. திருவாசகத்தை உரைத் தருளிய பயிற்சியினாலேயே திருவாதவூரடிகள் முற்றுணர்வு பெற்றாரெனவும், அவ்விணர்வின் பயனாகத்தான் திருக்கோவையார் தோன்றியதெனவும் நம்பியாண்டார் நம்பிகள் கூறுவார்.

திருக்கோவைப் பாடலைக் கண்டபிறகு, வேறுசில பாடல்களைப் பாடும் புலவர்கள், உலகத்தைச் சிரிக்கவைப்பவர்களென்று நம்பிகள் கூறியிருப்பது சிந்திக்கத் தக்கதாகும். அழகிய திருச்சிற்றம்பலமுடையார் அடிகளது திருவாக்கிற் கலந்திருந்து அருமைத் திருக்கரத்தால் எழுதிய பெருமையுடையதல்லவா இந்நூல்?

இலக்கண நூல்களுள் தொல் காப்பியமொன்றும், இலக்கிய நூல்களுள் திருக்குறளொன்றுமே சிறந்தனவாயிருப்பது போல ஞானநூல்களுள் திருக்கோவையாரே முன்னணியிலிருப்பது என்றார் இலக்கணக் கொத்துரை ஆசிரியர்.

பரங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான், உயிர்களின் மேல் வைத்த பெருங்கருணையால், ஆணவத்தோடு அத்துவிதமாகக் கலந்து கேவலாதீத நிலையில் சடம்போற் கிடந்த அவ்வுயிர்களுக்கு அறிவு விளக்கம் உண்டாதற்பொருட்டுத் தமது அருளேயாய ஆதி, பரை, இச்சை, ஞானம், கிரியையாகிய ஐந்து சத்திகளையும் கொண்டு சுத்தம், சுத்தாசுத்தம், அசுத்தம் ஆகிய மூன்று மாயைகளையும் பிரேரிப்பித்து, அவைகளின் காரியமாய்த் தத்துவ தாத்துவிகமாகிய பூத பௌதிக பேதங்களாகிய தநு கரணாதிகளைக் கொடுத்துப் பரிபாகப் படுத்துவான்.

அப்போது வருகின்ற பசு புண்ணிய மிகுதியால் சிவபுண்ணிய முதிர்ச்சி உண்டாகச் சரியை, கிரியை, யோகங்களைச் செய்து வரும்போது குருபத்தியும், சிவபூசையும், அடியார்கூட்டுறவும் உண்டாகும். அதனால் இருவினையொப்பும் மலபரிபாக

மும் ஏற்பட்டுச் சத்திநிபாதம் உண்டாகிக் குருவுபதேச உண்மையாகிய பரஞானம் கைகூடி ஆனந்தநிட்டை கைவரும். அச்சிவானந்த விளக்கத்தைப் புலப்படுத்தும் அடையாளங்கள் சிலவற்றுள் பாட்டுப்பாடுதலும் ஒன்று. இதனை அடிகளே 'சிரிப்பார், களிப்பார், தேனிப்பார், திரண்டு திரண்டுன் திருவார்த்தை விரிப்பார்' என்றுதிருவாசகத்தில் அருளுகின்றார்கள்.

சிவஞானிகளது திருவாக்கின் பொருள், அவரனையாருக்கே விளங்குவதாகும். அத் திருவாக்கைப் பதிவாக்கியமென்று கொள்ளுவதல்லது பசுவாக்கியமென்று நினைத்தாற்கூடக் குற்றமென்று பெரியோர் சொல்லுவர். எனவே அநாதிமல முத்தராகிய சதாசிவமூர்த்தியினது திருவாக்காகிய வேதாகமங்களோடு ஒருங்குவைத்தெண்ணப் பெறவேண்டியவை திருமுறைகளும் சாத்திரங்களும் என்பது உணரத்தக்கதாம்.

திருமுறைகளில் சிற்சில அகத்துறைப் பாடல்கள் உள்ளன. திருக்கோவையாரில் துறைகளுள்ளவெல்லாம் அடங்கும். தமிழ்மொழியிலுள்ள மற்றைக் கோவை நூல்களெல்லாம் தலைவன் தலைவியரது சிற்றின்ப நுகர்ச்சிக்கேதுவாகிய ஒழுக்கங்களைக் கூறியமையத், திருக்கோவையாரொன்றே, அகத்துறையைப் பொருளாகக் கொண்டு பேரின்பத்தை நிலைநாட்டுவதாய் அமைந்திருக்கின்றது. எனவே இந்நூலிலுள்ள இலக்கணமும் துறையும் உவமித்து அறிதற்குக் கருவியாகுமேயன்றி உள்ளத்தில் நிகழும் அநுபவத்திற்குக் கருவியாக மாட்டாது.

மற்றைத் தோத்திர நூல்களிலுள்ள அகத்துறைப் பாடல்களில் உயிரைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவும் குறிக்கப்பெற்றுள்ளது. திருக்கோவையாரில் உயிரைத் தலைவனாகவும் இறையைத் தலைவியாகவும் கூறியிருப்பதன் உண்மை சிந்திக்கத் தக்கதாகும். இந்நூல் தனித்தனியே ஒவ்வொரு துறைகளைச் சொல்லாது முழுவதும் கோவையாகச் சொல்லுவதாலும், இன்பசுகத்தைப் பெறுகின்றதலைவனைப்போல் உயிரும், அதனை வழங்குகின்ற தலைவியைப்போல இறைவனும் இருத்தலாலும் இந்தமாறு பாடு இந்நூலகத்தே உள்ளதென்பதை உணருதல் வேண்டும்.

அகத்துறையிற் களவிற் புணர்ந்துவருந் தலைவன், பகற் குறிக்கண்ணும் இரவுக்குறிக் கண்ணுமாகக் கூடி, ஊரார்களின் அலர் எழுந்ததென்று தோழியால் விலக்கப் பெறுகின்றவன், உடனே தலைவியை விரைந்து வரைந்து கொள்ளல் வேண்டும். இன்றேல் அவ்வலரடங்கச் சிலநாள் ஒருவழித்தணந்துறைதல் முறையாகும். இவ்வொருவழித் தணத்தலைப் பதின் மூன்று பிரிவுகளில் அடிகள் விளக்கியுள்ளார்.

தலைவனிடம் அலரறிவுறுத்த தோழி சிலநாளகன்றணைவையாயின் அம்பலு மலரு மடங்குமெனக் கூறுதலும், தலைவனது வருகைபெறாது வருந்திய தலைவி அவர் வரும்பரிசு உனக்கு உரைத்தாரோவெனக் கடலோடு கேட்டலும், அது வாய் திறவாமையால் அதனோடு புலத்தலும், பின்னர்த் தலைவன் வரவு பற்றி அன்னத்தைக் கேட்டலும், அதுவும் வாய்திறவாமையின் அவன் தேர்சென்ற வழியை நோக்கிக் கடலோடு கூடுதலும், கூடற் றெய்வத்தை வாழ்த்திக் கூடலிழைத்தலும், மாலைப்பொழுதில் மறையுங் கதிரவனைப் பார்த்துப் புலம்புதலும், மாலைப் பொழுது கண்டு மயங்கிப் பறவையொடு வருந்திப் பங்கயத்தோடு பரிவுற்று, அன்னமோடழிதலும் தலைவியின் செயல்களாம்.

அன்னமோடழிதலென்பது, உலகமெல்லாந் துயிலாநின்ற இந்நிலைமைக் கண்ணும் யான் துயிலாமைக்குக் காரணமாகிய என் வருத்தத்தைச் சென்றுஅவருக்குச் சொல்லாது, தான் தன் சேவலைக்கூடிக் கவற்சியின்றித் துயிலுகின்றதென அழிந்து கூறுவதாகும்.

படைத்தலும், காத்தலும், அழித்தலும், மறைத்தலும்' அருளலுமாகிய ஐந்தொழிற் கூத்தாடுகின்ற ஆண்டவனைக் குறிக்கும்பொழுது தில்லைச்செல்வன்எனவும், அடியார்க்குஅருள் செய்யும் மூவலூர்ப்பெருமானைக் குறிக்கும்பொழுது 'அருள் முதலோன்' எனவும் அருளிய நயம் அறிந்து மகிழுதற் குரியதாகும்.

தாமின்புறும்பொழுது பிறர் துன்பங்கண்டு பரிகரிக்கும் எண்ணம் உண்டாகாமையை அன்னத்தின் வாயிலாக அறிவுறுத்துகிறார் அடிகள். நயந்த சேவலைப் பொருந்திய களிப்பால், அன்னஞ் சென்று உரையாமையல்லது, அவர் காவாது விடாரென்பதை 'எங்காவல் தழீஇயவர்க்கு' என்ற தலைவியின் கூற்றினால் அறிகின்றோம்.

(12ம் பக்கம் பார்க்க)

சைவாலயங்களில் சம்ஸ்கிருத அர்ச்சனையே வேண்டும்.

சித்தாந்த பண்டித பூஷணம் ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை

(முன்தொடர்ச்சி)

தமிழன் மோக்ஷத்தை விரும்புவானென்றால், தமிழனுடைய மதத்தில் மோக்ஷமென்பதில்லையென்பதுதான் முடிவு. 'மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்தமாநிலத்தே' என்றார் சிவாசிரியர். எதற்காக என்பதை அப்பாட்டிற் காண்க. அதற்காக அவர் புழுவாய்ப் பிறக்கவுஞ் சித்தம். ஆனால் நவீனராகிய தமிழர் அதற்காகப் பிறக்க விரும்பவில்லை; சேவை செய்வதற்காகப் பிறக்க விரும்புகிறார். அங்ஙனம் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்ற அவருக்கு ஐயோ! அன்றியும் அவர் 'அருள்நெறி மோட்ச உலகிற்கு மனிதர்களை அழைத்துச் செல்ல ஆசைப்படவில்லை; அவ்வாறு கூறவும் இல்லை. ஆனால் மனிதர்களிடம்...... மோட்ச உலகைக் கொணரப் பாடுபடுகின்றது (30-8-55 தினமணி) என்கிறார். ஒருரிலிருந்து இன்னொருருக்கோ, ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கோ மனிதரைத்தான் அழைத்துச் செல்லமுடியும். மனிதரிடத்துக்கு ஓருரையோ, ஒரு நாட்டையோ எப்படிக்கொணர முடியும்? ஆகலின் நவீனரால் மோக்ஷவுலகைத் தமிழரிடங் கொணர முடியாதென்க. மேலும் மனிதரை மோக்ஷவுலகிற்கு அழைத்துச் சென்றாலும், மோக்ஷவுலகை மனிதரிடங் கொணர்ந்தாலும் மனிதருக்கு மோக்ஷங் கிடைத்ததென்பதே முடிவு. மோக்ஷத்துக்குச் செல்வதையே விரும்பாமல் சேவை செய்வதற்கே மீண்டும்மீண்டும் பிறக்க விரும்புகிற தமிழருக்கு மோக்ஷத்தைக் கொணர்ந்து கொடுத்தால் அவர்சேவை உருப்படுமா? மோக்ஷம் அவருடைய சேவையுள்ளத்தைக் கெடுத்துவிடுமே. ஆகலின் நவீனர் மோக்ஷத்தைத் தமிழரிடங் கொணராமலிருப்பதே உத்தமம். ஆனால் அவர் தமிழரை மோக்ஷத்துக்கு அழைத்துச் செல்லவோ, மோக்ஷத்தைத் அவரிடங்கொணரவோ மாட்டார். ஏன்? தமிழருடைய மதத்தின் வழியே வேறென்றவர். அவ்வழி தமிழனையும் மோக்ஷத்தையும் இணைப்பதில்லை. அது இவ்வா

எந்தவுலகிற்கு அழைத்துச்செல்லுமோ? அல்லது அவரிடம் எந்தவுலகைக் கொணருமோ? ஆனால் அவருடைய மதத்தில் மோக்ஷமில்லை யென்பது மாத்திரம் உறுதி. ஆகவே ஈசுரன், ஈசுரபக்தி, மோக்ஷம் ஆகிய மூன்றுமில்லாதவர் நவீனர் என்பது சித்தித்தது. ஆகலின் அவரும் நாஸ்திகரே. நாஸ்திகம் அவரிடம் அந்தரங்கத்திலும் தி-க, தி-மு-கக் கூட்டத்தினரிடம் அந்தரங்கத்தோடு பகிரங்கத்திலும் இருந்து வருகிறது. வித்தியாசம் அவ்வளவே- ஆனால் கடவுளை வழிபடுக என நவீனர் பிரசங்கிக்கின்றனரே யென்ற சந்தேகம் நிகழலாம். 'சிவபெருமான் செய்த தொழில் அத்தனையும் தமிழ்மொழியும் செய்திருக்கிறது' (28-2-54 தினமணி) என்கிறாரவர். சிவபெருமானை விடு, தமிழ்மொழியைக் கொள் என்பதே அவ்வுபதேசம். ஆகலின் அவர் கூறுங்கடவுள் தமிழ்மொழியே. தமிழ்மொழிக்கடவுள் பற்றிய விசாரம்பின்னர் செய்யப்படும். தி-க, தி-மு-கக் கூட்டத்தினருக்கும் அம்மொழியே கடவுள். அக்கடவுள் வழிபாட்டில் அவருக்கு நம்பிக்கை வந்தது குறித்து நவீனர் மகிழ்வதில் வியப்பில்லை. Birds of the same feather flock together என்ற ஆங்கில வசனத்தைஅவர் மெய்ப்பிக்கின்றனர்.

'இன்றைக்கு எல்லா இளைஞர்களிடமும் தாய்மொழிப்பற்றும், நாட்டுப்பற்றும் வளர்ந்து வருகிறது. அவர்கள் கோவிலுக்கு வருவதில்லை. தமிழிலும் மந்திரம் சொன்னால் அவர்கள் கோவிலுக்கு வருவார்கள் என்று எண்ணித்தான் அப்படிச் சொன்னேன்' (15-6-55 தினத்தந்தி) என்கிறாரவர். சமயப்பற்று அவ்வரிசையிலில்லை. அதனால் இளைஞரிடம் சமயப்பற்று வரவில்லையென்பது தெரிகிறது. அப்பற்றுக்கள் பிறப்பேபற்றி உளவாவன வாயினும் அறிவாராய்ச்சியோடு கூடினாற்றான் கனம் பெறும். அவ்விளைஞருள் சைவ சமயத்தைப் பிறப்புரிமையாகக் கொண்டவருமிருப்பர். அவ்வுரிமைபற்றித்தானும் அவருக்கு அச்சமயத்திற் பற்றில்லை. பிறகு அது அச்சமய சாத்திர அறிவாராய்ச்சியோடு கூடுதலும், மதிப்புப் பெறுதலும்யாங்ஙனம்? ஆகலின் இக்காலம் நவீனருக்கு மிகவும் சாதகமானதுதான். 'தமிழ் வழிபாடு குறித்து எவ்வித எதிர்ப்புஇருந்தாலும் அஞ்சாது இறுதிவரை போராடுவேன்' (5-8-55 தமிழ்நாடு)என்கிறாரவர்.

உ
சிவமயம்
பாலருவாயர் துணை



அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

செட்டிநாடு

மன்மத கார்த்திகை 15

நாவலர் பெருமான்

யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் நினைவு நாள் 5-12-55உடயாகும். முன்னுளில் சமணம், பௌத்தம் முதலிய பொய்ச் சமய நெறிகளில் மயங்கி நின்ற மக்களுக்கு உண்மையுணர்த்தத் தோன்றிய சமய குரவர்களைப் போன்று, இந்நாளில் கிறித்தவம் முதலிய அடிப்படையில்லாத சமயங்களின் குறைபாடுகளை மக்களுக்கு எடுத்துக்காட்டிச் சைவசமயப் பெருமையை நிலை நாட்டிய பெருமை நாவலர் பெருமானுக்கு உண்டு.

ஏட்டுச் சுவடியிலிருந்த பழம் பெரும் நூல்களை அச்சுவாகனமேற்றி நல்ல நூற்பதிப்புமுறையை எல்லாரும் அறிய வழிகாட்டியவர் இப்பெருமானேயாவார். செந்தமிழ் மொழியோடு, ஆரியம், ஆங்கிலம் ஆதிய மொழிகளையும் பயின்று கற்றவழியே நின்றொழுகிய இவரது கவினை எவ்வளவு பாராட்டினுலும் பொருந்தும்.

சைவப் பெரு நூல்களுக்கும் தமிழநூல்களுக்கும் இவரெழுதி வெளியிட்ட உரை,விளக்கம்ஆதியவற்றுல் தமிழ்மாணவர் அடைந்து கொண்டிருக்கிற பயனைப் பற்றி அளவிட்டுரைக்க எவராலும் இயலாது. இவரது பிரமசரிய ஒழுக்கத்தையும்சைவப்பற்றையும் அஞ்சாத நெஞ்சுரத்தையும் சிவபூசைநலத்தை

யும்கண்டு அந்நாளிலும், இந்நாளிலும் பாராட்டாதவர் எவருமில்லை. சித்தாந்தசைவப்பேரரசாகிய திருவாவடுதுறையாதீனம் இப்பெருந்தகையாரை அழைத்து மரியாதைசெய்து 'நாவலர்' என்ற சிறப்புப்பெயர் சூட்டி மகிழ்ந்ததென்றால் இவரது பெருஞ் சிறப்பை யாமெடுத்து எவ்வாறு இயம்பவல்லேம்?

சொக்கலிங்க ஐயா

தனவணிகநாடு செய்த தவப்பயனால் தோன்றி வாழ்ந்த சான்றோர் பலருள் சொக்கலிங்க ஐயாவும் ஒருவர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வன்றொண்டச் செட்டியார், மெய்யப்ப சுவாமிகள்போன்ற பெரியோர்களுக்கு மாணவராகி முறையாகப் பயின்று சைவவொழுக்கம் தலைநின்று 'சைவ சித்தாந்தச் செல்வர்' என்று அனைவராலும் இவர் பாராட்டப்பெற்றார்.

இவரது மாணாக்கர் பரம்பரை இன்றும் தமிழ்நாட்டில் சைவம் வளர்த்துக்கொண்டிருக்கிறது. மகாமகோபாத்தியாய பண்டிதமணி கதிரேசச்செட்டியார், ஐயா அவர்களது மாணவர்களில் ஒருவர் என்பதை நினைவு கூறுவது, ஐயாஅவர்களின் பெருமையை அளவிடுவதற்குஏற்றதாகும்.

வேதாகம புராண இதிகாசமேற்கோள்கள்கொண்டு சிவபரத்துவத்தை நிலைநாட்டுவதில் இவர்களுக்கு இணை இவர்களேயாவார்கள். இவர்களது திருவாக்காக வெளிவந்துள்ள செய்யுளும்-உரைநடையுமாகிய நூல்கள் நூற்றெட்டு ஆகும். சிவபூசா துரந்தரரும் சிவஞானச்செல்வருமாகிய இவர்களதுநினைவுநாள் 7-12-55உயாகும்.

கார்த்திகை உத்திரமும் மகமுமாகிய இவ்விரு நாட்களிலும் இவ்விரண்டு பெரியார்களைநினைந்து வழிபட்டுச் சித்தாந்த சைவ ஞானமாகிய அருஞ்சாதனத்தை அடைந்து உய்வோமாக.

★ வித்தியாசம் என்ன? ★

இந்தியப் பிரதம மந்திரியின் மந்திரிசபைக்கும் அமெரிக்க ஜனாதிபதியின் மந்திரிசபைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

அமெரிக்க ஜனாதிபதிக்கும் இந்தியப் பிரதம மந்திரிக்கும் மந்திரி சபைகள் இருக்கின்றன என்றாலும் இவைகளுக்கிடையே சில முக்கிய வித்தியாசங்கள் இருக்கின்றன. (அமெரிக்கஜனாதிபதியின் மந்திரி சபையிலுள்ளவர்களுக்குக் காரியதரிசிகள் என்றே பெயர்)

ஜனாதிபதியின் மந்திரி சபை அரசாங்க இலாகாக்களின் தலைவர்களடங்கியதாகும். இதற்குச் சட்டமியற்றும் அதிகாரம்கிடையாது. அந்த அதிகாரம் அமெரிக்க காங்கிரஸுக்குத்தான் உண்டு. மந்திரிசபை உறுப்பினர் அமெரிக்கக் காங்கிரஸ் (மத்திய சட்டசபை) உறுப்பினர்களல்லர்.

அமெரிக்க ஜனாதிபதியின் மந்திரி சபையில் வெளிநாட்டு இலாகா, நிதிஇலாகா, தற்காப்பு இலாகா, நீர்ப்பாசனம், மின்சாரம், இயற்கைவசதிகள் முதலியவற்றைக் கவனிக்கும் உள்நாட்டு இலாகா, தொழில்இலாகா, சுகாதாரம், கல்வி, பொதுநலம் இவற்றைக் கவனிக்கும்இலாகா, தபால் இலாகா, நிதி இலாகா ஆகிய பத்து இலாகாக்களின் நிர்வாகிகள் இடம்பெறுவர். இந்திய அரசாங்கத்தில் பல்வேறு இலாகாக்களுக்கு மந்திரிகள் பொறுப்பு வகிப்பதுபோன்ற நிலைமைதான் இவர்களுக்கும் இருக்கின்றன.

அமெரிக்க மந்திரி சபையின் உறுப்பினரை ஜனாதிபதிதான் நியமிக்கிறார். அந்த நியமனங்கள் செனட்டு சபையின் அங்கீகாரம் பெற வேண்டும். ஜனாதிபதி விரும்பும் வரையிலும் அவர்கள் பதவி வகிக்கின்றனர். அவர்கள் அவருக்குத்தான் பொறுப்புடையவர்களாவர். இவர்கள் தம் நியமனத்திற்கும் இவர்கள் நிர்வகிக்கும் இலாகாக்களின் வேலைகளுக்கும் ஜனாதிபதி நாட்டுமக்களுக்குப் பொறுப்புச்சொல்ல வேண்டியவராவர்.

ஜனாதிபதியின்மந்திரிசபைவாரமொருமுறை கூடி அரசாங்கத்

தின் பிரச்னைகளையும் திட்டங்களையும் விவாதிக்கும். ஜனாதிபதி வெளியிடும் விவகாரங்களில் தான் பொதுவர்க விவாதங்கள் நடைபெறும். சாதாரண முறையில் நடைபெறும் இவ்விவாதங்கள் மூலம் ஏற்படும் முடிவுகள் யோசனைகளாகவே எடுத்துக் கொள்ளப்படும். அவை ஜனாதிபதியைக் கட்டுப்படுத்தமாட்டா.

இந்திய மந்திரி சபை அங்கத்தினர்கள் இலாகாக்களின் நிர்வாகிகளாக இருப்பதுடன் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருக்கின்றனர். பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்துதான் இந்தியப் பிரதம மந்திரி தம் மந்திரி சபைக்கு அங்கத்தினரை நியமிக்கின்றார். அரசாங்கத்தின் நிர்வாகப் பொறுப்புகளை வகிப்பதுடன் அவர்கள் அரசாங்கத்தின் மசோதாக்களையும் நிறைவேற்றி வைக்கிறார்கள். அவர்கள் பாராளுமன்றத்துக்குப் பொறுப்புடையவர்களாவர். இந்திய அரசாங்க மந்திரிசபைகள் உத்தியோக அடிப்படையில் நடக்கும் கூட்டங்களாகும். இந்திய மந்திரி சபைதான் ராஷ்டிரபதியின் உண்மையான நிர்வாக அதிகாரத்தைச் செலுத்துகின்றது. ஆனால் அமெரிக்காவில் இந்த அதிகாரம் ஜனாதிபதியிடம்தான் இருக்கின்றது.

நோட்டீஸ்

சிவகெங்கை டி. மு. கோர்ட்டு,

O. P. No 32 of 55

P. L. விசாலாக்ஷி ஆச்சி, அலவாக்கோட்டை } மனுதார்

Nil எதிர்மனுதார்

மனுதாரின் மகன் காலஞ்சென்ற P சண்முகம் செட்டியாருக்கு மனுதார்தான் வார்சு என்றும் ஷை சண்முகஞ் செட்டியாருக்கு The யுனைடெட் இந்தியா லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி மதராஸ் லிமிடெட்டிலிருந்து கிடைக்க வேண்டிய இன்சூரன்ஸ் தொகைக்கு மனுதார் வார்சு சர்ட்டிபிகேட் கோரி கொடுத்திருக்கும் மனுவுக்கு 7-12-55உ. வாயிதா. ஆட்சேபணையை அன்று முற்பகல் 10 மணிக்கு ஷை கோர்ட்டில் தெரிவித்துக்கொள்ளலாம்.

எஸ். வேங்கிடேஸ்வரன்,

சிவகெங்கை
15-11-55 } மனுதார் அட்வகேட்

இந்துமத மாநாடு

நாகர்கோயில் தொண்டன் ஆசிரியர் ஆறுமுகநாவலரால் நிறுவப்பெற்றஇந்துமதப்பிரசார நிலையத் திறப்புவிழாவும், இந்து மதப்பிரசாரகர் பயிற்சிக் கல்லூரிக் கல்நாட்டுவிழாவும் இந்து மத மாநாடும் 25, 26உ வெள்ளி சனிக்கிழமைகளில் சிறப்பாக நடந்தேறின.

25உ காலையில் மதுரைத்திரு ஞான சம்பந்தசுவாமிகள்ஆதீன இளவரசு ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் பிரசாரநிலையத்தைத் திறந்து வைத்து அருளுரை வழங்கினர்கள். பெருங்குளம் செங்கோல் மடம், ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக சுந்தர சத்திய ஞான பண்டார சந்நிதி அவர்கள் இந்துமதக் கொடியை ஏற்றி வைத்து ஆசியுரை அருளினர்கள்.

பிற்பகலில் திருகொச்சி இராஜப் பிரமுகர் ஸ்ரீசித்திரைத் திருநாள் மகாராஜா அவர்கள் கல்லூரிக்குக் கல்நாட்டுச்செய்து அறிவுரை அளித்தார்கள்' காலையிலும் மாலையிலும் நாவலரவர்கள் அனைவருக்கும்வரவேற்புரை கூறினார்கள். திரு, வீரசிவசுப்பிரமணியம், பாலகவி இராமநாதன் செட்டியார், முத்துராமலிங்கத்தேவர் ஆகியோரது சொற்பொழிவுகள் நிகழ்ந்தன.

இரவு 10மணிமுதல் ஏழிசையரசி கே பி சுந்தராம்பாள் அவர்களின் இன்னிசையரங்கு உயர்ந்த துணைக்கருவிகளுடன் நடைபெற்றது.

26உ மாலையில் திரு, ஆர். வீரபத்திரன் செட்டியார், கோமதிபொன்னம்பலம்,பாலகவி இராமநாதன் செட்டியார், சிவகாமசுந்தரிஅம்மையார், வீரசிவசுப்பிரமணியம், முத்துராமலிங்கத்தேவர் ஆகியோரது விரிவுரைகள்நிகழ்ந்தன. இரண்டு நாட்களிலும் மதுரை ஆதீனம் சுப்பையா ஓதுவாமூர்த்திகளால் இறைவணக்கம்வாழ்த்தும்பாடப் பெற்றனநாவலரவர்களின் நன் முயற்சியை அனைவரும்பாராட்டி அவர்களது தொண்டுக்கு எல்லாவகையிலும் உதவவேண்டுமென்று வாழ்த்தினர்.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

நெய்தற்றிணைக் குரியதாகிய இரங்கற் பொருளே இப்பாடலிற் கூறப்பெற்றதாயினும், ஏனைய எல்லா நிலத்தினரையும் நினைவுகூர்ந்து 'நானிலம் துஞ்சும்' என்று தலைவி கூறுவது, அவளது பெருவருத்தத்தைஅறிவுறுத்திக் கொண்டிருக்கிறதல்லவா?

படித்தோம்!

மார்கழிப் பாராயணம்:-தொகுப்பாசிரியர் திருமுருக கிருபானந்த வாரியாரவர்கள். விலை அணா 0-3-0, கிடைக்குமிடம்: திருப்புகழமிர்தம் அச்சகம் 144சாமி நாயக்கன்தெரு, சிந்தாதிரிப்பேட்டை சென்னை2. மாணிக்க வாசகசுவாமிகள், சிதம்பரசுவாமிகள், பெரியாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், ஆண்டாள், இராமலிங்கஅடிகள் ஆகியோரது திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, திருப்பல்லாண்டு ஆதியன இதில் இடம்பெற்றுள்ளன.

திரு அரதைப் பெரும்பாழித் திருப்பதிகம்:- தருமபுர ஆதீன வெளியீடு எண் 355. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் 11-11-55 மாத ஜன்ம நட்சத்திரநாளில் வெளியிடப்பெற்றது. வழக்கம்போல் ஆதீனத் தேவார பாடசாலை ஆசிரியர் ஆர் வேலாயுத ஓதுவாமூர்த்திகள் தலச்சிறப்பு, குறிப்புரை முதலியன எழுதியுள்ளார்கள்.

மதம் மாறினர்

மதுரை நவ 20.

தென்காசிதாலுகா சிவகுருநாதபுரம் சுப்பையாப்பண்டாரம் மகன் எஸ் எம் முத்துச்சாமி (வயது43) அம்பாசமுத்திரம் தாலுகா பொட்டல் புதூரிலிருக்கும் ரவணசமுத்திரம் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் மேலாளர் இன்று திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனம் இளவரசு ஸ்ரீ ல ஸ்ரீ சோமசுந்தர தேசிகபரமாசாரியசுவாமிகளிடம் இந்துமுறைப்படி தீட்சை பெற்று இந்துவாகி எஸ் முத்துச்சுவாமி என்ற பெயரை இந்துப் பெயராகவும் பெற்றார்.

நோட்டீஸ்.

In the Court of the District Munseef, Pudukkottai

O. P. 45 of 55

கோவிந்தக்கோனார், முருகப்பக்கோனார் —மனுதார்கள்

இறந்த பக்கிரிக் கோனாருக்கு மனுதார்கள் வார்சுகளென்று வார்சு சர்ட்டிபிகேட் அபேக்ஷித்து ஷெ நிம்பர் மனு தாக்கல்செய்து 17-12-55உடயம் ஏற்பட்டிருப்பதில் ஆக்ஷேபணை யுள்ளவர்கள் அன்று கோர்ட்டில் ஆஜராகி ஆக்ஷேபணைகளைத் தெரிவித்துக்கொள்ளலாம்

S. A. காதர் சாஹிப்

புதுக்கோட்டை
22-11-55 } வக்கீல்

தொடர்கதை:

வாழ்க்கைப் பாதையில்...?

அழ. கருப்பையா

'எல்லா விஷயங்களையும் ஆராய்ந்ததிலும், ஜூரிகள்முடிவுப்படியும் கல்யாணியே குற்றவாளி என முடிவு செய்து மூன்றுமாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கிறேன். குற்றத்திற்குரிய தண்டனையைக் கூடுதலாகப் போட வேண்டுமாயினும் அவள் சேயின் பாதுகாப்பை நோக்கித் தண்டனையை மூன்று மாதமாக்கியுள்ளேன்' என்று கூறிவிட்டு நீதிபதி தன் அறைக்குச் சென்றுவிட்டார். சொர்ணநாதரின் பேத்தி அவர்தோளிலே தொத்திக்கொண்டு கதறியது.

23

காஷ்மீரில் ஏற்பட்ட புயல் ஓய்ந்தது. எங்கும் அமைதி குடிகொண்டது. மக்கள் தங்கள் தொழில்களை நோக்கிச்சென்றனர். படகுக்காரர்கள் துடுப்பைக்கொண்டு தண்ணீரைப் பிளந்தனர். இயற்கையோடுபழக மனிதன் தன் சூழ்நிலையை மாற்றிக்கொள்கிறான்; ஆனால் இயற்கையை வெல்லமுடியவில்லை. இன்றல்ல இனி என்றுமே இயற்கையை மனிதனால் வெல்ல முடியாது. என்று மனிதன் உலக ஜீவன்களின் உயிரை ஆக்குகிறானே, என்று மனிதன் மற்றுமோர் இமயத்தைச் சிருஷ்டிக்கிறானே, என்று மனிதன் இன்பத்திலேயே புரளுகிறானே அன்றுதான் மனிதன் இயற்கையை வென்றவனாகிறான். என்னே உலகைப் படைத்தசக்தியின் திருவருள்- மனிதனைப் படைத்த இறைவன் அவர்களுக்குள் ஏன் உயர்வு தாழ்வுகளையும் பொறாமை பூசல்களையும் உண்டாக்கினான்? இன்பம் குவிந்து கிடக்கத் துன்பத்தையும் ஏன் குழைத்துத்தருகிறான்? ஒரு காலத்துப் புயலால் ஊரை அழித்து, மற்றுமோர் காலத்து மழையின்றிப் பஞ்சத்தை உண்டாக்கி மக்களை மாளச்செய்கிறானே ஏன்? என்ற கேள்விகளுக்கு விடைகாணாது கனவுலகில் மிதந்தான் மீன்துள்ளியிலிருந்து பிழைப்பதற்காகக் காஷ்மீர் சென்ற பொன்னுச்சாமி. அவனுடைய படகு ஜீலம் நதிக்

கரையிலே மிதந்து சென்றது. தொழிலாளி ஓர் இயந்திரம் தானே. அவன் கை படகுத் துடுப்புக்களை நீரிலே போட்டுத் துலாவியதே தவிர, எண்ணங்கள் உலகைப்படைத்த கடவுளைத் தூற்றிக்கொண்டிருந்தன. கரையோரத்தில் இருந்த ஓர் மரத்தில் பழங்கள் பழுத்துத் தொங்கின. மானிட வர்க்கமே! இறைவன் படைப்பால்உண்டான நாங்கள் எதிர்நன்றி பாராமல் மனித இனத்திற்குப் பழங்களைத் தருகிறோம். ஏ! ஓடக்காரா! நீயும் வா. பழங்களைப் புசித்துப் பசியைப் போக்கிக்கொள் என்று அழைப்பதுபோல இருந்தது காற்றிலே அதன் கிளைகள் அசைவது. பொன்னுச்சாமி பழங்களைத்தின்று பசியைப் போக்கிக் கொள்ள மரத்தைநோக்கிப் படகைத் தள்ளினான். கரையை நெருங்கியதும் படகு ஒரு பொருளில் மோதுவதாக உணர்ந்தான்.

உடனே கீழே குதித்துப் படகில் மோதியபொருள் யாதெனப் பார்த்தான். துவண்டு கிடந்தாள் ஓர் துடியிடையாள். அலைகள் அவளை அலைக்கரங்களால் தூக்கிக் கரையில் மணல்மெத்தையிலே போட்டிருந்தன. அவளைத் தூக்கித் தன் படகிலே போட்டான். தண்ணீரைத் துடுப்பால் வேகமாகப் பிளந்தான். சிறிது நேரத்தில் மறுகரையை அடைந்தான். அவளைத்தூக்கிக் கொண்டு தன் குடிசைக்குள் நுழைந்தான். மக்கள் என்றும் பணிவோடு வாழவேண்டும் என்பது போன்றிருந்தது பொன்னுச்சாமி தன் குடிசையினுள் குனிந்து நுழைந்தான். அவ்வளவு சிறியகுடிசை. குடிசையின் ஒரு மூலையிலே நாலைந்து மண்சட்டிகள் கிடந்தன. மறுமூலையிலே கிடந்த கிழிந்த பாயை விரித்து அவளை அதில் படுக்கப்போட்டான். அவளுக்குச் செய்யவேண்டிய முதற் சிகிச்சைகளையெல்லாம் செய்தான்.

அவன் குடிசையைச் சுற்றிலும் பல குடிசைகள் இருந்தன. எல்லாக் குடிசைகளிலும் பீட கோட்டிகளே இருந்தனர். அவர்களில் ஒருவனுக்குச் சிகிச்சை முறைகள் தெரியும். அவன்தான் அக்கூட்டத்தினருக்கு வைத்தியன். அவன் கூறிய பச்சிலைகளைப் பறித்துக்கொண்டுவந்து அவள் முகத்திலே பிழிந்தான் பொன்னுச்சாமி. சிறிது நேரத்தில் அவள் கண்கள் திறந்து மூடின. மகிழ்வு மலர்ந்தது அவன் அகத்திலே.

(தொடரும்)

தெரிந்து கொள்ளுங்கள்

இப்போது டில்லியில் நடை பெற்று வருகிற இந்தியத்தொழில் கண்காட்சி, இந்தியத் தொழில் களையும், அயல்நாட்டுத் தொழில் களையும், சிறிய கைத்தொழில்க ளையும், பெரிய கைத்தொழில் களையும் கண்டுகளிக்க ஈடு இணை யற்ற ஒரு வாய்ப்பை நமக்கு அளிக்கிறது- சர்வதேச ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக் கண்காட்சி சுமார் 73 ஏக்கரா விஸ்தீரணத்தில் அமைக்கப்பட் டிருக்கிறது; காட்சிப்பொருள்கள் மட்டும் சுமார் 10லட்சம் சதுர அடி விஸ்தீரணத்தில் வைக்கப் பட்டிருக்கின்றன.

இப்போது டில்லியில் நடை பெற்றுவருகிற இந்தியத் தொழில்கள் கண்காட்சியில் சுமார் 60,000 சதுரஅடி விஸ்தீ ரணமுள்ள விசேஷப் பகுதி யொன்றில் இந்திய சர்க்காரின் பல்வேறு வேலைத்திட்டங்களைச் சித்தரிக்கும் காட்சிப் பொருள் கள் வைக்கப்பட்டுள்ளன- பொதுத் துறையில் தொழில்கள் ஆற்றிவரும் பணிகள் ஏராள மான மாதிரி உருவங்கள், வரை படங்கள், புகைப்படங்கள் ஆகி யவைமூலம் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டுள்ளன.

இந்தியாவிலுள்ள 11 ஆர்ட் வன்ஸ் தொழிற்சாலைகளும் தயாரித்துள்ள பலவிதமான பொருள்கள் இப்போது டில்லி யில் நடைபெற்றுவருகிற இந்தி யத் தொழில்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. 180-க்கு மேற்பட்ட இனங்களைச் சேர்ந்த பல ரக வாரியான பொருள்கள் அவைகளில் அடங்கியிருக்கின் றன. ஆர்ட்வன்ஸ்தொழிற்சாலை கள் தங்கள் உபரி சக்தியைச் சிவில்தரப்புவேலைகளுக்குப் பிர யோசனப்படுத்துவதன் மூலம் இந்தியாவின் தொழில் துறை பொருளாதாரவளர்ச்சிக்கு உதவி புரிகின்றன. 1954-55-ல் சராசரி மாதம் ஒன்றுக்கு 30லட்சம் ரூபாய்பெறுமானமுள்ளபொருள் களை அத்தொழில்கள் தயாரித் திருக்கின்றன.

ஆசிரியர் பாலகவி இராமநாதன் செட்டியாரால் தேவகோட்டை செட்டிநாடுஅச்சகத்தில் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.

உ

செட்டிநாடு

வார இதழ்

மலர்-25 இதழ்-8
மன்மத-கார்த்திகை- 22
8-12-55
வியாழன் வெளியீடு
தேவகோட்டை
ஆண்டுச்சந்தா ரூ 4
வெளிநாடு ரூ 7

ஆசிரியர்:- பாலகவி இராமநாதன்செட்டியார்

நற்றிணை-தெளிவுரை

பாலை

தலைவன் பிரிந்ததனைத் தோழி தலைவிக்குக் கூறி, மீட்டும் அவள் வினவக் கேட்டு வருந்தி 'நீங்கிலேன்' என்று கூறிப் பிரிந்த தலைவர் திறத்து யான்சொல்லக் கடவதி யாதென நொந்து கூறியது.

அன்பினர் மன்னும் பெரிய ரதன்றலைப், பின்பனி யமையம் வருமென முன்பனிக், கொழுந்து முந்துறீஇக் குரவரும் பினவே, புணர்ந்தீர் புணர்மி னோவென விணர்மிசைச், செங்க ணிருங்குயில் எதிர்குரல் பயிற்று மின்பவேனிலும் வந்தன்று நம்வயிற், பிரியலமென்று தெளித்தோர் தேஎத், தளியெவன் மொழிகோ யானே கயனறக், கண்ணழிந் துலறிய பன்மா நெடுநெறி, வினைமுசு கவலை விலங்கிய, வெம்முனை யருஞ்சுர முன்னி யோர்க்கே 224. :-பாலைபாடிய பெருங்கடுங்கோ

நமது காதலர் நம்பால் அன்புடையவர் மிகப்பெரியவர். அதன் மேல் பின்பனிக்காலம் வருமென்று முன்பனியின் கொழுந்தை முற்படவிட்டு அறிவுறுத்தியதற்கு அடையாளமாகக் குராமரங் கள் அரும்புகட்டின. மாம்பூங் கொத்துக்களின் மீது சிவந்த கண் களையுடைய கரிய குயிலின் சேவலும் பேடையும் எதிரெதிராயி ருந்து புணர்ந்தவர்களே! பிரியாது புணருங்கள் என இசைக்கின்ற இன்பமாகிய வேனிலும் வந்ததாதலின் இனி நம்மிற் பிரிய கில்லோமென்று தெளிவித்தவர், குளங்களில் நீர்வற்ற அழ கொழிந்துகாய்த்த பல பெரிய நீண்ட நெறியையுடைய மறத் தொழில் நெருங்கிய கவர்த்த வழிகள் குறுக்கிட்ட கொடுமுனை யையுடைய செல்லுதற்கரிய சுரத்திலே சென்றார். அவர் நிமித்த மாக இனி யான் யாது சொல்ல மாட்டுவேன்? :பாலகவி

சைவாலயங்களில் சம்ஸ்கிருத அர்ச்சனையே வேண்டும்.

சித்தாந்த பண்டித பூஷணம் ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை

(முன்தொடர்ச்சி)

—

அப்போராட்டம் சாத்திர வரம்புக்குள் நின்று உண்மை காண வேண்டுமென்ற கௌரவ புத்தியோடு செய்யப்படுகிற வாதப் பிரதிவாதமான போராட்டமா? சிலபல முருடரைத் துணைசேர்த்துக்கொண்டு செய்யப்படுகிற அடிதடிப் போராட்டமா? முதல்வகைதான் மனிததரங்கெடாத போராட்டம். சமயஞானமும், சமயமானமுமுள்ள சைவமக்கள் அப்போராட்டத்தில் எதிர்நிற்க எப்போதும் சித்தமாயிருக்கின்றனர். இப்போதும் அவர் புத்தக வடிவத்திலும், பத்திரிகை வாயிலாகவும், பிரசாரமூலமாகவும் அத் தமிழ்வழிபாட்டை எதிர்ப்பது பிரத்தியக்ஷம். வென்றியும் அவர்க்கே யாம். 'தமிழ்மொழி வழிபாட்டை எதிர்ப்பதனால் என்ன விபரீதம் உண்டாகப் போகிறது என்று கூறுவதற்கில்லை--தாய்மொழிக்கு - கோயில்களில்-இடமில்லை என்று கூறுவது, மறுத்துப் பேசுவது ஆத்திரத்தைத்தான் தருகின்றது' (8-7-55 தமிழ்நாடு) என்கிறார் நவீனர். அறிவாராய்ச்சியில் பலஹீனமிருந்தாலன்றி ஆத்திரமுண்டாகாது. ஆத்திரக்காரர் தமக்கும் விபரீத விளைவையுண்டாக்கிக்கொள்வர். ஆகலின் பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் நிதானமே வேண்டற்பாலது. அவ்வாத்திரவயப்பட்டே அவர் எதிர்ப்பவரை அச்சுறுத்துகின்றனர். ஒருக்கால் மனிததரத்தைவிட்டுக் கீழிறங்க அவர் உத்தேசித்திருக்கின்றனரா? அவரோ தமிழ்மதத்தினர். ஆலயங்களோ சைவசமய நிலயங்கள். ஒரு சமயத்தைச் சார்ந்தவர் இன்னொரு சமயத்தைச் சார்ந்த நிலயங்களில் ஆதிக்கஞ் செலுத்த முயல்வது நியாயமா? தமக்கென எழுத்துமூலமான உரிமைச் சாசனம் ஒன்றும் இல்லாமலிருக்கும்போது முருட்டுப் பேர்வழிகளைச் சேர்த்துக்கொண்டு அவராதரவால் ஒருவருடைமையைப் பறிமுதல் செய்பவர் எத்தகையினராவர்? நவீனர் அத்தகையினரைப் பின்பற்றப் பார்க்கிறார்.

அடிதடிப்போராட்ட மென்பது அதுவே. லக்ஷியமும் உயரியதாயிருக்க வேண்டும், அதனை எய்துவிக்கும் நெறியும் நேரியதாயிருக்கவேண்டும் என்றூர் காந்தியார். நவீனரின் லக்ஷியமே உயரியதா? அன்று? என்பது இன்னும் விசாரத்திலிருக்கிறது. அதற்குள் நவீனர் அந்த லக்ஷியத்தையடைவதற்கு அவ்விரண்டாம் வகைப் போராட்டத்திலிறங்கிக் கச்சை கட்டுவதும், எதிர்ப்பவரை என்ன விபரீதம் உண்டாகப் போகிறதோ எனக் கூறி அச்சுறுத்துவதும் என்ன தரம்? நவீனர் அப்போராட்டத்தில் வெற்றி பெற்றூல் சைவ சமய ஆலயங்கள் தமிழ்மதத்தினர் கைப்படும். அவ்வளவுதானே. சைவமக்களுக்குச் சைவ ஞானமில்லை, சைவமான மில்லை, சைவ பரிபாலன சாமர்த்திய மில்லையென்றூல் அங்கிலயங்கள் அயலார் கைக்குப் போய்த்தான் தீரும். அவருக்கு அவை இல்லையென எண்ணித்தான் போலும் 'தமிழ் அரசியல் முதல் ஆலயம் வரை முழங்கத்தான் போகிறது' (5-8-55 தமிழ்நாடு) என்று கூறித் தம் திடமான நம்பிக்கையை வெளியிடுகிறூர் | நவீனர். கூன்பாண்டியர் காலத்தில் அவ்வாலயங்களின் அவலநிலை சாமானியமா? ஆனுல் சைவ சமயத்துக்கு அதனுல் சிறிது நஷ்டமுமில்லை. அச்சமயம் சநாதனமானது, சத்தியமானது, நிரந்தரமானது. முன்னைப் பிறப்புக்களில் தீவினைசெய்த வுயிர்கள் அதன் பயனை நுகரவருங்கால் இன்பப்பொருள்கள் சிவபெருமானுல் திரோபவிக்கப்படும். அம்முறையில் அச்சமயம் சிறிது காலம் மறைந்து நிற்கும்.

நேற்குப்பை

சபாபதி வித்தியாலயத்தின் இரண்டாவதாண்டு நிறைவு விழா 30-11-55 மாலை 4 மணிக்குப் பாலகவி இராமநாதன்செட்டியார் தலைமையில் நடைபெற்றது. இறை வணக்கத்திற்குப் பிறகு வித்தியாலய நிர்வாகி திரு எஸ். மாதவன் வரவேற்பிதழை வாசித்து வழங்கி அறிக்கை படித்தார்கள். திருப்புத்தூர் புலவர் தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியர் திரு, எம். சுப்பிரமணியம் 'கம்பன் தமிழ்'பற்றிப் பேசினூர்கள். வித்தியாலய மாணவ மாணவிகளின் பாட்டு, பேச்சு, நடிப்பு, கும்மி, கோலாட்டங்கள் நிகழ்ந்தன. தலைவர் முடிவுரை, நன்றி கூறல், நாட்டுவாழ்த்துடன் விழா நிறைவுற்றது.

உ
சிவமயம்
பாலருவாயர் துணை



அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

செட்டிநாடு

மன்மத கார்த்திகை 22

தீ வளிசெய்த சீர்கேடு

உலகத்தின் நிலையாமையை உணர்த்த வந்த திருவள்ளுவர் பெருமான் 'முற்றி யிருந்த கனியோழியத் தீவளியால், நற்கா யுதிர்தலு முண்டு' என்று கூறினார். இதனை அநுபவத்திற் காட்ட 1-12-55 காலையில் ஒரு பெரும் புயற்காற்று நமது பகுதியில் உண்டாகி அனைவரையும் பெருந் துன்பத்திற்காளாக்கிவிட்டது.

சென்ற நந்தன ஆண்டுத் திருக் கார்த்திகை நாளில் தென்னிந்தியாவில் பலரைச் சிந்தை கலங்கச் செய்து சென்ற புயற்காற்று மீண்டும் இவ்வாண்டுத் திருக் கார்த்திகையை யோட்டி வெளிப்பட்டுத் தாங்கொணாத் துயரத்தைத் தந்து விட்டது.

இந்தப்புயற்காற்றினால்ஏற்பட்ட சேதத்தைப்பற்றிக் கணக்கிட்டுச் சொல்லக் கருவியே கிடையாது. வீட்டுக் கூரைகளில் இருந்த ஓடுகள் காற்றில் வீசப்பட்ட எச்சில் இலைகளைப்போலப் பறந்து வந்து விழுந்துடைந்ததும், கூரை வீடுகளிலும் குடிசைகளிலும் வாழ்ந்தவர்கள் உயிரைக் காப்பாற்றிக் கொண்டால் போதுமென்று ஒதுக்கிடம் தேடி ஓடியாடி அலைந்ததும், பெருஞ்செல்வர் முதல் ஏதுமில்லாத ஏழைகள் வரை அனைவரும் ஒரே நிரந்தரமாக உணவுக்கு வழியின்றி உபத்திரவமுற்றதும், புயல் நின்ற பிறகும் விடாது மூன்று நாட்கள் பெய்த அடைமழைக்காற்றுது அநேக வீடுகளின் சுவர்கள் இடிந்து விழுந்ததும், ஆற்று வெள்ளத்தில் மனிதர், மாடு, ஆடு முதலியவற்றின் பிணங்களும், பெட்டி

பாய், துணி முதலிய பொருள்களும் அடித்துச்செல்லப்பட்டதும் மரங்களெல்லாம் வேரோடு பிடுங்கியெறியப் பட்டதுமான நிகழ்ச்சிகளுக்குப் புயற்காற்று காரணமாகி விட்டது.

தென்னாடு புண்ணிய பூமியென்றும், பூகம்பம் முதலிய கொடுமைகள் இங்கே உண்டாவதில்லையென்றும் பெரியோர்கள் பாராட்ட நாம் கேட்டிருக்கிறோம். கடவுட் கொள்கை வழிபாடு முதலிய புண்ணியச் செயல்கள் நம் நாட்டில் நாளுக்குநாள் நலிந்து வருவதனாலேயே இத்தகைய விளைவுகள் இடையிடையே ஏற்படுகின்றன என்பதை ஊன்றி நோக்கினால் உணரமுடியும்.

சேக்கிழார்பெருமான் கூறியபடி 'மாதவஞ் செய்த தென்றிசை' யாக நாம்நாடு வர வழியுண்டா?

நேயர்களுக்கு!

1-12,55ல் ஏற்பட்ட புயற்காற்று, பெருமழை காரணத்தால் உண்டாகிய சீர்கேடு, இவ்வார இதழை எட்டுப் பக்கங்களுடன் வெளிவரும்படி செய்துவிட்டது. அன்பர்கள் பொறுப்பார்களாக :-அமைச்சர்

நோட்டீஸ்

புதுக்கோட்டை சப் கோர்ட்டு
O. S. 19 of 55

மாரியப்ப செட்டியார்
—வாதி

சந்தியாகு உடையார், பெரியான், பெரமன்
—8, 21, 22 பிரதிவாதிகள்

ஷை பிரதிவாதிகளுக்குத் தெரிவிக்கிறதாவது:-

ஷை கிம்பரில் ஈட்டுப்பத்திரப்படி தாவாசெய்து 10-12-55உயில் டயம் ஏற்பட்டிருப்பதில் உங்களுக்கு ஆக்ஷேபணையிருந்தால் தெரியப்படுத்திக் கொள்ள வேண்டியது.

T. S. கிருஷ்ணசாமி அய்யங்கார்

புதுக்கோட்டை 5-12-55 } அட்வகேட்

காரைக்குடி

4-12-55ல் சப் கலெக்டர் தலைமையில் நகரசபைத் தலைவரைத் தலைவராகவும்கமிஷனரைக் காரியதரிசியாகவும் கொண்ட புயல்நிவாரணக் கமிட்டிநிறுவப் பெற்றுள்ளது.

தொடர்கதை:

வாழ்க்கைப் பாதையில்...?

அழ. கருப்பையா

கிரிஜா தன் கண்களைத் திறந்தாள். நாலாபக்கமும் தன் பார்வையை ஓடவிட்டாள். அவள் காண்பது கனவுபோலத் தோன்றியது. 'குழந்தே! குழந்தே!' என்று கூப்பிட்டான் பொன்னுச்சாமி. 'நான் எங்கிருக்கிறேன்? எங்கே என் அத்தான் ராம்னுத்? நடந்ததெல்லாம் விபரமாகக் கூறுங்கள்' என்று கேட்டாள் கிரிஜா. கிரிஜாவைக் கண்டதுமுதல் அவள் கண்திறந்தது வரை கூறிமுடித்தான். 'ஐயா! உங்களுக்கு மிக்க நன்றி. உங்கள் பேச்சிலிருந்து நீங்கள் பொன்பூக்கும் தமிழகத்தைச் சேர்ந்தவர் என்று புரிந்துகொண்டேன். எப்படியும் நீங்கள் என்னை என் அத்தான் ராம்னுத்திடம் சேர்த்துவிடுங்கள். உங்களுக்குக் கோடிப் புண்ணியம் உண்டு. தமிழர் என்ருலே பிறருக்குத் தாழ்வு வந்துழி உதவுபவர் என்றுதானே பொருள்' என்று கூறினாள் கிரிஜா. ராம்னுத்தைத் தேடிக்கண்டு பிடிப்பதாகவும், அதுவரை அவள் அவன் பாதுகாப்பில் இருந்துவரலாம் என்றும், தன்னால் அல்லது பிறரால் அவளுக்கு எவ்வித இடையூறும் வராதென்றும் உறுதி கூறினான் பொன்னுச்சாமி.

24

கல்யாணியைக் கற்பழித்தது, கல்யாணிமேல்வீசிய கத்தி மங்கையின்மேல்பட்டது முதலிய விஷயங்கள் வெளியாகாமல், கல்யாணியைக் குற்றவாளி ஆக்கிவிட்டோம் என்ற மகிழ்ச்சியில் இருந்தான் மனேகரன். நீதிமன்றத்தில் தீர்ப்புக் கூறும்வரை அவனைப் பயம்சூழ்ந்துகொண்டுதானிருந்தது. மங்கையும் செத்திருந்தால் மனேகரனுக்கு மகிழ்வு அதிகம்தான். ஆனல் அவள் சாகாமல் மருத்துவ நிலையத்தில் கிடப்பதுதான் அவனுக்குப் பெரும் பாரமாகவிருந்தது. எங்கே உண்மை வெளிப்பட்டுவிடுமோ, எங்கே மங்கை உண்மையையறிந்து வெளிப்படுத்திவிடுகிருளோ, அவள் செத்திருந்தால் இந்தச் சிந்தனைக்கே இட

மில்லையல்லவா என்றெல்லாம் அவன் மனம் அலைந்துகொண்டிருந்தது. தப்பிவிட்டோம் என்ற மகிழ்விற்கும் உண்மை வெளிப்பட்டுவிடுமோ என்ற அச்சத்திற்குமிடையே அவன் இதயம் சிதறியது.

தபால்காரன் ஒருகவரை ஜன்னல் வழியாக வீசியெறிந்துவிட்டுச் சென்றான். மனோகரன் அந்தக் கவரை எடுத்து அனுப்பியவர் முகவரியைக் கவனித்தான். 'ராம்நாத், ஸ்ரீநகர்' என்றிருந்ததும் கவரின் ஓரத்தைக் கிழித்துவிட்டுக் கடிதத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தான்.

அன்புகெழுமிய நண்பருக்கு! வணக்கம் பல. வாழ்க்கையிலே சுகம் காணவேண்டும், பொறாமை பூசல் அற்ற உலகைக்காண வேண்டும் என்று காதலி கிரிஜாவோடு புறப்பட்டேன். செல்லுமிடமெல்லாம் துன்பத்தின் தொடர்கதை என்னைத் தொடர்கிறது. உள்ளன்போடு கிரிஜா என்னைக் காதலித்தாள் நானும் காதலித்தேன். முடிவு...? புறப்பட்டோம். காஷ்மீர் எங்களைக் கைகாட்டி அழைத்தது. காஷ்மீர் சென்றோம். இனி எங்களை எதிர்ப்பார் இல்லையென்று துணிவோடு இருந்தோம். இயற்கைக்கே எங்களைக் கண்டு பொறாமையுண்டாகிவிட்டது. ஆற்றின் கொந்தளிப்பை எதிர்த்துப் போராடினோம்; பயன்? படகு அமிழ்ந்தது நீரிலே. படகிலேயிருந்து பிளந்து தெரித்த பலகையொன்றைப் பற்றுக்கோடாகக்கொண்டு நீரிலே நீண்ட நேரம் போராடினேன். சிறிது நேரத்தில் சோர்வடைந்தேன்; நினைவிழந்தேன். மீண்டும் கண் திறக்கும்பொழுது மருத்துவமனையிலே யிருக்கக் கண்டேன்.

மனோகர்! ராம்நாத் என்றாலே உனக்கு உடலிலே இன்பமென்னும் மின்சாரம் பாயுமல்லவா? இப்பொழுது, எனக்குத் தாழ்வு வந்தவிடத்து முன் வந்துதவு. என் அன்புக் கனிமொழியாள் எங்கிருக்கிறாளோ எப்படியிருக்கிறாளோ தெரியவில்லை. உடலில் இரத்தஓட்டம் இருக்கும் வரை காதல் ராணி கிரிஜாவைத் தேடிக்கொண்டுதான் திரிவேன். லைலா கயஸை மஜ்னுவாக்கினாள். கிரிஜா-லைலா; நான்-மஜ்னு. ஆனாலும் முடிவு இன்பமுடிவுதான். மஜ்னுவாகத் திரியும் நான் லைலாவாய்த்திரியும் கிரிஜாவைச் சந்திப்பேன். செத்த இன்பம் மீண்டும் பிறக்கும்.

(தொடரும்)

நோட்டீஸ்,

புதுக்கோட்டை டி மு கோர்ட்டு
O. P. 43 of 55

குளத்தூர்தாலுகா நாங்குபட்டியிலிருக்கும் RM. K. L.குழந்தைவேலு சம்சாரம் பெரியநாயகி அம்மாள் —மனுதார்

G. K-ராமச்சந்திரய்யர் —அட்வகேட்

குளத்தூர்தாலுகா நாங்குபட்டி வட்டம் நாங்குபட்டியிலிருக்கும் சாமிஅய்யா சம்சாரம் கனகலெட்சுமி அம்மாள் 1, ராமலிங்கம் சேர்வைமகன் RM. முத்தையாசேர்வை2, RM ராமசாமி3, RM குப்புசாமி4. க. மனுதார்கள் இதனால்சகலருக்கும் தெரிவிப்பது யாதெனில்:-

ஷெகிம்பரில் வார்சு சர்ட்டிபிகேட் கோரி மனுதாரால் மனுக்கொடுத்து அது சம்பந்தமாக 15-12-55உக்கு டயம் ஏற்பட்டிருக்கிறது. ஆக்ஷேபணைஉள்ளவர்கள் அன்று ஆஜராகித் தெரிவித்துக்கொள்ளவும்.

G. K. ராமச்சந்திரய்யர்
மனுதார் அட்வகேட்

புதுக்கோட்டை
28-11-55

நோட்டீஸ்

தேவகோட்டை சப் கோர்ட்டு
1955ஷ S. C. 95

கண வீர கண்ணப்பசெட்டியார் —வாதி

காங்கேயம் கிராமம் செம்மங்காளி பாளையத்திலிருக்கும் பழநிச்சாமிக்கவுண்டர் மகன் சின்னச்சாமிக்கவுண்டர் —2ம் பிரதிவாதி

2ம்பிரதிவாதிக்கு நோட்டீஸ்: தங்கள் தகப்பனார் பழணிச்சாமிக்கவுண்டர் அவனாசி கணவீர வள்ளியப்ப செட்டியாருக்கு 15-6-48ல் ரூ 1200க்கு எழுதிக்கொடுத்திருக்கிற புரோநோட்டை வாதி மேடோபர் பெற்று வியாஜ்யம் செய்திருப்பதில் வாயிதா 15-12-55ல் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு ஆட்சேபணையிருந்தால் ஷெ உயில் காலே 11 மணிக்குத் தெரிவித்துக்கொள்ளவும்.

A. Subramania Iyer
வக்கீல்

தேவகோட்டை
29-11-55

ஆசிரியர் பாலகளி இராமநாதன் செட்டியாரால் தேவகோட்டை செட்டிநாடுஅச்சகத்தில் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.

உ

செட்டிநாடு

வார இதழ்

மலர்-25 இதழ்-9

மன்மத-கார்த்திகை- 29

15-12-55

வியாழன் வெளியீடு

தேவகோட்டை

ஆண்டுச்சந்தா ரு 4

வெளிநாடு ரு 7

ஆசிரியர்:- பாலகவி இராமநாதன்செட்டியார்



குறிஞ்சி

தலைவன் பிரிவுக்கு வருந்திய தலைவியை வருந்தாதே யெனத் தோழி வலியுறுத்திக் கூறப் பின்னும் ஆற்றாளாய்த் தலைவி எதிரழிந்து கூறியது.

முருகுறழ் முன்போடு கடுஞ்சினஞ் செருக்கிப், பொருத யானை வெண் கோடு கடுப்ப, வாழை யீன்ற வையேந்து கொழுமுகை, மெல்லியன் மகளி ரோதி யன்ன, பூவொடு துயல்வரு மால்வரை நாடனை, யிரந்தோ ருளர்கொ ல்லேழி திருந்திழைத், தொய்யில் வனமுலை வரிவனப் பிழப்பப் பசந்தெழு பருவர லீர, நயந்தோர்க் குதவா நாரின் மார்பே225. :-கபிலர்

தோழீ! திருந்திய கலன்களை யணிந்த தொய்யிலெழுதப்பெற்ற அழகிய கொங்கைகளிலேயுள்ள இரேகையினழகு கெடும்படியாகப் பசந்து தோன்றிய துன்பந் தீரும்படி முருகவேளை யொத்து வலிமையும் கடுஞ்சினமும் மிகுத்துப் பொருத யானையின் வெளிய கொம்புபோல, வாழை யீன்ற கூரிய கொழுத்த முகை மெல்லிய சாயலையுடைய பெண்களது கூந்தலை முடித்துப்போட்டாற்போன்ற அதன் பூவோடு அசையும் பெரிய மலைநாடன்பாற் சென்றுஅவனை இரந்து விரும்பியவர்க்கு உதவாத அன்பற்ற அவனது மார்பை இரந்து கேட்டவர் யாரும் உளரோ?

பசுந்தமிழ் மலர்

பாலகவி

கணங்கொண்ட வல்வினைகள் கண்கொண்ட நெற்றிப்
பணங்கொண்ட பாந்தட் சடைமேல்-மணங்கொண்ட
தாதகத்த தேன் முரலுங் கொன்றையான் தந்தளித்த
போதகத்தின் தாள்பணியப் போம்.

:-மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை 9

உரை:- 'கண் கொண்ட - கண்ணைக்கொண்டிருக்கிற, நெற்றி-நெற்றியையும், பணங் கொண்ட-படத்தைக்கொண்ட, பாந்தள்-பாம்புகளையுடைய. சடைமேல்-சடையின் மேலே, மணங் கொண்ட-நறுமணத்தையுடைய, தாது அகத்த-மகரந்தப் பொடிகளை அகத்தே கொண்ட, தேன் முரலும்-வண்டுகள் ஒலிசெய்கின்ற, கொன்றையான் - கொன்றைப்பூவையும் உடையவனாகிய சிவபெருமான், தந்து அளித்த-கொடுத்தருளிய, போதகத்தின்-யானைமுகக்கடவுளினது, தாள் பணிய-திருவடிகளை வணங்க, கணங்கொண்ட - கூட்டமாகச் சேர்ந்திருக்கிற, வல் வினைகள்-கொடிய வினைகள், போம்-நீங்கி விடும்' என்பதாகும்.

சைவத்திருமுறைகள் பன்னிரண்டனுள் தேவார திருவாசகமாகிய முதலெட்டுத் திருமுறைகளும், சிவபெருமானது புகழ் கூறுபவை. ஒன்பதாந் திருமுறையில் கணபதி முருகன் புகழ் கூறும் திருப்பாடல்களும் உள்ளன. பத்தாந் திருமுறையாகிய திருமந்திரம் உலகியலொழுக்கம் சைவவொழுக்கம் ஆகியவற்றையும் உரைக்கும். பதினொராந் திருமுறையில் மூத்த பிள்ளையார், முருகவேள், சமயகுரவர், திருத்தொண்டராதியோர் புகழும் உள்ளன. பன்னிரண்டாந் திருமுறை, திருத்தொண்டர்களின் வரலாறு கூறுமுகமாகச் சிவபெருமானது பேரருட்டிறத்தைப் புலப்படுத்தும்.

பதினொராந் திருமுறையில் உள்ள பிரபந்தங்கள் நாற்பது, அதன் ஆசிரியர் பன்னிருவர். அவருள் முதல்வர் திருவாலவாயுடையார். நூலின் பாடற்

றுகை ஆயிரத்து முந்நூற்றெண் பத்தெட்டு. இவை இப்போதுஇருக்கும் பாடல்களின் எண்ணிக்கையேயாகும். பிரபந்தங்களின் அமைப்பையும் தொடர்பு முறையையும் நோக்குகிறபொழுது. இன்னும் நாற்பத்திரண்டுக்குக் குறையாத பாடல்கள் இத்திருமுறையில் மறைந்துள்ளன என்று உறுதியாகச் சொல்லலாம்.

இத்திருமுறையில் மூத்த பிள்ளையாரைப் பற்றியனவாக மூன்று பிரபந்தங்கள் உள்ளன. அவை மூத்த நாயனார் திருவிரட்டைமணிமாலை, மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை, திருநாரையூர் விநாயகர் திருவிரட்டைமணிமாலை என்பனவாகும். இவற்றை அருளிய ஆசிரியர்கள் கபிலதேவநாயனார், அதிராவடிகள், நம்பியாண்டார் நம்பிகள் என்போர். மறைந்தவையென்று கருதப்பெறும் பாட்டல்களுள் மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவையின் இறுதி எழு பாடல்களும் இடம் பெற்றிருக்கின்றன.

பதினொராந் திருமுறை ஆசிரியர்களாகிய நக்கீரதேவ நாயனார், கல்லாடதேவநாயனார், கபிலதேவ நாயனார், பரணதேவ நாயனார் ஆகிய நால்வரும் கடைச்சங்கப் புலவர்களென்று கருதப்பெறுகின்றார்கள். நக்கீரர், கல்லாடர், கபிலர், பரணரென்று சங்கநூல்களில் பெயர்வழங்கப்பெறுகின்ற இவர்கள் திருமுறையாசிரியர்களாகும்பொழுது 'தேவநாயனார்' என்ற சிறப்புமொழிகள் கூட்டி அழைக்கப்பெறுவது பொருத்தமானதுதான்.

என்றாலும், பதினொராந் திருமுறையில் நக்கீரதேவரின் திருவாக்காகவுள்ள திருமுருகாற்றுப்படையையன்றி, மற்ற நூல்களோ பாடல்களோ சங்க இலக்கியங்களில் இடம் பெற்றிருக்கவில்லை. இதனால் திருமுருகாற்றுப்படையல்லாத மற்றைய நக்கீரதேவாது பிரபந்தங்களையும் கல்லாடர், கபிலர், பரணரது பிரபந்தங்களையும் சங்ககாலப்புலவரல்லாத அவர் பெயர்கொண்ட மற்றை நால்வரின் பிரபந்தங்களென்று கூறுவாரும் உளர்.

நம்பியாண்டார் நம்பிகள் அருளிய திருத்தொண்டர் திருவந்தாதியில், நம்பியாரூரரின் திருத்தொண்டத் தொகையிலுள்ள பொய்யடிமையில்லாத புலவராவார், 'தரணியிற் பொய்மையிலாத் தமிழ்ச்சங்க மதிற்கபிலர்

பரணர் நக்கீரர் முதல் நாற்பத்தொன்பது பல்புலவோர்’ என விரித்துக் கூறப்பெற்றுள்ளது. திருத்தொண்டத் தொகையின் தொகையடியார்களுள் கடைச் சங்கப் புலவர்களாகிய கபிலர், பரணர் நக்கீரரும் இடம்பெற்றுர்களென்ருல், அவர்களைப் பதினொராந் திருமுறையாசிரியர் கூட்டத்துள்ளிருந்து விலக்கிக் காணவேண்டிய அவசியமேயில்லை.

புலனழுக்கற்ற அந்தணுளராக விளங்கிய கபிலதேவநாயனுரது பிரபந்தங்கள் பதினொராந் திருமுறையில் மூன்று உள்ளன. அவைகளில், மூத்த நாயனர் திருவிரட்டைமணி மாலையும் ஒன்று. அதிராவடிகள் இயற்றியது மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவையொன்றே. நம்பியாண்டார் நம்பிகள் இயற்றிய பத்துப் பிரபந்தங்களுள் திருநாரையூர் விநாயகர் திருவிரட்டைமணிமாலையும் ஒன்று.

பிரபந்த வைப்பு முறையில் கபிலதேவரதும் நம்பியாண்டார் நம்பிகளதுமாகிய பிரபந்தங்களில் மூத்தபிள்ளையாரைப் பற்றியவை முதலிடம் பெற்றிருப்பது நினைவுகூரத் தக்கதாகும். முப்புரம் எரிசெய்த அச்சிவன்உறை ரதத்திலும் அச்சது பொடி செய்த அப்பெருமானது அதிதீரத்தை இவ்வைப்புமுறை புலப்படுத்திக்கொண்டிருக்கிறதல்லவா?

பாரி வள்ளலிருந்து ஆண்ட பறம்புநாட்டின் தலைநகர் பிரான்மலையென்று அறிகின்ரும். அத்திருமலை கொடுங்குன்றம் என்னும் பெயருடன் தேவாரத் திருப்பதிகம் பெற்ற பாண்டி நாட்டுத் திருத்தலங்களுள் ஒன்ருக விளங்கிக் கொண்டிருக்கின்றது. அந்தத் திருத்தலத்தில் பாரி வள்ளலின் ஆருயிர் நண்பராகப் பலநாட்கள் வாழ்ந்திருந்த கபிலர் பெருமான், அங்கே திருக்கோயில் கொண்டெழுந்தருளியுள்ள கடவுளரை மறந்திருக்க வழியேது?

ஆகவே மூத்தபிள்ளையாருக்கு ஒரு இரட்டைமணி மாலையும் சிவபெருமானுக்கு இரட்டை மணிமாலையொன்றும் அந்தாதியொன்றும் அவரால் இயற்றப்பெற்றிருக்கின்றனவென்பது அறியத் தக்கதாகும். மூத்தநாயனர் திருவிரட்டைமணிமாலை வெண்பாப் பத்தும் கலித்துறை பத்துமாக இருபது செய்யுட்களைக் கொண்டுள்ளது. விநாயகப் பெருமானை வணங்கினல் வினை

யின் வேர் அறும் என்பதை இப்பாடலின்மூலம் ஆசிரியர் அழுத்தமாக அறிவுறுத்துகிறார்.

ஆணவம், கன்மம், மாயையென உயிர்களைப் பற்றி நிற்கின்ற மலங்கள் மூன்று. அவற்றுள் கன்ம மலத்தை இருவினையென்று பொதுவாகச் சொல்லுவதுண்டு. கன்மம் உயிர்களாற் செய்யப்பெறுகின்ற நல்வினை தீவினைகளாகிய ஆகாமியமும் அவற்றின் புண்ணிய பாவ வடிவங்களாகிய சஞ்சிதமும், அவற்றின் பயனாக இன்ப துன்பங்களாக வருகின்ற பிராரத்தமுமென மூவகைப்படும்.

நல்வினையும் தீவினையும் என மனவாக்குக் காயங்களாற் செய்யப்பட்டுத் தூலரூபமாய் ஆகாமியமென நிற்குங் கன்மம், பக்குவப்படுமளவும் புத்தி தத்துவம் பற்றுக்கோடாக மாயையிற் கட்டுண்டு சூக்கும ரூபமாய்ச் சஞ்சிதமென நின்று, பேறு, இழவு, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு ஆகியவற்றிற்கு அடிப்படையாய் இருத்தலால், உயிர்களின் அநுபவங்களுக்கு இதுவே காரணமாயிருக்கிறதென்பதை அறியலாம்.

செயல்களைச் செய்கின்றபொழுது நாம் என்ற முனைப்பு முன்னிற்பதனாலேயே ஆகாமிய கன்மம் ஏறுகின்றது. 'யான் செய்தேன் பிறர் செய்தார் என்னதியானென்னும் இக்கோணை ஞானவெரியால் வெதுப்பி' என்பது சிவஞானசித்தியார். தன்முனைப்போடு செய்த நல்வினை தீவினைகள் புண்ணிய பாவங்களாகி இன்பதுன்பங்களைத் தருவதால், அத்தன்முனைப்பு அறுதற்கேற்ற உபாயத்தை அறிந்து அதனைக் கடைப்பிடித்தொழுகுதல் வேண்டும்.

வினை சடப்பொருளாதலின் அது தானாகவே செய்தவர்பாற் சென்று நுகரும்படி நிற்கமாட்டாது. அதனை ஊட்டுபவன் ஆண்டவனே. உயிர்கள் முத்தியடைதற்பொருட்டு அவ்வுயிர்களின்மேல் வைத்த பெருங் கருணையால், ஆண்டவனே அவை செய்த நல்வினை தீவினைகளை ஏற்றுக்கொண்டு அநுக்கிரக நிக்கிரகங்களைச் செய்கின்றான். ஆதலின் அவ்வாண்டவனது திருவடிகளைப் பற்றுக்கோடாகப் பற்றினாலன்றி வினையிலிருந்து மீளவழியில்லை. வினைப் பயன்களாகிய சுக துக்கநுகர்ச்சிகளில் சலனமின்றி அரனடியை அகலாதிருத்தலே இருவினையொப்பு

(12ம் பக்கம் பார்க்க)

சைவாலயங்களில் சம்ஸ்கிருத அர்ச்சனையே வேண்டும்.

சித்தாந்த பண்டித பூஷணம் ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை

(முன்தொடர்ச்சி)

அன்று ஒருசம்பந்தர்தோன்றி அச்சமயத்தை மீண்டும் பிரகாசிப்பித்தார். அக்காலைச் சமண மதத்தினர்போல் இக்காலைத் தமிழ்மதத்தினரும் சைவாலயங்களில் எது வேண்டுமானாலுஞ் செய்க. ஆனால் மற்றொரு சம்பந்தர் உதயமாவதற்கு அவ ராதிக்கம் ஒரு நிமித்தமாகும். அச்சம்பந்தர் விஜயமும் பெருமகிழ்ச்சிச்குரியது. வைகைக் கரையோ எப்போது மிருப்பதாயிற்று.அச்சமயம்மறுபடியும்பிரகாசிப்பதிற் சந்தேக மில்லை.

11 'தமிழ்மொழிவழிபாட்டை யாராலும் எக்காரணத்தைக் கொண்டும் எப்பொழுதும் தடை செய்யவே முடியாது. நாம்தமிழ் மொழியிலும் செய்ய வேண்டுமென்று கூறுவதனாலும் நாம் இருசாராருக்கும் ஒற்றுமையை வளர்க்கப் பாடுபடுகிறோம்' (8-7-55 தமிழ்நாடு) என்கிறார் நவீனர். 'யாராலும்', 'எப்பொழுதும்'என்பன அவர்கொண்டுள்ள தந்நம்பிக்கையைக் காட்டுகின்றன. அதுகிடக்க, 'எக்காரணத்தைக்கொண்டும்' என்றும் அவர் சொன்னார். அவ் வழிபாட்டை மறுக்குங் காரணம் அறிவுக்குப் பொருந்துவதாயிருந்தாலும் என்பது அதற்கு அருத்தம்- அதனால் அவருடைய பிடிவாத குணம் வெளியாகிறது. நியாயத்தை அவர் வெறுக்கிறார். அவரை ஈசுரன்றான் திருத்த வேண்டும். என் முயற்சி பிறரையே பெரிதும் உத்தேசித்தது. ஆகலின் அது தொடர்ந்து நிகழும்.

இனி, அவ்விருசாரருள் ஒருசாரார் தமிழரெனத் தெரிகிறது. மற்றொரு சாரார் யார்? ஒருகூட்டத்தார்சம்ஸ்கிருதத்துக் குரியாரெனச் சிலராற் சொல்லப்படுகின்றனர். அக்கூட்டத்தினர்தான் ஆதிகாலத்தில் மத்திய ஆசியாவில் வாழ்ந்தனர்; அவருக்குச் சம்ஸ்கிருதம் சொந்தமொழி; பிறகு அவர் பாரதத்துட்புகுந்து அத்தேசமெங்கும் பரவினர்; அவரோடு அம்மொழியும் பரவலாயிற்று என்பது ஒருவரலாறு. ஆங்கிலேயருக்கு ஆங்கிலம் சொந்தமொழி. உலகெங்கும்

அவர் பரவினர். அவரோடு அம் மொழியும் பரந்தது. ஆயினும் அம்மொழிக்குச் சொந்தநாடு இங்கிலாந்து. அதில் அம்மொழி இன்றும் இருந்து வருகிறது. சொந்தநாட்டை முழுக்கக் காலி செய்துவிட்டு உலகிற் பிறவிடங் களெல்லாம் அது பரவவில்லை. ஆனால் சம்ஸ்கிருதத்தின் ஆதிஸ் தானமென்று சொல்லப்படுகிற மத்திய ஆசியாவில் சம்ஸ்கிருத வாசனைதானும் என்றுங் கிடை யாது. அங்ஙிலம் அம்மொழிக்கு ஆதிஸ்தானமென்றலெப்படி?

அக்கூட்டத்தினர் பாரதத் திற்போல மேலைநாடுகளிலுஞ் சென்று தங்கினரென்பதும்அவ் வரலாறு. ஆனால் அங்நாடுகளிற் சம்ஸ்கிருதம் என்றுமே யிருந்த தில்லை. அம்மொழியை இங்கு வந்தவர் காப்பாற்றினர். அங் குச் சென்றவர் கைவிட்டனர் என்றால் அதற்குக்காரண மென்னை? அஃதில்லை. அதனா லும் மத்திய ஆசியா அம் மொழிக்கு ஆதிஸ்தானமென் றல் தவறு.

அவ்விடத்தில் அக்கூட்டத்தி னருள் ஒருவராவது தங்காமல் அனைத்துமக்களும் வெளியே றினரென்பதும் அவ் வரலாறு. அதுவும் வெறும் பேச்சு. அங்கு இப்போதும் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர் அப்பிரதே சத்துக்கு வந்தேறிகளு மல்லர் அவரிடம் சம்ஸ்கிருதமு மில்லை. அதனாலும் அம்மொழிக்குஅது ஆதிஸ்தானமென்றலடாது.

பாரததேசத்தில் மாத்திரம் அம்மொழி யிருந்து வருகிறது. ஆயினும் அங்கு அதற்கென ஒருமாகாணமுங்கிடையாது. எக் காலத்திலும் எக்கூட்டத்தின ரும் அதைச் சொந்தமொழியெ னக்கொண்டு தம் வீடுகளில் பேசினதில்லை. அதற்கும் சாமா னிய மக்களுக்கும் வெகுதூரம். ஆனால் அவருள்பட எல்லா மக் களும் அவரவருடைய பிரதேச மொழிகளிலேயே என்றும் பேசி வருகின்றனர். அவையே அவ ருக்குச் சொந்தமான பேச்சு மொழிகள். பாண்டித்திய முடை யவரே அவசியம் நேர்ந்தபோது சம்ஸ்கிருதத்திற் பேசிக்கொள் வர். அவ்வுண்மையை 'ஆடவரில் உயர்ந்தவர் அரசர், புரோகிதர், தேவர்கள் சம்ஸ்கிருதமொழி பேசினார்கள். ஆடவரில் கீழ் வகுப்பினரும் பெண்கள் அனைவ ரும் பிராகிருதம் என்றவட நாட்டுமக்களின் அக்காலத் தாய் மொழிகளில் பேசினார்கள்' (5-11-55 தென்றல்) எனக்கூறி அப் பத்திரிகைக் கொள்கையின ராகிய பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரை எம். ஏ., எல். டி. ஆமோதித்தார்.

உ
சிவமயம்
பாலரூவாயர் துணை



அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

செட்டிநாடு

மன்மத கார்த்திகை 29

பாராட்டுகிறோம்!

அணிமையில் நமது பகுதியில் ஏற்பட்ட தீ வளியாலும்பெருமழையா லும் துன்பமடையாதவர்கள் எவருமில்லை. பெருஞ் செல்வர் முதல் ஏதுமில்லா ஏழைகள்வரை அனைவரையும், அவரவர்கள் தகுதிக்குறைவு நிறைவுக்கேற்பத் துன்புறுத்திச் சென்ற புயலின் கொடுமையிலிருந்து மீண்டு நன்னிலையடைய, ஏராளமானபொருட் செலவும் நீண்ட காலதாமதமும் ஆகும்.

நமது மாவட்டத்திற் பல பகுதிகளும் தஞ்சை மாவட்டத்திற் சில பகுதியும் புயல் மழையின் கொடுமைக்குப் பெரிதும் இலக்காயின. நமது மாநில முதலமைச்சர் திரு, காமராசர் இந்தப் பகுதிகளைச் சுற்றிப்பார்த்துச் சேதங்களை நேரிற் கண்டறிந்து வேண்டுவன செய்து வருகிறார். போக்குவரத்து வசதிகள் குறைந்திருந்த வேளையில் தமக்குரியஎந்தச்சௌகரியத்தையும் எதிர்பார்க்காமல் மக்களின் குறையை அகற்றுதலையே குறிக்கோளாகக்கொண்டு சுற்றுப் பயணஞ் செய்து நிகழ்ச்சிகளை நேரிற் காண முனைந்த முதலமைச்சரின் மனப்பான்மையை நாம் பெரிதும் பாராட்டுகிறோம்.

பதவியிலிருப்பவர்களிற் பெரும்பாலோர், தமது வசதியோன்

றையே நாடு பவர்களாயிருப்பதனு லேயே நாட்டிற் பல வகையான சீர்கேடுகள் உண்டாகின்றன என் பதை யாரும் மறுக்க முடியாது. மக்களாட்சி நாட்டில் மாகாணத் தலைமைப்பொறுப்பை ஏற்றிருக்கிற கடமையை உணர்ந்து உடனடி யாகச் செய்தக்கனசெய்ய நேரடி யான கவனத்தை மேற்கொண்ட நமது முதலமைச்சரின் செயல், மற்ற அதிகாரிகளுக்கும் வழிகாட் டியாயிருந்து உண்மையான பயன் தருமானுல் அது நமது நற்பேரு கவே இருக்கும்.

புயற்கொடுமைக்கு ஆளானவர் களிற் பெரும்பொருள் படைத்த ஒரு சிலரைத்தவிர, நடுத்தரத்தகுதி யினரும் குடிசைவாழ்க்கையுடை யவருமான பலர் தங்கள்வாழ்க்கை யைச் செம்மைப்படுத்திக்கொள்வ தற்குப் படுந்துன்பத்திற்கு அளவே யில்லை.

தனவணிக நகரத்தார்களிற் சிலர், தூக்கி யெறியப்பட்டகூரை ஓடுகளுக்குப் பதில் போடமுடியா மலும் இடிந்துவிழுந்த சுவர்களை மீண்டும் எடுத்துக்கட்ட முடியாம லும் அலமருவது நமக்கு நன்ருகத் தெரிகின்றது. தோன்றுதோட்டுப் பிறரை எதிர்பாராது வாழ்க்கை நடத்திவந்த இவர்கள், சிலகாலமா கச்செலவக்குறையால்துன்புறுவது கண்கூடு. இந்தவேளையில் நமது தேவகோட்டைநகரசபையார் **12-12-55**ல் ஒரு அவசரக் கூட்டம் கூட்டி நிவாரணம் அளிக்கும்படி சர்க்காரைக் கேட்டுக்கொண்டிருக் கிருர்கள்.

வீடுகளைப் பெரிதாகக் கட்டிப் போட்டுவிட்டு நகரசபைக்கு வரிக் கொடுக்கமுடியாமல் பலர் தவித் துக்கொண்டிருக்கின்ற நிலையில் புயற் கொடுமையும் புண்படுத்தி யுள்ளது. எதையும் தேர்ந்து தெளி யும் ஆற்றல்படைத்த நமது முதல மைச்சர்தான் இந்த வேளையில் ஆவன செய்து கலக்கத்தைநீக்குங் கடமையுடையவராய் இருக்கின் ருர் என்று கூறவிரும்புவதோடு இதுவரை செய்துவந்த உதவிக ளோடு மேலும் வேண்டுவனசெய்து தர அவரை வேண்டுகிருேம்.

அநாமதேயப் பஞ்சாங்கம்

எ. சதாசிவபண்டித சிவாசாரியார்

மன்மதவருஷ திருநெல்வேலி வாக்கியப்பஞ்சாங்கம். இஃது பிரபலஜோஸ்யரைக்கொண்டு கணிக்கப்பட்டு திருநெல்வேலிப் பாலம். மெஸ்ஸர்ஸ் எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை அவர்களால் முக்கூடல் ஜோதிபிரஸ்ஸில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது, என ஓர் பஞ்சாங்கம் வெளிவந்துள்ளது.

மெஸ்ஸர்ஸ் எஸ். ஆர். சுப்பிரமணியபிள்ளை என்பவருக்கு ஒரு கடிதத்தில் தாங்கள் பிரசுரம் பண்ணிய பஞ்சாங்கம், பிரபல ஜோஸ்யரைக்கொண்டு கணிக்கப்பட்டிருப்பது சரி. கணித்தவரின் பேர் ஊர் யாது? அக்கணிதரிடம் சில சந்தேகங்கள் கேட்கவேண்டும். அவ்விலாசம் தெரிவிக்கவென்று ரிப்ளை கார்டுஎழுதினோம். பதில்வரவில்லை. பிறகு விசாரித்ததில் மேற்படி சு. பிள்ளை என்பவரில்லைஎனக்கேட்டோம். ஆயின், இப்பஞ்சாங்கம் யாவரால் கணிக்கப்பட்டிருக்கவேண்டுமெனின் இ. மு. சுப்பிரமணியபிள்ளை அவர்களால் கணிக்கப்பட்டிருக்குமென்பது சொல்லாமலறியலாம்.

சைவப்பஞ்சாங்கம் என்பதற்கு நேர் ஸ்மார்த்தப்பஞ்சாங்கம் ஒன்று வேண்டுமென உத்தேசித்தவராய் இப் பஞ்சாங்கம் வெளியிடப்பட்டிருக்க வேண்டும். திருக்கணிதம், வாக்கியம் இரண்டுவிதமாயுள்ளதை ஒருவரே கணித்ததாகக் காணப்படுவதுபோல, இ. மு. சு அவர்கள் இது சைவப்பஞ்சாங்கம், இது ஸ்மார்த்தப் பஞ்சாங்கமெனப் பேர்காட்டித் தமது பெயரையே குறித்து வெளியாக்க வேண்டுமென்பதே எமது கருத்து.

சைவப்பஞ்சாங்கம் ஆகம முறைப்படி கணிக்கப்பட்டதாகப் பஞ்சாங்கத்திற் காணப்பட்டிருப்பினும் சில ஒவ்வாதனவும் அதில் காணப்படுகின்றன. இவ்வாண்டில் விநாயகசதுர்த்தி நவராத்திரி கந்தசஷ்டி முதலியன சைவப்பஞ்சாங்கத்தில் மாறுபட்டிருக்கின்றன. மாறுபடாவண்ணம் கணிக்கவேண்டும். இவ்வருடத்தில் சைவப்பஞ்சாங்கத்திற் கண்டபடி முன்கூறிய

சடங்குகள் எத்தலத்திலும் நடைபெறவில்லை என்பது திண்ணம். திருச்செந்தூர் ஆ. சங்கத்தார் சை. பஞ்சாங்கப்படி ஏன் நடத்தக்கூடாதென்ற சில கேள்விகளைக்கேட்டு உண்மை தெரிந்தார்கள். சைவப் பஞ்சாங்கத்திற் கூறிய நடையை விட்டார்கள். சைவப் பஞ்சாங்க கணிதருக்கு இதுவொரு தாழ்ச்சியல்லவா?

இனியேனும் வரும் வருடங்களின் பஞ்சாங்கங்களில் இவ்வித மாறுதலில்லாமல் எழுதுவாரென்று விரும்புகிறோம்.

மெய்ப்பொருணயனர் குருபூசை

நாகர்கோயில் நன்னெறி மன்றத்தின்சார்பில் இக் குருபூசை விழா இருபத்து நான்காவது பிரார்த்தனைக் கூட்டமாக 4-12-55 மாலை மன்றம்நிலையத்தில் நடைபெற்றது. சைவத்திரு A. ஸ்கந்தஸ்வாமிப்பிள்ளை தலைமைதாங்கினர். திருமுறையோதல், தியானம், பஜனை, நன்மொழிகேட்டல் மௌனம் ஆகிய நிகழ்ச்சிகள் வழக்கம் போல் நிறைவேறின. நன்மொழிகேட்டல்வேளையில் செயலாளர் வித்துவான் வே. பூதலிங்கம்பிள்ளை அவர்களும், சைவப்பிரசாரகரும், புலவருமான வித்துவான் E. பகவதிப்பெருமாள்பிள்ளை அவர்களும் மெய்ப்பொருணயனர் என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றினர்.

— ராஜாசர் யோசனை —

சென்னை டிச. 11-

திருப்புத்தூர், செட்டிநாடு, புதுக்கோட்டை ஆகிய பகுதிகளில் நிலவரியைச் சென்னை அரசாங்கம் முற்றிலும் தள்ளிக்கொடுக்கவேண்டுமென்றும்இதற்காக மக்களுக்கு ஊக்கம்அளிக்கும் வகையில் உடனடியாக ஒரு அறிக்கையை வெளியிடவேண்டுமென்றும், சென்னை சட்டசபை உறுப்பினர் ராஜாசர் திரு. எம். ஏ. முத்தையாசெட்டியார் ஒரு யோசனை கூறியுள்ளார்.

புயலால் பாதிக்கப்பட்டுள்ள திருப்புத்தூர், செட்டிநாடு, புதுக்கோட்டை ஆகிய பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்துவிட்டுச் செட்டிநாடு மன்னர் முத்தையாசெட்டியார் இங்கு வந்துசேர்ந்தார்.

சென்னை அரசாங்க அலுவலகத்தில், பஞ்சம், புயல் உதவிப் பிரிவு ஒன்றை நிறுவவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். வருங்காலத்தில் ஏற்படும் இம்மாதிரியான எதிர்பாராத விபத்துக்காலங்களில் அத்துறையினர் முன் ஏற்பாடு நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளமுடியும்.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

எனப்பெறும். அவ் விருவினை யொப்பே முத்திப் பேற்றிற்கு முதற்படியாய் அமைவது.

வினையின் வேர் அற்றாலன்றி மாயாமலமும் ஆணவ மலமும் அகலமாட்டா. பல வடிவங்களுடன் வந்து இன்ப துன்பங்களை ஊட்டுகின்ற இருவினையை, 'கணங்கொண்ட வல்வினைகள்' என்று ஆசிரியர் கூறுவதுபெரிதும்பாராட்டுதற் குரியதாகும். ஆனைமுகக்கடவுள் சிவபெருமானது மூத்த திருக்குமாரர். பிரணவப் பொருளாம் பெருந்தகை.

அப்பெருமானை ஆண்டவன் ரன்தந்தருளினரென்பதைவலிவலத்தேவாரம் அறிவிக்கின்றது. 'தனதடி வழிபடு மவரிடர், கடிகண பதிவர அருளினன்' என்பது அது. வினையின் பயனாக வருகின்ற இடும்பையை அகற்றவே கணபதி தோன்றினர். அவர் தாள் பணிந்தால் அவ்வினை நம்மைவிட்டு ஓடுமென்பதில் ஐயமுண்டோ? 20-12-55ல் பிள்ளையார் நோன்பு (விநாயக சஷ்டி) வருகிறது. வழிபாடாற்றி இன்புற்று வாழ்வடைவோமாக.

காஞ்சிபுரத்தில் ஆறுமுக நாவலர் திருநாள்

தமிழ்நாடுசெய்த தவப்பயனாய் யாழ்ப்பாணத்துத் தோன்றிச் சைவமும் தமிழும் வளர அரும் பணிபல புரிந்த சிதம்பரம் ஆறுமுகநாவலரவர்களின் 76-வது குருபூசைவிழா, காஞ்சி மெய்கண்டார் கழகத்தினரால் 5-12-55 திங்கட்கிழமை ஏகாம் பரநாதர்கோயிலில் திருமுழுக்கு, வழிபாடுகளுடன் கொண்டாடப் பெற்றது. கழகச் செயலாளர் திருஞானசம்பந்த முதலியார் 'நாவலரின் சமயத்தொண்டு' பற்றிச் சொற்பொழிவாற்றினர். நன்றிகூறலுடன் விழாச் சிறப்பாக இனிது முடிந்தது.

பாரதி தமிழ்ச்சங்கம் கல்கத்தா,

1955 டிசம்பர் மாத நிகழ்ச்சிகள்: 3உ 'கல்கி' தினம். பல அன்பர்கள் பேசுவார்கள், 17உ 'அணுசக்தியும் சமூக வளர்ச்சியும்' தி ஆர் சுப்பிரமணியம். 10, 11 தேதிகள் பாட்டுப் போட்டி, 24, 25உகள் பாரதி ஜயந்தி, 31, 1-1-56 திருப்பாவை திருவெம்பாவைமாநாடு நிகழும் என்று எஸ். குப்புஸ்வாமி காரிபதரிசி அறிவிக்கிறார்.

வாய்ஸ் ஆப் அமெரிக்காவில் இசையரசு

சென்னை, நவ. 30-

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இசைக் கல்லூரித் தலைவர் தமிழ் இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகரின் விசேஷ இசை விருந்துகளை டிஸம்பர் மாதம் வாய்ஸ் ஆப் அமெரிக்கா வானொலியில் புதன்கிழமை தோறும் கேட்கலாம். பலஆண்டு களாகப் பல்லாயிரக் கணக்கான மக்கள் நேரிலும் ஒலிப்பதிவு மூலமும் கேட்டு மகிழும் இசை பாடும் திரு, தண்டபாணி தேசிகர் வாய்ஸ் ஆப் அமெரிக்காவுக் கென்றே தனியே பல பாடல்களை ஒலிப்பதிவு செய்துகொடுத்திருக்கிறார். இவற்றை டிஸம்பர் மாதத்தில் ஒவ்வொரு புதன் கிழமையன்றும் இந்தியக் கடிகாரப்படி இரவு ஏழரை மணி, எட்டுமணி இவற்றுக்கிடையே 25.26, 42.19 மீட்டர்களில் கேட்கலாம்.

புதன் கிழமைதோறும் ஏழரைமணிமுதல் எட்டுமணி வரையும் ஒன்பதே முக்கால் மணி முதல் பத்தே முக்கால் மணி வரையும் வாய்ஸ் ஆப் அமெரிக்கா ஒலிபரப்பும் தமிழ் ஒலிபரப்பில் செய்திகள், நேயர் தபால், விஞ்ஞான விமர்சனம் தமிழ்த்திரைகானம் முதலியவை உள்ளன.

நோட்டீஸ்

In the District Munseifs Court
Pudukkottai

O. P. 44 of 55

வெங்கிடாச்சாரி —மனுதார்

K. Rajamani Aiyer
—Vakil

திருவேங்கிடத்தம்மாள் வகையரா —கவுண்டர்மனுதார்கள்

இதனால் தெரிவிக்கிறதாவது:- இறந்த P. V. கிருஷ்ணய்யங்காருக்கு வார்சுசர்ட்டிபிகேட் அபேக்ஷித்து மனுதார் மனுக்கொடுத்திருப்பதில் ஆக்ஷேபணைஉள்ளவர்கள் 16-12-55உ காலை 10-மணிக்கு முன் சீப் கோர்ட்டில் ஆஜராகித் தெரிவித்துக்கொள்ளாவிடில் கிரமப்படி மேல்நடத்தப்படும்.

K. ராஜாமணி அய்யர்
வக்கீல்

புதுக்கோட்டை
28-11-55

தொடர்கதை:

வாழ்க்கைப் பாதையில்...?

அழ. கருப்பையா

நண்பன் கண்ணுக்குளெட்டாத தூரத்திலேயிருக்கிறான். நமக்கிருக்கும் வேலையிலே இவன் கடிதம்வேறு கதையாக வளர்கிறது என்று எண்ணலாம். இதோ! கடிதத்தை முடித்துவிடுகிறேன். கடிதத்தைக்காட்டி காஷ்மீரிலிருக்கும் என்னைச் சென்னையிலிருக்கும் செண்பகமுதலியாரிடம் நிறுத்திவிடாதே. எனக்கு இந்நிலையில் உன்னாலியன்ற பொருளுதவி செய்ய முடியாவிட்டாலும் பொல்லாப்புப்பேசாது என் நிலையை எண்ணியாவது இரக்கம் கொண்டு சிறிது மௌனம் காட்டு. அது போதும். என் இதயராணி இன்பரோஜா கிரிஜாவைச் சந்தித்ததும் பாடிவரும் குயிலாய், ஓடிவரும் சிட்டாய், சமாதானப் புறாவாய் அங்கு வருகிறேன். வணக்கம்.

அன்பு ராம்னாத்.

கடிதத்தை மடித்துக் கூட்டிலே போட்டான். சிறிதுநேரம் யோசனைசெய்தான். நல்லவன் ராம்னாத், அவனுக்கு உதவி செய்யத்தான்வேண்டும்; இல்லை, அவன் உனக்குக் காத்திருந்த பசுங்கிளியைக் கொத்திப் போன வல்லூறு. உதவிசெய்யக் கூடாது என்று இடித்துக்காட்டியது உள்மனம். உடுக்கையிழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு என்றது மனச்சாட்சி. திடீரென்று எழுந்து தபால் நிலையத்திற்குச் சென்றான். கொஞ்சம் பணத்தை ராம்னாத்திற்கு மணியார்டர் செய்துவிட்டு வீடு திரும்பினான். இப்பொழுதுதான் அவன் மனம் சாந்தியடைந்தது. பாரம் குறைந்ததாக உணர்ந்தான்.

சேகரன் வைத்தியக் கல்லூரி மாணவன். பத்மினிக்குக்காதல் என்ற மயக்கமருந்தைக் கொடுத்துவிட்டான். கல்யாணம் என்ற ஆபரேசன் செய்ய அவர்கள் பெற்றோர்கள் சம்மதிக்க வேண்டுமே? கல்யாணம் என்ற ஆபரேசனைச் செய்தாலும் பத்மினி வறுமையென்னும் ரணத்தின் வலியைத்தாங்கிக் கொள்ளவேண்டுமே. காதல் என்ற பென்சிலால் ல்லூரியில் எழுதினான்.

உங்களுக்குத் தெரியுமா?

நாசிக்கில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள மத்திய சர்க்காருக்குச் சொந்தமான அச்சுக் கூடத்தில் சகலவிதமான அச்சு வேலைகளையும் செய்வதற்கான நவீன யந்திர சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அச்சுக்கூடமும் முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்களில் ஒன்றாகும்; இதைத்தவிர, தென்னிந்தியாவில் ஒன்றும், பஞ்சாப், பரீதாபாதில் மற்றொன்றுமாக மேலும் இரண்டு அச்சுக்கூடங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

மேற்குக் கடற்கரையில், விரிவானதொரு சர்வே நடத்தி, மத்திய மீன்துறை தொழில்நுட்ப நிலையமொன்றை அங்கே அமைப்பது, இந்தியாவின் மீன்துறை அபிவிருத்தித் திட்டத்தின் முக்கியமானதொரு அம்சமாகும். ஐ. நா. உணவு-விவசாய ஸ்தாபனத்தைச் சேர்ந்த மீன்துறை நிபுணர்கள் இவ்வபிவிருத்தித்திட்ட வேலைகளில் உதவிபுரிந்து வருகின்றனர். நடப்பு வருஷத்தில் அத்தகைய நிபுணர்கள் எட்டுப் பேர் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

இந்தியாவில் இன்று சிசுநலத் துறையில் சேவைபுரியும் முதன்மையான ஸ்தாபனம் சிசுநல இந்தியக் கௌன்சிலாகும்; இது 1952—ம் ஆண்டின் ஒரு சுயேச்சை ஸ்தாபனமாகப் பதிவு செய்யப்பட்டது. புதுடில்லியிலிருந்து பணியாற்றும் இக்கௌன்சிலுக்குப் பல ராஜ்யங்களிலுமாக 20கிளைகள் இருக்கின்றன. ஜினிவாவிலுள்ள சிசுநல சர்வதேசயூனியனுடன் இதுஇணைக்கப்பட்டிருக்கிறது.

சந்தா நேயர்களுக்கு!

ஐயன்மீர்!

கடந்த புரட்டாசி வரையுள்ள தங்கள் சந்தாப்பாக்கிகளை அனுப்பித்தரும்படி 10-10-55ல் கார்டுகள் எழுதியிருந்தோம். அதன்படி பாக்கியுள்ள தொகையை அனுப்பித்தரும்படி மீண்டும் வேண்டுகிறோம்.

அன்புள்ள,
அமைச்சர்

ஆசிரியர் பா்லகவி இராமநாதன் செட்டியாரால் தேவகோட்டை செட்டிநாடுஅச்சகத்தில் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.

உ

செட்டிநாடு

வார இதழ்

மலர்-25 இதழ்-10
மன்மத- மார்கழி - 7
22-12-55
வியாழன் வெளியீடு
தேவகோட்டை
ஆண்டுச்சந்தா ரூ 4
வெளிநாடு ரூ 7

ஆசிரியர்:- பாலகவி இராமநாதன்செட்டியார்



பாலை

தலைவன் பொருள்வயிற் பிரிந்ததற்கு வருந்திய தலைவியைத் தோழி ஆறுதல் கூறித் தேற்ற, அதனால் ஆறுதல் அடையாத தலைவி எதிர் மொழிந்தது.

மரஞ்சா மருந்துங் கொள்ளார் மாந்த, ருரஞ்சாச் செய்யா ருயர்தவம் வளங்கெடப், பொன்னுங் கொள்ளார் மன்னர் நன்னுத, னாந்த முண்மையி னுளமே யதனாற், றாஞ்செய் பொருளள வறியார் தாங்கசிந், தென்றூழ் நிறுப்ப நீளிடை யொழியச், சென்றோர் மன்ற நங் காதல ரென்று, மின்ன நிலைமைத் தென்ப, வென்னோரு மறிபவிவ் வுலகத் தானே **226.**

:-கணிபுன்குன்றனார்

அழகிய நுதலையுடையவளே! இவ்வுலகத்து மாந்தர்கள் மரம்பட்டுப் போகும்படி அதன்கண் உள்ள மருந்தைக் கொள்ளமாட்டார்கள். வலிமை முழுவதும் கெடும்படி உயர்ந்த தவத்தைச் செய்யமாட்டார்கள், அரசர்கள் குடிகளின் பொருள்வளம்கெடும்படி வரி வாங்கமாட்டார்கள். இவற்றைஉணர்ந்து தாம்வருந்தி, வெயில்நிலை கொள்ளநீண்டசுரத்துநெறிபின்னேயொழியநம்மைப்பிரிந்துசென்ற காதலர் தாம் ஈட்ட விரும்பும் பொருள்காரணமாக நம்மைப் பிரிவாராயின் நாம் இறந்து படுவோமென்பதை அறிந்தவரல்லர். ஆடவரியற்கை என்றும் இவ்வாறேயென்பார்கள். இதனை யாவரும் அறிவர்.

பசுந்தமிழ் மலர்

பாலகவி

மன்றப் பலவின் சுளைவிளை தீம்பழ
முண்டுவந்து மந்தி முலைவருடக்-கன்றமர்ந்
தாமா சுரக்கு மணிமலை நாடனை
யாமாப் பிரிவ திலம்

:-ஐந்திணை யெழுபது. 4

உரை:- 'மந்தி - குரங்கானது, மன்ற-மன்றின் கண்ணே யுள்ள, பலவின்-பலா மரத்தினது, சுளை-சுளைகள், விளை - முதிர்ந்துள்ள, தீம்பழம் - இனிமையான பழத்தை, உண்டு-தின்று, வந்து -நீர்வேட்கையுடன் கீழேயிறங்கி வந்து, ஆமா - அந்த மரத்தின் அடியில் தங்கியிருக்கின்ற காட்டுப்பசுவினது, முலை-பால்மடியை, வருட-தடவிக்கொடுக்க, கன்று அமர்ந்து - கன்றினிடத்துப் போல அன்புவைத்து, சுரக்கும்-பாலைச் சுரந்து கொடுக்கின்ற, அணி- அழகுமிகுந்த. மலை நாடனை - மலைநாட்டை யுடைய தலைவனை, யாமா - உயிருள்ளவரை நாமாக, பிரிவது-பிரிந்து வாழ்வதை, இலம்-மேற்கொள்ள மாட்டோம்' என்பதாகும்.

சங்கமருவிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் நாலடியார், நான்மணிக்கடிகை, இனியது நாற்பது, இன்னா நாற்பது, களவழி நாற்பது, கார் நாற்பது, திணைமொழியைம்பது, ஐந்திணையைம்பது, ஐந்திணையெழுபது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், இன்னிலை, முதுமொழிக்காஞ்சி, ஏலாதி என்பனவாகும். பத்துப்பாட்டும் எட்டுத்தொகையுமாகிய மற்றைச் சங்க இலக்கியங்களை மேற்கணக்கு நூல்கள் என்று சொல்லுவதுண்டு.

கீழ்க்கணக்கு நூல்களனைத்தும் வெண்பாயாப்பினால் அமைக்கப்பெற்றவை. இவை,மதுரைக் கடைச்சங்கப் புலவரால் இயற்றப்பெற்றன என்பதையும், வெண்பா யாப்பே இவற்றிலுள்ளன என்பதையும் 'மாப் புலவ

ரெல்லாருமாக்கூடன் முன்னிருந்து, பாற்படுத்த தென்றமிழின் பாகான்கின்-வாய்ப் புடைத்தாப், பண்பாய்ந்துரைத்த பதினெட்டுக்கிழ்க்கணக்கும், வெண்பாவின் பாலுரைத்தார் மிக்கு' என்ற வெண்பாவால் அறியலாம்.

மேற்கணக்கு நூல்களனைத்தும் பெரும்பான்மையும் நான்கிற்கு மேற்பட்ட அடிகளைக் கொண்ட வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, வாதிய யாப்புக்களால் ஆக்கப்பெற்று ஐம்பது முதல் ஐந்நூறு வரையுள்ள பாடலெண்ணிக்கையைக் கொண்டு, அறமும், பொருளும், இன்பமும், வீடுமாகிய உறுதிப்பொருள்கள் நான்கனுள் முதல்மூன்றினையும் விரித்தும் வீட்டைச்சுருக்கியும் கூறுவனவாய் அமைந்துள்ளன.

கிழ்க்கணக்கு நூலுக்கு இலக்கணம் கூறவந்த பன்னிருபாட்டியல் 'அடிநிமிர் வில்லாச் செய்யுட் டொகுதி, அறம்பொருளின்பம் அடுக்கிய வ்வகைத் திறம்பட வருவது கிழ்க்கணக்காகும்' என்றுஉரைத்தது சங்கப்புலவரால் இயற்றப்பெற்ற கிழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டனுள், கார் நாற்பது, ஐந்திணையைம்பது, திணைமொழியைம்பது, திணைமொழியெழுபது திணைமாலை நூற்றைம்பது என்னும் ஐந்து நூல்களும் அகப்பொருளே பற்றிக் கூறுவன. திருக்குறளும் இன்னிலையும் அகமும் புறமுமாகிய இருவகைப் பொருளையும் உரைப்பன. ஏனைய நூல்கள் புறப்பொருளையே பேசுவனவாம்.

அகப்பொருள் நூல்கள் ஐந்தனுள் ஒன்றாகிய கார் நாற்பது, கார் காலத்து மீண்டு வருவேனென்று வினைவயிற் சென்ற தலைவன், குறித்த பருவம் வந்தும் வாராமையால், பிரிவாற்றாது தலைவி வருந்துவதைக் கூறும் நாற்பது வெண்பாக்களை உடையது. ஆகவே இதன்கண் முல்லைத்திணையொன்றே அமைந்துள்ளது. எனவே ஐந்து திணைகளையும் ஒருசேரக் கூறுகின்ற நூல்கள் மற்றை நான்குமேயென்பது அறியத் தக்கதாகும்.

இவற்றுள் ஐந்திணையெழுபது குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற திணைவைப்பு முறையை உடையது. குறிஞ்சியிற் புணர்ந்த தலைவனும் தலைவியும் முல்லையில் இல்வாழ்க்கை நடாத்திப் பாலையில் தலைவன்

பிரிய மருதத்தில் தலைவி ஊடி நெய்தலில் அவள் இரங்குவதாகிய தொடர்பு, இந்நூலின் திணைவைப்புமுறையால் புலப்படுகின்றது.

எழுபது வெண்பாக்களைக் கொண்ட இந்நூல், திணையொன்றிற்குப் பதினன்கு செய்யுட்களை உடையதாயிருக்கின்றது. இந்நூற் பாடல்களில் இடைச் சங்க காலத்தில் தோன்றி, இன்றுவரை நின்று நிலவி வருகின்ற தொல்காப்பிய நூலிற் காணப்பெறும் பல அரிய துறைகள் விளங்குகின்றன. எழுபது பாடல்களையுடைய இந்நூலில் இப்பொழுது கிடைப்பன அறுபத்தாறு பாடல்களே. முல்லையில் இரண்டும் நெய்தலில் இரண்டுமாக நான்கு செய்யுட்கள் இப்போது மறைந்துவிட்டனவென்று தெரிகிறது.

மக்களது இன்பத்திற்கு உயிர்நிலையாயுள்ள அன்பிணைச்சுருக்கமாகவும்விளக்கமாகவும் இனிமையுற எடுத்தியம்புஞ் சிறப்பு இந்நாலுக்குஉண்டு. இதனை இயற்றிய ஆசிரியர் 'மூவாதியார்' என்பவர்.

அறிவாலும், திருவாலும் அன்ன பிறவற்றாலும் சிறந்த கட்டிளங்காளையொருவன், மலைச்சாரற் சோலையில் மலர் கொய்ய வந்து பாங்கியரைப் பிரிந்து தனித்து நின்ற நங்கையொருத்தியைக் கண்டான். ஊழ்வினை கூட்ட ஒருவரையொருவர் நாடிக் கலந்து இன்புற்றனர்கள். பிறரறியாது கூடிய அவர்கள் கூட்டு, மேலும் சில நாட்கள்வரை அவ்வாறே யாருமறியாமல் நிகழ்ந்து வந்தது.

தலைவன் தலைவியரது கூட்டுறவால் வந்த வேறுபாட்டைத் தலைவனது உயிர்ப்பாங்கனும் தலைவியது உயிர்த்தோழியும் அறிந்து உண்மையை வினவ, அவர்பால் நிகழ்ந்ததைக் கரவாது கூறும் பொறுப்பு தலைவன் தலைவியரைப்பற்றிநின்றது. அது முதல் அவர்கள் கூட்டிற்குப் பாங்கனும் பாங்கியும் உதவியாளரானர்கள். தோழியின் உதவிகொண்டு பகற் குறிக்கண்ணும் இரவுக்குறிக் கண்ணுமாகத் தலைவன், தலைவியின்பால் இன்பம் நுகர்ந்து வந்தான்.

வரைந்துகொள்ளாது களவில் நிகழுகின்ற புணர்ச்சிக்கு வரும் இடையூறுகளையும் பிரிவால் உண்டாகின்ற துன்பத்தையும் நினைந்து விரைவில் திருமணம் செய்து கொள்ளும்படி தோழி தலைவனை வற்புறுத்தி

னாள். தலைவியை மணந்துகொள்ளுதற்குப் பரிசம் வேண்டுமாதலின், பொருளீட்டுதற்குத் தலைவன் வேற்று நாட்டிற்குச் சென்றான். அவன் மீளுவதற்குக் குறித்த பருவம் வந்தும் அவன் வந்துசேரவில்லை.

பிரிவாற்றாமையால் தலைவி பெரிதும் வருந்தினாள். அவளைப் பல்லாற்றானும் ஆற்றுவிக்க முயன்ற தோழி, தலைவனது சொல்லுறுதியின்மையை எடுத்துக்காட்டி அவனியல்பைப் பழித்துக்கூறினாள். அவனது பிரிவால் சாக்காடனைய துன்பத்தைத் தலைவி அநுபவித்துக் கொண்டிருந்தாளென்றாலும், அவனைப்பற்றித் தோழி கூறிய பழிமொழிகள் அவளைப் பெரிதுஞ் சுடத்தொடங்கின. 'எழுதுங்காற் கோல்காணாக் கண்ணேபோற் கொண்கன், பழிகாணேன் கண்ட விடத்து' என்பதல்லவா தமிழ் மரபு!

'கல்லானாலுங் கணவன் புல்லானாலும் புருடன்' என்று காதல்கொண்ட கணவனைக் கடவுளாக எண்ணினாள் தலைவி. மறக்கருணையாலும் கடவுள் உயிர்களை ஆட்கொள்ளுவார் என்னும் உண்மையை அறிந்த சான்றோர்கள் வாழ்க்கையில் வரும் துயர நிகழ்ச்சிகளைக் குறித்து வருந்தமாட்டார்கள்.

அதுபோலத் தலைவி, தலைவனது காலநீட்டிப்பும் தனது நன்மையைக் குறித்ததாகத்தானிருக்குமென்று கருதினாள்,

பிரிந்துசென்று வருத்தந் தந்த தலைவனை 'மந்திக்குப் பால் சுரக்கும் பசுக்கள் நிறைந்த மலைநாடனென்று கூறி அவனது நல்லியல்பைத் தோழிக்குப் புலப்படுத்துகின்றாள் தலைவி. உயிருள்ளவரை அவனைப் பிரியமாட்டேனென்று தலைவி கூறும் துணிவுமொழியில் அவளது திண்மை நன்கு புலப்படுகின்றது. தனக்கு எவ்வாற்றானுந் தொடர்பில்லாத மந்தியின் வருடலுக்குப் பாலைச் சுரக்கின்ற பசுக்களையுடைய மலைநாடன், உள்ளும் புறமும் ஒத்துக்கூடிய என்பால் அன்பில்லாதிருக்கின்றானென்பது எவ்வாறு பொருந்துமெனத் தலைவி கேட்பதைப்போல இருக்கின்றன, தலைவனது மலையைத் தலைவி அறிவிக்கக் கூறுகின்ற சொற்கள்!

குறிஞ்சி நிலத்துப் பலாப்பழத்தைத் தின்ற குரங்கு முல்லை நிலத்துப் பசுவின்பாலைக்குடிக்க முற்பட்டதென்பது குறிஞ்சித் திணையின் களவொழுக்கம்நீங்கி முல்லைத்திணையின் இல்லறவொழுக்கம் நிகழவேண்டுமென்பதையும் குறிப்பால் அறிவுறுத்திக் கொண்டிருக்கிறதல்லவா?

சைவாலயங்களில் சம்ஸ்கிருத அர்ச்சனையே வேண்டும்.

சித்தாந்த பண்டித பூஷணம் ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை

(முன்தொடர்ச்சி)

ஆகவே சம்ஸ்கிருதம் பாரத தேசத்துக்குச் சொந்தமொழியே யெனவும், வந்தமொழியன்றெனவும் அறிக. என் புத்தகத்திலும் அவ்விளக்க முண்டு.

ஆனால் அம்மொழியும் அக்கூட்டத்தினரும் இத்தேசத்திற்கு வந்தேறிகளென மேலை நாட்டினர் சிலர் முதன் முதலாகச் சரித்திரம் எழுதினர். பின் வந்த அவரினத்தாரெழுதியதும் அதுவே. இத்தேசத்தினரைப் பிரித்தாள வேண்டுமென்பதே அவர் நோக்கம். இத்தேசத்தவராகிய சரித்திரக்காரருங்கூட கெதானுகெதிக நியாயமே பற்றி அவர்பின் சென்றனர். 'முதற்கோணல் முற்றுங் கோணல்' என்பது பழமொழி. வரலாற்று நூல்களெல்லாம் அப்படியே முடிந்தன. ஆகலினன்றோ

'And what your European Pandits say about the Aryans swooping down from some foreign land. snatching away the lands of the aborigines, and settling in India by escterminating them, are all pure nonsense, foolish talk! strange, that our Indian seholars, too say amen to them; and all these monstrour lies are being taught to our boys! this is very bad indeed. In what Veda, in what Suktah do you find that the Aryans came to India from a foreign country? Where do you get the idea that they slaughtered the wild aborigines? What do you gain by talking such nonsense?"

என இடித்துக்கூறி அச்சரித்திரக்காரரின் யோக்கியதையை அம்பலப்படுத்தினர் விவேகானந்தர். ஆயினும் சரித்திரத் துறையை அவர் வெறுத்தாரெனச் சொல்லமுடியாது. துவேஷபுத்தியுடையார் கையில் அத்துறை மிகுதியும் அகப்பட்டது. அவர் அப்புத்தியைப் பரப்புவதற்கு அதைப் பெருஞ் சாதகமாக்கிக் கொண்டனர். நாட்டை உருக்குலைப்பன அவரெழுதிக் குவிக்

ளும் அபத்த சரித்திர புத்தகங்களே. அவற்றைத் தொலைக்க வேண்டுவது தெள்ளறிஞனின் கடன். விவேகாநந்தர் அக்கடனை யாற்றினர். மேலும் அச்சரித்திரபுத்தகங்களோடியைந்த சாத்திரப் பகுதிகளே உண்மை. மற்றப் பகுதிகளெல்லாம் பொய் என அத்துவைவஷிகள் பிரசங்கிக்கவும் துணிந்துவிட்டனர். அது 'ராட்டு வருகிறது, தேரை விலக்கு' என்பதுபோலிருக்கிறது. சம்ஸ்கிருதத்தில் வரலாற்றையுந் தரத்தையும் சாத்திரம் அன்றே அளந்து நிச்சயித்துப் போற்றியுள்ளது. நிரந்தரமான உண்மையைக் கூறுவதே சாத்திரத்தின் இலக்கணம். ஆகலின் அதனேடு இயைந்துள்ள வரலாற்றுப் பகுதியே கொள்ளத்தக்கது. பிறவெல்லாம் துச்சமெனத் தள்ளவே படும்.

தமிழ்மொழியே கிராவிட பாஷையெனப்படும். திராவிடமாபாடியம், திராவிடப்பிரகாசிகை யென்ற நூற்பெயர்கள் காண்க. 'எவ்விளையு மோப்புதலாற் றிராவிட மென்றியல் பாடை' என்றது காஞ்சிப் புராணம். சம்ஸ்கிருதமோ ஆரியமெனவும்படும். 'ஆரியமுந் தமிழும்' என்றது திருமுறை. தமிழர் அவ்விரு மொழிகளுக்கும் உரியராகலின் திராவிடரும் ஆரியரும் ஆவர். ஆனல் தமிழ் மன்னர் ஆரியப்படையை வென்றாரெனச் சங்க நூல்களில் அங்கங்கே வரும். அவ்வாரியப்படை யாவது யாது? அதிலுள்ள ஆரியர் என்பது தமிழ்ச்சொல். தீயவர் என்பது அதற் கருத்தம். ஆர்யா: என்பது சம்ஸ்கிருதம். நல்லவர் என்பது அதற்குப் பொருள். தீயவரென்ற பொருளும் அதற்குண்டென அம்மொழி கூறவில்லை. ஆனல் தமிழ்கண்டு அவ்விரு சொல்லையும் ஒன்றாக்கி அதற்கு அவ்விரண்டு பொருளையுங் கூறிவிட்டது. ஆரியப்படையென்பது தமிழர்கூறிய தொடர். யாருமே தம் பகைவர் தம்மவரே யாயினும் அவரைத் தீயவரென்பதியல்பு. அப்படியே தமிழர் தம் பகைவரின் படையை ஆரியப்படை யென்றனர். ஆகலின் ஆரியப்படை யென்பதிலுள்ள ஆரியர் என்ற தமிழ்ச் சொல்லும், ஆரியபாஷை யென்பதிலுள்ள ஆர்யா: என்ற சம்ஸ்கிருதச் சொல்லும் வெவ்வேருதலறிக.

தொல்காப்பியம் இரண்டாயிர வருடங்களுக்கு முந்தியதென்பது ஒருமுடிவு. அது எத்

(10ம் பக்கம் பார்க்க)

உ
சிவமயம்
பாலருவாயர் துணை



அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

செட்டிநாடு

மன்மத மார்கழி 7

ஆருத்திரா தெரிசனம்

உலக இயக்கத்திற்குக் காரணமான, ஐந்தொழிற் பெருங் கூத்தாடிக்கொண்டிருக்கின்ற ஆண்டவனுக்குரிய நாள் ஆதிரை நாளாகும். பிறப்பிறப்பில்லாத அப்பெருமானைத் திருவாதிரையிற் பிறந்தானென்று சொல்லி உலகம் உபசரிக்கும். அதனால் அவனை ஆதிரையான் என்றும் சொல்லுவதுண்டு.

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதியான அவனை ஆதிரையான் என்று கூறுவதற்குக் காரணமென்ன என்ற ஐயம் முத்தொள்ளாயிர ஆசிரியருக்கு உண்டாயிற்று. அவர்வாக்கிலிருந்துவெளிப்பட்டது 'மன்னிய நாண்மீன் மதி கனலி யென்றிவற்றை, முன்னம்படைத்த முதல்வனைப்பின்னரும், ஆதிரையான் ஆதிரையான் என்றென்றயருமால், ஊர்திரைநீர் வேலி உலகு' என்ற பாடலாகும்.

ஒரு பொருளை உண்டாக்குகின்றவன், அது தோன்றுவதற்கு முன்னமேயே உள்ளவனாய் இருப்பானென்பதை அறியாதார் உளரோ? நாளும் கோளுமாதிய பொருள்களைப் படைத்து முதல்வனாகவிளங்கும் ஆண்டவனை அப்பொருள்களில் ஒன்றாகிய ஆதிரைக்குரியவனென்று சொல்லி உலகம் மயங்குகின்றது என்று அவர் கூறினார்.

விண்மீன்கள் இருபத்தேழனுள் ஆண்டவனைப்போல இடையருது ஆடிக்கொண்டிருப்பது ஆ தி ரை மீன். அ வ னு டை ய செம்மை நிறத்தை அதுவும் உடையதாயிருக்கின்றது. எனவே இறைவனோடு ஒரு பு டை யொப்புடைமையால் ஆதிரையைஅவனுக்குரிமையாக்கி னரோ எ ன் று கருதஇடமுண்டு.

மாதங்களிற் சிறந்தது மார்கழி மாதம். அ ந் த மாதத்து நிறைமதி நாளில் வருவது தி ரு வா தி ரை. அதன் ஒளி உலகத்திற் பரவுகின்ற வேளையில் முதன்மைத் தன்மை வாய்ந்த இறைவனை வ ழி படுதல் அருளை எளிதிற் பெ று தற்கு ஒரு நல்ல வழியென்று ந ம் முன்னோர் கண்டு கூறினர்.

ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரந் திருநாமம் பாடுவதும் பரவுவதும் நமது நன்மையின் பொருட்டாகத்தான். அவ்வொன்றுமில்லாத ஆண்டவன் தி ல் லை ப் பதியில் ஆதியுமுடிவுமில்லா அற்புதக் கூ த் த ாடிக் கொண்டிருப்பதும் நம்பேரருட்டாகத்தான் எ ன் பது உணரத்தக்கதாகும்.

அவரது தி ரு க் கூ த் தின் உட்கிடையை 'மாயை த னை யு த றி வல்வினையைச் சுட்டுமலஞ், சாய வமுக்கியரு டானெடுத்து-நேயத்தா, லானந்த வாரிதியி லான்மாவைத் தானழுத்தல், தானெந்தை யார் பரதந் தான்' என்று உண்மை விளக்கம் உணர்த்துகின்றது.

பி ற வி யெ னு ம் பொல்லாப் பெருங்கடலைநீந்திப் பேரின்பமாகிய துறையை அடைவதற்குக் கூ த் தப்பெருமானை இடையருது நினைவதும் பாடுவதும் வ ழி ப டு வதும் சிறந்த சாதனங்களாகும். 'தினைத் தனையுள்ள தோர் பூ வி னி ற் றே னுண்ணுதே,நினைத்தோறுங் காண்டோறும் பேசுந்தோறு மெப்போது, மனைத்தெலும் புண்ணெக வானந் தத் தேன்சொரியுங், குனிப்புடையானுக்கே செ ன் று தாய் கோத் தும்பீ' என்பது திருவாசகம். வரும் **29-12-55** ஆ ரு த்திரா தெரிசன நாளில், இனித்தமுடைய எ டு த்த பொற்பாதத்தை எத்தி இ ன் பு று வோமாக.

(7ம் பக்கத்தொடர்ச்சி)

தனை யாயிர வருடங்களுக்கு முந்திய தாயினுமாகுக: அதற்கு முந்தியே தமிழகத்திற் சம்ஸ்கிருத முண்டு. அது தமிழகத்து வந்தமொழியென அந் நூலில் சொல்லவில்லை. அம்மொழிச் சொற்களைத் தமிழ் நூல்களில் வழங்குதற்கு அதுவே விதியும் வகுத்தது. அச்சொற்களைத் திசைச்சொற் கூட்டத்தினும் அது சேர்த்திலது. அம்மொழி வேதமும் அந்நூலில் இடம்பெற்றது. அங்ஙனமாகப் பின்வந்த சங்கநூல்களும் அம்மொழியின் சம்பந்தத்தையும், சகாயத்தையும் பெற்றனவே யென்பதிற் சந்தேகமில்லை.

தொல்காப்பியம் என்ற சொல்லுக்கு இலக்கணங் கூறவந்த ஆசிரியர் அதனைக் கூறியதோடமையாது ஐந்திரம் முதலிய வடசொற்போல் வந்ததென்றுங் கூறி விளக்கினர்.

சங்கப்புலவர் தாம் ஆக்கிய நூல்களின்பொருளை விளக்குதற்குத் தமிழ்ச்சொற்களே போதுமானவையாயிருந்தன.

(தொடரும்,

திருத்தம்

மலர்25, இதழ் 9, பக்கம்6, பத்தி2, 'இனி' என்று தொடங்கும் பாரா, வரி6ல் 'அக்கூட்டத்தினர்தான்' என்பதற்குப்பின் 'அச்சாராரா யிருக்கவேண்டும். அவர்' என்பதைப் புகுத்தி வாசிக்க.

மாஜிஸ்திரேட்டுகள் விதிக்கும் தண்டனை

[சென்னை டிச. 19-

கிரிமினல் சட்டத்தில் சமீபத்தில் செய்யப்பட்டுள்ள திருத்தத்தின்படி மாஜிஸ்திரேட் விதிக்கும் தண்டனையை எதிர்த்து தற்பொழுதுபோன்று மாவட்ட மாஜிஸ்திரேட்டுகள் சப் டிவிசனல் மாஜிஸ்திரேட்டுகள் ஆகியோருக்கு அப்பில்செய்யாமல் செஷன்சு நீதிமன்றத்திற்கே அப்பீல் செய்யவேண்டும் என்று அரசாங்கம் வெளியிட்டிருக்கும் பத்திரிகைக் குறிப்பு கூறுகிறது.

இப்பத்திரிகைக் குறிப்பு மேலும் பின்வருமாறு கூறுகிறது.

மேற்கண்டவிதமான அப்பீல்கள் பற்றி விசாரித்து முடிவு

செய்வதற்காகச் சௌகரியமான ஏற்பாட்டைச் செய்வதற்குஏற்ற முறையில் கிரிமினல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

இதுபற்றி ஆலோசனை செய்யப்பட்டு முடிவு செய்யப்படும் வரை இரண்டாவது வகுப்பு மூன்றுவது வகுப்பு மாஜிஸ்திரேட்டுகள் அளிக்கும் தண்டனையை எதிர்த்துச்செய்யப்படும் அப்பீல்களை விசாரிப்பதற்கு மட்டும் எல்லா மாவட்ட மாஜிஸ்திரேட்டுகளையும் துணை செஷன்சுநீதிபதிகளாகநியமனம் செய்வதன்மூலம் தற்பொழுதைய நிலைநீடிக்கப்படும். இந்த ஏற்பாடு 1956 சனவரி முதல் தேதியிலிருந்து அமுலுக்கு வரும்.

சிதம்பரத்தில் மாநாடு

சிதம்பரம் டிச. 20

கிழைநாட்டு மொழிகள் மாநாடு டிசம்பர்26ம்தேதியன்று இங்கு தொடங்கும். மாநாட்டிற்கு இந்தியக்குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ் இராதாகிருஷ்ணன் தலைமை வகிப்பார்.

இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் சுமார் 500 பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொள்வார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாநாட்டில் 14வகை மொழிப் பண்பாடுகள் குறித்து விவாதிக்கப்படும். திராவிடக் கலாசாரம் பற்றியும் நடைபெறும்ஆராய்ச்சியுரைகள் மாநாட்டில் முக்கிய இடம்பெறும். ஒவ்வொரு மொழி பற்றியும் ஏராளமான ஆராய்ச்சியுரைகள் மாநாட்டு அமைப்பாளருக்கு வந்து சேர்ந்துள்ளன.

பேராசிரியர் ஆர் பி சேதுப்பிள்ளை தலைமையில் நடைபெறும் திராவிடக்கலாசாரப் பகுதியில் பலமொழி நிபுணர்கள் மாநாட்டில் பங்குபெறுவார்கள். வடமொழி மேதைகளும் இம் மாநாட்டில் கலந்து கொள்வார்கள்.

பேராசிரியர் தெ பொ மீனாட்சி சுந்தரனாரைத் தலைவராகக் கொண்ட தமிழ்மொழி ஆய்வரங்கில் ஏராளமான தமிழ் அறிஞர்கள் பங்குபெற முன்வந்துள்ளனர்.

மாநாட்டில் இசையரசு எம் எம். தண்டபாணி தேசிகரின் இன்னிசைவிருந்துநடைபெறும். நடனக்கலை நிகழ்ச்சி யொன்றும் மாநாட்டு நிகழ்ச்சிநிரலில் இடம் பெறும்.

நோட்டீஸ்.

In the D. M. Court
Pudukkottai
O. P. No 47 of 1955

பனையப்பட்டியிலிருக்கும் எ. க. சுப. ராம. ராமநாதன் செட்டியார்1, நல்லகருப்பன் செட்டியார்2 —மனுதார்கள்

ஷெ்யூர் S. S. சொக்கலிங்கம் செட்டியார்—கவுண்டர்மனுதார்

இதனல் தெரிவிப்பதாவது: மேற்படி கவுண்டர் மனுதாரின் சம்சாரம் இறந்து போன மீனுக்ஷிஆச்சி பேருக்கு புதுக்கோட்டை இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கிலும் இந்தியன்பாங்கிலும் உள்ள Fixedடிபாசிட்தொகைகளைவசூல்செய்வதற்குவாசு சர்ட்டிபிகேட் வேண்டி மனுதார்கள் மனுக்கொடுத்து விசாரணைக்கு டயம் 5-1-1956 ஏற்பட்டிருப்பதால் ஆக்ஷேபிக்கிறவர்கள் அன்று காலை 10மணிக்கு ஆஜராகித் தெரிவித்துக்கொள்ளவும்.

K. கோபாலாச்சாரியார்

புதுக்கோட்டை 14-12-55 } மனுதார்கள் அட்வகேட்

நன்கொடை ரூ 5001

அணிமையில் தாய் நாட்டில் தமிழகத்தில் பெரும்புயலாலும் அதையடுத்துப் பெரும் வெள்ளத்தினலும் பாதிக்கப்பட்டுள்ளோருக்குச் சிங்கப்பூர் நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கத்தினர் ரூ 5,001 ரூபாய் ஐயாயிரத்துஒன்று நன்கொடையை சென்னைராஜ்ய முதலமைச்சர் திரு காமராஜ் நாடார் அவர்களுக்கு அனுப்பியுள்ளனர்.

வரப்பெற்றேம்

திருவெம்பாவை: திருப்பள்ளியெழுச்சி:- மன்னர்குடி அருள்நெறித் திருக் கூட்ட வெளியீடு எண் 1. நல்லதாளில் அழகாக அச்சிடப்பெற்றுள்ளது.

இறைவணக்கப்பாக்கள்: வடிவீசுவரம் மெய்ந்நெறிக்கழக வெளியூடு. தேவார திருவாசக முதலிய அருள் நூல்களிலிருந்து சில திருப்பாடல்களைப் பொறுக்கியெடுத்துப் பாராயணஞ்செய்வதற்குதவியாக இது வெளியிடப்பெற்றுள்ளது.

கல்கத்தா
பாரதி தமிழ்ச் சங்கம்

மகாகவி பாரதியின் ஜயந்தியும், திருப்பாவை திருவெம்பாவை ஆறங்க மாநாடும்நாளது டிசம்பர் 25ம் தேதிமுதல் ஜனவரி 1ம் தேதிவரை சிறப்புறக் கொண்டாடப்படும். வங்கத்தில் பிரபல வழக்கறிஞர் ஸ்ரீ கே. பி. சைத்தான் அவர்கள் விழாவை ஆரம்பித்து வைப்பார்கள். திருச்சி 'சிவாஜி' ஆசிரியர் திரு லோகசீதாராம், புதுடில்லி சுந்தர், திருச்சி எழுத்தாளர் சங்கச் செயலாளர் திரு எ எஸ் ராகவன், சிறுகதை ஆசிரியர்'மாயா' ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

டாக்டர் ராஜா ஸர் அண்ணாமலைச்செட்டியார் அவர்களின் திருவுருவப்படத்தினை ராஜ்ய சபை உறுப்பினர் திருச்செங்கோடு எஸ் பட்டாபிராமன் அவர்கள் திறந்துவைப்பார்கள்.

திருப்பாவை திருவெம்பாவை விழாவை மேற்குவங்க இலக்கிய மேதை டாக்டர் காளிதாஸ்நாக் அவர்கள் ஆரம்பித்து வைப்பார். தேசீய நூல்நிலையக் காப்பாளர் திரு பி எஸ் கேசவன், வங்க இலக்கியமேதை சாமி பூஷண்தாஸ் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.



தொகுப்புத் திருக்குறள் மூலமும் உரையும்:- தொகுப்பு ஆசிரியர் செட்டிபாளையம் 'சித்திரகவி, கவிசூடாமணி ரா. நா. கல்யாணசுந்தரக் கவுண்டர். விலை ரூ 2-8-0. பழமைச் சிறப்பைக் கிழமையோடு உணர்ந்து கடைப்பிடிக்கும் பண்பாடுடைய இவ்வாசிரியர், திருக்குறளின் மேன்மையைப் புலப்படுத்த இந்நூலைத் தந்துள்ளாரென்று சொல்லுவதோடு எண்ணற்றபல தலைப்புக்களில் வைத்துக்காணத்தக்க உட்கிடையையுடையது திருக்குறளென்னும் பேருண்மையை உள்ளங்கை நெல்லிக்கனியாகப் புலப்படுத்திவிட்டாரென்றும் கூறுதல் வேண்டும். ஆசிரியரது அறிவாராய்ச்சித் திறத்தினையும் பள்ளி மாணவர் முதல் பலருக்கும் பயன்படத்தக்க நற்செயலில் ஈடுபட்ட பண்பினையும்தமிழுலகம்பெரிதும் பாராட்டுமென்பதில் ஐயமில்லை.

இந்திய கிராமிய



இந்திய கிராமிய சங்கீத வரலாறு இந்திய மக்களின் வாழ்க்கைச் சரித்திர வரலாற்றின் பிரதிபலிப்பே ஆகும். மக்களின் உண்மையான பண்பைஎடுத்துக் காட்டுவதற்கு அவர்களின் கிராமிய சங்கீதத்தையும், கிராமியக் கலையையும்போல் வேறு சிறந்த சாதனம் இல்லை என்றுகூறலாம். ஏனென்றால், பரம்பரை பரம்பரையாக வந்துள்ள பண்பும் மரபும் கிராமியப்பாடல்களிலும் கலைகளிலும்ஆழமாய்ப்பொதிந்து கிடக்கும்.

சாஸ்திரீய சங்கீதமும் கலையும் கூடக்கிராமிய சங்கீதத்திலிருந்தும் கலையிலிருந்துமே உருவானவை என்று கூடக் கூறலாம். ஹிந்துஸ்தானி சங்கீதத்தைப் பொறுத்தமட்டில் தம்மார், துருவத், தும்ரி, தப்பா ஆகியவை கிராமிய சங்கீதத்திலிருந்து உதித்தவைதான்.

கிராமிய சங்கீதம் நவ நாகரீக நகரவாழ்க்கையால் பாதிக்கப் படாமல் இன்னும் தன் இயற்கைப் பண்பைக் காப்பாற்றி வந்திருக்கிறது. பணக்காரர் ஏழை என்ற வேறுபாடில்லாமல் அவை பொதுத்தன்மை பெற்றிருக்கின்றன.

தமிழ்நாட்டில், கும்மி, குரவை, பள்ளு, ஏற்றப்பாட்டு முதலியவை பிரபல கிராமிய சங்கீதப் பிரிவுகளாகும். இலக்கியங்களிலும், நாடகங்களிலும், சாதாரண வாழ்க்கையிலும் அவை சகஜமான இனங்களாகும். இந்தியாவின் இதர பகுதிகளில் கர்பா, கஜ்ரி, சைத்தி, மாஹியா, பங்க்ரா, லாவணி, பாவ்டா முதலிய பலவகைக்கிராமிய சங்கீதங்கள் இருக்கின்றன. ஆனால் அவைகளிடையே பல ஒற்றுமைகளையும் காணலாம்.

வாழ்க்கையின் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் சம்பந்தப்பட்ட பாட்டுக்கள் இருக்கின்றன. தாலாட்டு, லாலி முதலியவை தாயார் குழந்தைகளைத் தொட்டிலில் இட்டு உறங்கவைக்கப் பாடுவது, ஏற்றப்பாட்டு, வண்டிப்பாட்டு, ஆலேலப்பாட்டு, படகோட்டிப்பாட்டு, கட்டடவேலைக்காரர்பாட்டு முதலியவை ஒவ்வொரு தொழில்களைச் செய்யும்போது பாடப்படுபவை.

தப்பா என்னும் ஹிந்துஸ்தானிப் பாட்டுவகை, பஞ்சாபில் ஒட்டகமோட்டுபவர்கள் பாடும் நாட்டுப் பாடலிலிருந்து தோன்றியது.

சமீபகாலத்தில் கிராமிய சங்கீதம், அல்லது நாட்டுப் பாடல்களுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டு வருகிறது. இந்தியாவின் ஒரு பிரதேசத்து நாட்டுப் பாடல்கள் மற்றொரு பிரதேசத்தில் பிரபலமடைந்தும்வருகின்றன. சினிமா கிராமபோன் முதலியவை நாட்டுப்பாடல்களைப் பிரபலப்படுத்தி வருகின்றன.

ஆனால்; நாட்டுப் பாடல்களைப் பாடுவதற்கு அழைக்கப்படுகிறவர்கள் சாதாரணமாக சங்கீதத்தையே தொழிலாக உள்ளவர்கள். அவர்களுக்கு நேரடியாக கிராமிய நிலையுடன் தொடர்பு கிடையாது. ஆதலால் கிராமியச் சூழ்நிலையைத் தத்ரூபமாக நமக்குக் காட்டிவிட அவர்களால் இயலாது. அவர்கள் கையாளும் பக்கவாத்தியங்களும் கிராமிய சங்கிதத்துக்கு ஒத்தவை அல்ல.

சிறிது காலமாக கிராமிய சங்கீதத்தை அப்பட்டமானநிலையில் பாதுகாத்து வருவதற்கு முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. அகில இந்திய ரேடியோ இத்துறையில் முயற்சி செய்து வருகிறது. தேசீய நிகழ்ச்சியில்கூட கிராமிய சங்கீதத்தை ஒலிபரப்ப ஏற்பாடு செய்யப்பட்டது. 'காஷ்மீரி, பஞ்சாபி; வங்காளி, மாரத்தி, ஆந்திரா, குஜராத், கிராமிய சங்கீதங்கள் ஒலி பரப்பப்பட்டுள்ளன. இவ்வருஷக் குடியரசு தினத்தன்று கிராமிய சங்கீதத்துக்கான விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மெல்லிசை சங்கீதம் வளர்ச்சியடைவதற்கும் கிராமியசங்கீதம் உதவி புரிந்திருக்கிறது.

அகில இந்திய ரேடியோஸ்தாபனம் வாஸ்தவமான கிராமிய சங்கீதத்தைச் சேகரித்துப் பராமரித்து வருவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது. இதற்காக வாகன ரீதியான ஒலிப் பதிவு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இவ்வருஷம் நடைபெறும் சங்கீத சம்மேளனத்தில்கிராமிய சங்கீதத்துக்கு விசேஷ ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்காக வாஸ்தவமாகவே கிராமங்கங்களிலிருந்து கோஷ்டிகள் வரவழைக்கப்பட்டன

உங்களுக்குத் தெரியுமா?

மத்திய சர்க்காருக்குச்சொந்தமான அச்சுக்கூடம் பூனா-நாசிக் ரோடில்-நாசிக் ரயில்வே நிலையத்திலிருந்து சுமார் இரண்டரை மைல் தூரத்தில்-100 ஏக்கரா பரப்புள்ள ஒரு மனையில் அமைக்கப்பட்டிருக்கிறது. அச்சுக்கூடம் சகல வசதிகளும் கொண்ட மூன்று பகுதிகள் கொண்டதாக இருக்கும். தற்போதைக்கு முதல் இரண்டு பகுதிகளில்தான் வேலை ஆரம்பிக்கப்படும்; மூன்ருவது பகுதி 1956 மார்ச் மாதவாக்கில் வேலை துவங்கத் தயாராயிருக்கும். முதலாவது பகுதியில் பிரசுரங்கள், சஞ்சிகைகள், அறிக்கைகள் முதலியவையும், இரண்டாவது பகுதியில் பலவர்ணத்துண்டுப் பிரசுரங்களும், மூன்ருவது பகுதியில் நமூனைக்களும் அச்சிடப்படும்.

இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்தின்கீழ் கிராமக் கைத்தொழில்கள், சிறியகைத்தொழில்கள் ஆகியவற்றுக்காக சுமார் 260 கோடி ரூபாய் செலவுபிடிக்கக்கூடிய அபிவிருத்தித்திட்டங்களை சிபாரிசுசெய்துள்ள கார்வே கமிட்டி தனது அலுவலை இவ் வருஷம் ஜூன் மாதம் துவங்கியது. அக்கமிட்டி சிபாரிசு செய்துள்ள திட்டங்களின்படி சுமார் 45லட்சம்பேருக்குவேலைவாய்ப்பு கிடைக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது-

இந்தியா சுதந்திரமடைந்ததிலிருந்து இந்தியத்தொழில் வெகு துரிதமாக முன்னேற்றமடைந்திருக்கிறது. தொழில்துறை உற்பத்தியின் பொதுக் குறியீட்டெண் ஏறுமுகமாக இருப்பதிலிருந்து இதை நன்குணர்ந்து கொள்ளலாம். இக்குறியீட்டெண் 1947ல் 97.2 இருந்தது. 1955 முதல் ஆறுமாதங்களில் 158ஆக உயர்ந்திருக்கிறது. பொருள்களின் விலைகளும் குறைந்துவிட்டன; விலைக் குறியீட்டெண் 1954 ஆரம்பத்தில் 399.6ஆக இருந்தது 1955 ஆகஸ்ட்கடைசியில் 358.6ஆகக் குறைந்துவிட்டது.

ஆசிரியர் பாலகவி இராமநாதன் செட்டியாரால் தேவகோட்டை செட்டிநாடுஅச்சகத்தில் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.

உ

செட்டிநாடு

வார இதழ்

மலர்-25 இதழ்-11
மன்மத- மார்கழி - 14
29-12-55
வியாழன் வெளியீடு
தேவகோட்டை
ஆண்டுச்சந்தா ரூ 4
வெளிநாடு ரூ 7

ஆசிரியர்:- பாலகவி இராமநாதன்செட்டியார்

நற்றிணை - தெளிவுரை

நெய்தல்

மணஞ்செய்து கொள்ளாது களவின்கண்ணே பலகாலும் வந்தொழுகும் தலைவனிடத்துத் தோழி ஊரலரை அறிவுறுத்தி வரைவுதோன்றக் கூறியது.

அறிந்தோ ரறனில ரென்றலர் சிறந்த, வின்னுயிர் கழியினு நனியின் னாதே, புன்னையங் கானற் புணர்குறி வாய்த்த, பின்னீ ரோதியென் றோழிக் கென்னே, படுமணி யானைப் பசும்பூட் சோழர், கொடிநுடங்கு மறுகி னார்க்காட் டாங்கட், கள்ளுடைத் தடவிற் புள்ளொலித் தோவாத், தேர்வழங்கு தெருவி னன்ன, கௌவையா கின்ற தையநின் னருளே 227.[ ]:-தேவனார்

ஐயனே! புன்னையஞ் சோலையினிடத்துப் புணர்தற்குக் குறித்த குறியினிடத்திலே வந்து நின்ற பின்னிய குளிர்ந்தகூந்தலையுடைய எனது தோழிக்கு நீ செய்த தலையளி ஒலிக்கின்ற மணியையுடைய யானையையும் பசும்பொன்னாலாகிய பூண்களையுமுடைய சோழமன்னரது கொடிகளசைகின்ற தெருக்களையுடைய ஆர்க்காடென்னும் நகரத்தில் கள்ளையுடைய சாடியில் வண்டுகள் ஒலித்து நீங்காத தேர்களியங்குந் தெருவை யொத்துப் பெரிய புசலுண்டாகின்றது. அது 'அறிந்தோர்கள் அறிநெறியில் நில்லாதவர்களே' என்ற அலராகப் பரந்துவிட்டது. அதனால் அவளது இனிய உயிர் இறந்துபட்ட பின்னும், இன்னாமையைத் தருகின்றதேயாகும்.

பசுந்தமிழ் மலர்

பாலகவி

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்கா ணாரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குன்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ யாட்கொண் டருளும் விளையாட்டி
னுய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோ
மெய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய்

:-திருவெம்பாவை

உரை:- 'மொய் - வண்டுகள் மொய்க்கின்ற. ஆர் - மலர்கள் நிறைந்த, தடம் - அகன்ற, பொய்கை புக்கு - திருக்குளத்தில் புகுந்து, முகேர் என்ன- முகேர் என்ற ஒலியுண்டாகுபடி, கையாற் குடைந்து குடைந்து- கையினாலே இறைத்து முழுகி, உன் கழல் பாடி-உனது திருவடிகளைப் புகழ்ந்து பாடி, ஐயா-எமது தலைவனே, வழி அடியோம்-வழிவழியாக உமது அடிமைகளாக வாழ்ந்து வருகின்ற நாங்கள், வாழ்ந்தோம் - நல்வாழ்வை அடைந்தோம், ஆர் அழல் போல் செய்யா - செறிந்த நெருப்புப்போன்ற செம்மேனியைஉடையவனே, வெண் நீறு ஆடி - வெண்மையான திருநீற்றை நிறைய அணிந்தவனே, செல்வா-முத்தித் திருவை உடையவனே, சிறு மருங்குல் - சிறிய இடையையும், மை ஆர்-மைதீட்டப்பெற்ற, தடங்கண் - அகன்ற கண்களையுமுடைய, மடந்தை-உமை அம்மையாரது, மணவாளா-கணவனே, ஐ ஆம் நீ-ஆண்டவனாகியநீ, ஆட்கொண்டு -உயிர்களை அடிமை கொண்டு, அருளும்-திருவருள் புரிகின்ற, விளையாட்டின் - திருவிளையாட்டினால், உய்வார்கள்-உய்தி பெறுபவர்கள், உய்யும் வகைஎல்லாம்-உய்யும் வகைகள் எல்லாவற்றாலும், உய்ந்து ஒழிந்தோம்-உய்தியைப் பெற்றுவிட்டோம், எய்யாமல் - யாம் இளைத்துவிடாதபடி, எமைக் காப்பாய்-எங்களைக் காப்

போற்றி யருளுவாயாக' என்பதாகும்.

மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகத்துள் மார்கழி மாதத்திற்கு உரியவையென்று சிறப்பாகப் பாராட்டப்பெறுகின்ற திருப்பதிகங்கள் இரண்டு- அவை திருவெம்பாவையும் திருப்பள்ளியெழுச்சியுமாம். பன்னிரு திருமுறைகளிலுமுள்ள பாடல்கள் எல்லாவற்றையும்விடத் திருவெம்பாவைத் திருப்பாடல்களுக்கு அதிக மதிப்பை அளித்திருக்கின்றனர் நம்முன்னோர். மார்கழிமாதத்துத் திருவாதிரைத் திருநாள், திருவெம்பாவை யோதுதலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. திருவெம்பாவையாற் சிறப்புறுகின்ற திருவாதிரைத்திருவிழாப் பத்து நாட்களிலும், மற்ற திருமுறைகளைத் திருக்காப்பிட்டு வைத்துவிட்டுத், திருவெம்பாவையொன்றனையே எதற்கும் ஓதுதல் வேண்டுமென்னும் மரபு, பண்டுதொட்டு நம்நாட்டில் இருந்து வருவதாகும்.

ஆடிமாதம் முதல் மார்கழி மாதம் வரையுள்ள ஆறுமாதங்கள் இரவும் தைமுதல் ஆனி வரையுள்ள ஆறு மாதங்கள் பகலுமாகத் தேவர்களுக்கு ஒவ்வோராண்டும் ஒவ்வொருநாளாகுமென்று சொல்லுவார்கள். இந்த முறையில் தேவர்களின் வைகறைப்பொழுது மார்கழி மாதமாகும். இராப்பொழுதை ஆறுகூறாக்கி, அதிற் கடைக்கூற்றை நற்செயல்களுக்கு ஏற்றதெனப் பொதுவாகக்கூறி அந் நற்செயல்களுள் தலைசிறந்ததாகிய இறைவழிபாட்டுக்கு மிகவும் ஏற்றதெனப் பெரியோர் கூறினர். வடமொழியாளர் 'பஞ்ச பஞ்ச உஷக்காலம்' என்று சொல்லுவது இப்பொழுதையேயாகும். இரவு ஆறு மாதங்களிற் கடைமாதமாகி, மார்கழி உஷக்காலமாவதனாலேயே, இம் மாத முழுவதும் எல்லாத் திருக்கோயில்களிலும் சிறப்புப்பூசனைகள் நிகழ்ந்து வருகின்றன.

சிவபெருமான், பிரபஞ்ச சிருட்டியைத் திருவுளத்தடைத்து வயிந்தவசத்தியை வெளிப்படுத்தும் அவதரமே, திருப்பள்ளியெழுச்சியென வழங்கப்பெறுவதாகும். இது மார்கழி மாதப் பொதுவிழாவின் உட்கிடை. இனி அம்மாதத்தில் நிகழுகின்ற திருவெம்பாவைத் திருவிழாவின் உட்கிடை, அச்சிருட்டிக்குத் துணைசெய்கின்றவசத்திகளின் பிரேரகமும், அதனால் பிருதிவியீறான பிரபஞ்ச காரியம் நிகழுதலுமாம்.

பிரபஞ்ச காரியத்திற்கு முதற் காரணமாயிருக்கிற சுத்த மாயையிலிருந்து அசுத்த மாயையும் அதிலிருந்துபிரகிருதிமாயையும் தோன்றிப் பரமசிவனது சத்திரூப சந்நிதியினின்று காரியப்படும், அச்சுத்தமாயை, நாதவிந்துக்களாகவும் சாதாக்கியமாகவும், மகேசுரமாகவும், சுத்தவித்தையாகவும் அஞ்சுதலமாயிருக்கும். நாதவிந்துக்களாகிய தலங்களிலே பரமும் பரையும் அதிட்டிக்கும். சாதாக்கியத்தில் அணுசதாசிவர் சேவிக்கச் சதாசிவமூர்த்திஎழுந்தருளியிருப்பர். மகேசுரத்தில் அனந்தாதிஅட்டவித்தியேசுரர் சேவிக்க மகேசுவரர் எழுந்தருளியிருப்பர். சுத்தவித்தையில் மந்திரேசுரர் சேவிக்க உருத்திரமூர்த்தி எழுந்தருளியிருப்பர்.

இவ்வாறு பிரபஞ்ச அநுக்கிரக காரியமாகப் பராசத்தியிற்றோன்றிய ஞானக்கிரியைகளொத்த இச்சையே திருமேனியான சதாசிவமூர்த்தி தன் திருவருளால் மகேசுவர தத்துவத்தில் சத்தி மண்டலத்திலிருக்கின்ற மனோன்மணி சத்தியைப் பிரேரிப்பர். அச்சத்தி சர்வபூததமனியையும் அந்தச் சத்தி பலப்பிரமதனியையும் அது பலவிகரணியையும் அது கலவிகரணியையும் அது காளியையும், அது இரவுத்திரியையும், அது சேட்டையையும், அது வாமையையும் பிரேரிக்க இந்த நவசத்திகளின் பிரேரகத்தினால் மாயை அதிட்டித்திருக்கிற அனந்ததேவராலே அசுத்தமாயை காரியப்பட்டுப்பிருதிவீறுயுள்ள பிரபஞ்ச காரியம் நிகழுமென்று சாத்திரங்கள் கூறுகின்றன.

இந்த முறையில் சதாசிவமூர்த்தியால் விழிப்புப் பெற்ற மனோன்மணி சத்தி மற்ற எட்டுச் சத்திகளையும் துயிலுணர்த்துவதாகிய பொருளைத் திருவெம்பாவையின் முதலெட்டுப் பாடல்கள் கொண்டிருக்கின்றன. ஒன்பதுபத்தாம் பாடல்களில் அச்சத்திகள் ஆண்டவனது புகழைப் பாவும் செய்திகள் உள்ளன. பதினொன்ருவதாகிய மேற்கண்ட பாடல், அவர்களது, நீராட்டு, துதி, வேண்டுகோள் ஆதியவற்றை அறிவிக்கின்றது.

ஆண்டவனைச் 'செய்யா வெண்ணீருடி' என்று அழைத்து, முறையே இராசத - சாத்துவிக குணங்களைக் குறிப்பாலுணர்த்தி அக்குணங்களில் நின்று புரியும் படைத்தல் காத்தல்களை ஆசிரியர் உணர்த்தியருளினர். நீறுடைமையால் ஒடுக்கத் தொழிலும் உணர்த்தப்பெற்றது. மூக்

குணங்களில் மூவரைத் தோற்றி மூவருக்கு முத்தொழில் வகுத்தருளி அக்குணங்களுக்கு அதீதமாய் ஆண்டவன் இருக்கின்றானென்னும் உண்மையை இதனால் அறிகின்றோம்.

மடந்தை மணவாளன் என்பதில், இறைவனது போக ஈகையும் செல்வா என்பதில் அவனது முத்தி ஈகையும் உணர்த்தப்பெற்றன. அநாதியே இறைவனுக்கும் உயிர்களுக்கும் இருக்கின்ற ஆண்டானடிமைத் தொடர்பை 'வழியடியோம்' என்ற சொற்றொடர் அறிவிக்கின்றது.

இறைவனது புகழ்பாடுபவர்க்கு நல்வாழ்வு வருதல் உறுதியென்பதை 'வாழ்ந்தோம் என்றும் உய்ந்தொழிந்தோம்' என்றும் கூறியதால் அறிகின்றோம். உயிர்களின் பக்குவம் நோக்கி அவற்றை அடிமைகொண்டு ஆண்டருளுவது இறைவனியல்பாதலின் 'நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்' என்றார். இடையறாது பெய்யும் மழைநீரை மேட்டு நிலம்வழிதே விட்டுவிடப் பள்ளப்பகுதி சேமித்து வைத்துக்கொள்ளுதல்போல, இடையறாத இறைவனது அருளாரமுதப் பெருவெள்ளத்தை அவநெறி நிற்போர் விட்டொழிக்கத் தவநெறி நிற்போர் சாலப்பெறுவர் என்னும் உண்மையை 'உய்வார்கள் உய்யும் வகை' என்ற சொற்றொடர் உணர்த்துகின்றது. உய்தி பெற்று முத்திநிலையில் இன்புறும்போதும் இறைவனது காப்பு இன்றியமையாது வேண்டப்பெறுமென்பதை இறுதிவரி தெரிவிக்கின்றது.

— இந்துவானர் —

மதுரை டிச. 20

திருநெல்வேலி மாவட்டம் திருநெல்வேலி தாலுகா, நாரணம்மாள்புரம் புதுநகரில் அரிசன்வெல்பேர்பள்ளியில் தலைமை ஆசிரியர் வேலைபார்த்துவரும் ஊர்காலன் மகன் ஊ. வெள்ளைச்சாமி என்ற ஜெ. வி. பாண்டியன் வயது36, கல்யாணத்தின் நிமித்தம் புரட்டெஸ்டண்டு கிறித்தவராய் மாறியிருந்தவர் இன்று திருஞானசம்பந்தசுவாமிகள் ஆதீனம் இளவரசு ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக பரமாசாரிய சுவாமிகளிடம் இந்துமுறைப்படி தீட்சைபெற்று இந்துவாகி ஊ. வெள்ளைச்சாமி என்ற பெயரை இந்துப் பெயராகவும் பெற்றார்.

சைவாலயங்களில் சம்ஸ்கிருத அர்ச்சனையே வேண்டும்.

சித்தாந்த பண்டித பூஷணம் ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை

(முன்தொடர்ச்சி)

ஆகலின் அந்நூல்களில் சம்ஸ்கிருதச் சொற்கள் அதிகங் காணப்பட்டில. அச்சொற்களைப் புகுத்தியே நூல்களியற்றவேண்டுமென விதியுமில்லை. ஆனால் அவசியம் நேர்ந்தபோது தொல்காப்பியரும் அச்சொற்களையாண்டார். எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்பவற்றிலுள்ள அதிகாரமென்பது சம்ஸ்கிருதம். ஆகவே சங்க நூல்களில் அச்சொற்கள் குறைந்திருப்பது கொண்டு அம்மொழி வந்தமொழியென்பது பொருந்தாது.

நாத்திகமுதற் சைவசித்தாந்தம் வரையுள்ள சர்வ சமயங்களுக்கும் ஆகரமாயிருப்பது சம்ஸ்கிருதமொன்றே. தொல்காப்பியர்முதலிய முற்காலப் புலவரும், மற்றுப் பின்வந்த புலவரும் அம்மொழியில் விற்பன்னராகி அதன்வாயிலாய்ச் சைவசமய ஞானமும் ஆசார அனுட்டானங்களும் உடையராய்த் திகழ்ந்தனர். அவரை மதித்து அவர் வழியிற் சென்றவரோ தமிழ்மந்திரங் கற்றவரும் சாமானியரும். அதனால் அவரிடமும் அச்சமய ஆசார அனுட்டான அபிமானங்கள் உளவாயின. தமிழிலும் சைவசமய நூல்கள் வேண்டுமென்ற அளவுக்குத் தமிழர் சம்ஸ்கிருதத்திலிருந்து விலகின்றவரல்லர். அக்காலத்தில் சமயப் பிரவர்த்தக நூல்கள் எந்தப் பிரதேச பாஷையிலும் கிடையா. தமிழிலும் அப்படியே. அதை நவீனரும் அறிவர். ஆனால் அவர் அதற்குக் கூறும் சமாதானம் வெகுவிந்தை. 'சங்க காலத்தில் சமயத்தையும் கடவுள் கொள்கையைப் பற்றியும் இலக்கியங்களில் கூறவில்லையே என்று கேட்கலாம். அன்று மக்கள் வாழ்வோடு வாழ்வாகக் கடவுள் கொள்கையும் சமயவுணர்ச்சியும் வளர்ந்தது. சமயத்தைப் பற்றியும் கடவுள் கொள்கையைப்பற்றியும் எடுத்துக்கூற வேண்டிய அவசியமில்லை. அன்று சமுதாயம் தவறான பாதையில் போகவில்லை. அதற்காகச் சந்தர்ப்பம் வந்த இடங்களில் எல்லாம்

சொல்லாமலும் விடவில்லை' (28-2-54 தினமணி) என்பது அச்சமாதானம். மக்களின் வாழ்வோடு வாழ்வாக இயைந்து வளராத விஷயங்கள்தான் நூல்களில் இடம்பெறுமென்பதுஎன்ன நியாயம்? சங்க நூல்களில் காதலும் வீரமும் ஒழுக்கமுமே மிகுந்து இடம்பெற்றுள்ளன. அதனால் அக்காலத்தில் அவை மக்களின் வாழ்வோடு வாழ்வாக இயைந்து வளரவில்லை, 'அரேபியா சிர்கெட்டிருந்தது. நரபலி கொடுத்தல், குழந்தைகளைக் கொல்லுதல், பெண் பிறந்துவிட்டால் அதைக் கொல்லுதல், அவற்றின் மாமிசத்தைப் புசித்தல், மது உண்ணுதல் போன்ற அநாகரிகம் காட்டுமிராண்டித்தனம் தலைவிரித்தாடியது. மக்கள் மிருகவாழ்க்கைநடத்தினர். கணவன்மனைவிஎன்றநியதியேஇல்லை 360 கடவுள்களிருந்தன. அத்தகைய அநாகரிகம் சூழ்ந்திருந்த அந்த நேரத்தில்தான் நபிதோன்றினர்' (10-11-55 தமிழ்நாடு) என்று நவீனர் வர்ணித்துள்ள அரேபியாவைத் தமிழகம் ஏறத்தாழ ஒத்திருந்ததுஎன்றுதானே கொள்ளவேண்டும். அம்முடிவுக்குக் கொண்டுசெல்கிற அச்சமாதானம் சிறிதும் பொருந்தாது. மேலும் எச்சமயமும்அதற்குரிய பிரமாண நூல்களின் சகாயமின்றி மக்கள் வாழ்வில் இயையவேமாட்டாது. இயையுமென்பதற்கு ஒருதிருஷ்டாந்தமுமில்லை. அக்காலத் தமிழரின் வாழ்வில் சைவசமயம் இயைந்து வளர்ந்தது உண்மை. ஆனால் அவ் வளர்ச்சிக்கு உறுதுணையாய்ச் சம்ஸ்கிருத வேதசிவாகமங்களேயிருந்துவந்தன. ஆனால் அவர் அதை உடன்படமறுக்கின்றனர். 'மிகப்பழமையானது சைவம். சாத்திரம் சமய சரித்திரம் சந்தர்ப்பவாதங்கள் இவைகள் இடையே ஏற்பட்டன' (16-6-55 தமிழ்நாடு) என்கிறுரவர். இங்கே சாத்திரமென்றது அவ்வேத சிவாகமங்களே. மிகப் பழமையானதென அவர் கூறுஞ் சைவத்துக்குத் தமிழிற் பழமையான பிரமாண நூல்கிடையாது. அவ் வேத சிவாகமங்களையோ இடையில் ஏற்பட்டனவெனக் கூறி விலக்குகின்றுரவர். அதனால் அச்சைவம் பிரமாண சாத்திர சூன்யமான சமயமென்பது புலனுகின்றது. அப்படிச் சாத்திரத்துக்கு முந்திய அதாவது சாத்திரமில்லாத சமயம் எங்குமே என்றுமே யிருக்க முடியாது. காட்டுமிராண்டிகள் காட்டுமிராண்டித் தெய்வங்களை வணங்குவார்களே, அதை அவர் எண்ணிக்கொண்டார் போலும்.

(தொடரும்)

உ
சிவமயம்
பாலரூவாயர் துணை



அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

செட்டிநாடு

மன்மத மார்கழி 14

துணைத் தலைவரும் தலைமை அமைச்சரும்

இந்தியப் பேரரசின் துணைத்தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள், அண்ணாமலை நகரில் நடைபெற்ற அகில இந்தியக் கீழை நாட்டு மொழிகள் மாநாட்டில் தலைமை வகித்து ஆற்றிய சொற்பொழிவையும், தலைமை அமைச்சர் நேரு அவர்கள் பாலக்காட்டில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசிய பேச்சையும் நாளிதழ்கள் வெளியிட்டுள்ளன.

இந்திய அரசியலின் பெருந் தலைவர்களான இவ்விருவரும், நாட்டு மக்களிடையே சமய ஒழுக்கம் நிலையாயிருக்க வேண்டுவது பற்றி உடன்பாடும் எதிர்மறையுமான கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றார்கள். உலகமதிக்கும் அரசியற் பேரறிஞராகிய நேரு அவர்கள், தமது கவனத்திலேயே இதுவரை இடம்பெற்றிராத சமயநிலைபற்றிச் சொன்ன சொற்கள், நம் உள்ளத்தைப் பெரிதும்புண்படுத்துகின்றன.

“இந்து, முஸ்லீம், சீக்கியர் கிறித்தவர் யாருடைய தாபனங்களாயிருந்தபோதிலும் சரி. அவைகளால் எத்தகைய தீங்குகள் விளைந்திருக்கின்றன வென்பதை மக்கள் அநுபவித்து அறிந்திருக்கிறார்கள் என்பது நேருஜீயின் கூற்று. இந்தியாவின் முன்னேற்றத்தைக் கண்டு உலகம் மதித்துப் பாராட்டுவதாக

வும், ஆனால் மத இயக்கங்களில் இன்னும் சிலர் இருப்பதால் இந்தியாவின் முன்னேற்றம் தடைப்படுகிறதென்றும் அவர் சொல்லியிருக்கிறார்.

இராதாகிருஷ்ணன் அவர்கள் 'உலகம் நாத்திகத்திலிருந்து விடுபடவேண்டுமானால் பல மதங்களுக்குள்ளும் மறைந்து அடங்கியிருக்கும் நற்குணங்களின் அடிப்படையில் ஒத்துழைக்கவேண்டும்' என்றும், யூத, கிறித்தவ, முஸ்லீம் மதங்கள் மேல்நாட்டு அநுபவத்தையும் இந்து, புத்த, சன்பூசியஸ் மதங்கள் கீழ்நாட்டு அநுபவத்தையும் பின்பற்றியவை. இவை ஆன்மீக வாழ்க்கையை வளர்க்க உதவியளிப்பன' என்றும் கூறியுள்ளார்.

சர் இராதாகிருஷ்ணன் அவர்கள் சமயசாத்திரப் பேரறிஞர். எனவே சமயஒழுக்கம் பற்றிய கருத்தை வெளியிட அவருக்கு முழுத்தகுதியும் உரிமையும் உண்டு என்பதை எவரும் மறுக்கமுடியாது. சமயத்தையே உயிர்நாடியாகக் கொண்டு வாழ்ந்து அந்த வலிமையினாலேயே இந்தியப் பேராசை அன்னியர் கையிலிருந்து மிக எளிமையாகவாங்கி வழங்கிய காந்தியடிகள் சீடராகிய நேருஜீ, இந்தியப் பண்பாட்டின் அடிப்படையாகப் பண்டுதொட்டு நின்று நிலவி வருகின்ற சமயஒழுக்கம் எத்தனையோ தீங்குகளை விளைவித்திருக்கிறது என்று சொல்லுவது வியப்புக்குரியதாகத் தானிருக்கிறது.

விலங்கு பறவைகளைப்போல உடல்வளர்ச்சிக்கெனவே உழைக்கின்ற மக்கள் நிறைந்தஉலகத்தில் உயிர் வளர்ச்சியின் உயர்வை அநாதிகாலத்திலிருந்தே அறிந்து அதற்காக உழைத்தவர்கள் இந்திய நாட்டு மக்கள் என்பதை வரலாற்றுநூல்கள் மிகநன்ருகக் கூறுகின்றன. இதை நேருஜீ அறியாதவரல்ல. மதத்தாபனங்கள் தீங்கு செய்வதாக அவருக்குப்புலப்பட்டிருப்பதற்குக் காரணம் அதுபற்றி அவர் ஆழ்ந்து சிந்திக்காமையே என்று நாம் நினைக்கிறோம்.

மதமாகிய போர்வையைப்போர்த்திக்கொண்டு சில அயோக்கியர்கள் செய்யும் இழிசெயல்களை மதத்தின் உண்மைக் கொள்கைகள் என்று நம்பினாலன்றி மதத்தைத் தீங்கு தருவது என்று சொல்வதற்கு இடமில்லை.

இந்த வேளையில் இராதாகிருஷ்ணன் அவர்கள் கூறியுள்ளபடி ஆன்மீக வாழ்க்கையை வளர்க்க உதவிசெய்யும் மத அடிப்படையிலேயே நாட்டுமக்கள் வாழவேண்டுமென்பதை நாம் வற்புறுத்திச் சொல்லவிரும்புகிறோம்.

திருவெம்பாவை மாநாடு

பொன்னமராவதி புதுப்பட்டி வாரவழிபாட்டுக் கழக ஆதரவில் புதுப்பட்டி சிவன் கோவிலில் திருவெம்பாவை, திருப்பாவைமகாநாடு 25-12-55 மாலை நடைபெற்றது. சித்தாந்தப்புலவர்மாமணி பாலகவி இராமநாதன் செட்டியார் அவர்கள் தலைமை வகித்துச் சைவ நூல்களில் திருவெம்பாவையும் வைணவ நூல்களில் திருப்பாவையும் எவ்விதம்விசேட நூல்கள் என்பதை எடுத்துக்காட்டி நாயக, நாயகி பாவத்தில் ஜீவன் இறைவனை அநுபவிக்கும் நிலையையும் விளக்கினார்கள். புதுவை நகரமன்ற உறுப்பினர் சித்தாந்தச் செல்வமணி சி. பிருந்தாதேவி 'திருவெம்பாவையும், திருப்பாவையும்' என்றபொருள் பற்றிப் பேசினார்கள். மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர் வித்துவான் நாராயணசாமிபிள்ளை அவர்களும், திருமதுரை இளவரசன் ந. நடராசன் அவர்களும் முறையே, 'திருவெம்பாவை, திருப்பாவையின் ஒற்றுமை', மாணிக்கவாசகரும், மார்கழிப் பெருமையும்' என்ற பொருள்கள் பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். செயலாளர் வித்துவான் மலை. சோமசுந்தரன், கழகத் தலைவர் A. P. L. பழனியப்பச் செட்டியாருடைய வரவேற்புரையைப் படித்துக் காஞ்சி காமகோடிபீடம், மதுரைதிரு ஞான சம்பந்தர் ஆதீனம் போன்ற இடங்களிலிருந்து வந்த வாழ்த்துச்செய்திகளைப்படித்தார். செயலாளர் V. K. ராஜகோபாலய்யர் நன்றிநவில, வாழ்த்துப்பாக்களுடன் மகாநாடு இனிது முடிந்தது.

சந்தா நேயர்களுக்கு!

ஐயன்மீர்!

கடந்த புரட்டாசி வரையுள்ள தங்கள் சந்தாப்பாக்கிகளை அனுப்பித்தரும்படி 10-10-55ல் கார்டுகள் எழுதியும். அதன் பின்னர் நமது இதழ்மூலம் பல தடவைகள் வேண்டிக்கொண்டும் ஒரு சிலர் அனுப்பாமலேயே இருந்து வருகிறார்கள். மீண்டும் மீண்டும் அஞ்சல்செலவிற்கு இடம் வைக்காமல்பாக்கிகளை அனுப்பித்தரும்படி கேட்டுகொள்கிறோம்.

அன்புள்ள,

அமைச்சர்

கல்கத்தா

கல்கத்தா, 23-12-55

பாரதி தமிழ்ச் சங்கத்தார் கொண்டாடும் பாரதி ஜயந்தியில் கலந்துகொள்வதற்காக விஜயம் செய்திருக்கும் 'சிவாஜி' ஆசிரியர் திருலோகசீதாராம், ஏ. எஸ். ராகவன், 'மாயா' ஆகியோரை நேற்றுமாலை சங்கக்கட்டிடத்தில் தலைவர் ஒ. சு. வே. மணியம் வரவேற்றார். தமிழ் எங்கு முழங்கினாலும் அது உலகெங்கும் பறைசாற்றப்படுகிறதென்றும், விண்ணினின்று இழிந்தநீர் பல்வேறு ஆறுகளாக உருவெடுத்தாலும் அவற்றினுள் நீர்த்தத்துவம் ஒன்றே என்றும் ஏ. எஸ். ராகவன் பேசினார். 'மாயா' அவர்கள் பாரதியின் புகழ்பாடும்தேனருவியாய்ப் பொழிந்தார்.

'அடிவானத்துக்குஅப்பால்' என்ன இருக்கிறது என்கிற மனிதமனமயக்கம் இறைத் தத்துவமாக விரிந்து வாழ்வின்ரகசியங்களுக்கு விடையளிக்கும் விந்தையை விரித்துரைத்த திருலோகசீதாராம்அவர்கள், வள்ளலாருக்குப்பின் பாரதி தோன்றி, அவர் நிறைவேற்ற முடியாது விட்ட பணியை முடித்து மாந்தரிடையே விழிப்பை உண்டாக்கினார் என்று கூறினார்.

வரப்பெற்றோம்

சுன்னாகம் ஈழகேசரி அலுவலகத்தார் வெளியிட்ட 1956ம் ஆண்டுத் திகதி அட்டவணை

சமய அடிப்படை

அண்ணாமலைநகர் டிச. 26

இங்கு நடைபெற்ற18-ஆவது அகில இந்தியக் கீழைநாட்டு மொழிகள் மாநாட்டிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் இந்தியக்குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் இம்மாநாட்டில் சமயத்திற்கும் இடம் அளித்திருப்பதுகண்டு தாம்பெரிதும் மகிழ்வதாகக் குறிப்பிட்டுவிட்டு உலகை முழுவதையும் சமய அடிப்படையில் இணைக்க வேண்டுமானால் உலகிலுள்ள எல்லா மதங்களின் ஒத்துழைப்பும் தேவையாகும். சமயங்கள் அனைத்தும் தங்களுடைய பொதுக் குறிக்கோளை அடைவதில் உண்மையான ஆர்வத்துடன் ஒத்துழைக்குமானால் உலகில் நிலவி வருகிற அச்சமும், துன்பமும் மறைந்துவிடும் என்றார்.

நேமத்தான்பட்டி

டிசம்பர் 22உ வியாழக்கிழமை திருநாவுக்கரசு வித்தியாசாலையில் அவ்வித்தியாசாலையை நிறுவிய பெரியார் திரு சி. வி. நா. பழநியப்பசெட்டியார் அவர்களது 85வது பிறந்தநாள் விழா நடைபெற்றது.

காலை 9-30 மணிக்கு, பழநியப்பரின் திருவுருவப்படம் இரதத்தில் வைத்து அலங்கரிக்கப் பெற்று ஊர்வலம் நிகழ்ந்தது.

அப்பர் இல்லத்தில் குழந்தைகட்குக் கனிகளும், இனிப்புக்களும் வழங்கப்பெற்றன. மணிவாசகர் தெருவில் லெ. கரு. இராமசாமி செட்டியார் அவர்கள் இல்லத்திலும் திரு, சண்முகஆசாரி அவர்களது அலுவலகத்திலும் இனிப்புக்கள் வழங்கப் பெற்றன.

மாலை 3-30 அளவில் தஞ்சை டாக்டர் உயர் திரு N. இராமநாதன் M. B. B. S. அவர்கள் தலைமையில் விழா தொடங்கப் பெற்றது. மாணவ, மாணவிகள் பேச்சு, உரையாடல், கும்மி, கோலாட்டம், நாடகம் முதலியன நடைபெற்றன.

புதுக்கோட்டை டாக்டர் உயர்திரு V. K. இராமச்சந்திரன் M. D., T. D. D. அவர்களின் 'சுகாதாரம்' என்ற சொற்பொழிவு நடைபெற்றது.

இறுதியில் தலைமையாசிரியர் திரு, ஆராவமுதன் அவர்களால் நன்றி நவிலப்பெற்று நாட்டு வாழ்த்துடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.



திருப்பரிதி நியமம் திருப்பதிகம்: தருமபுர ஆதீனவெளியீடு எண் 356. ஸ்ரீ ல ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் 8-12-55 மாதஜன்ம நட்சத்திரநாளில் வெளியிடப் பெற்றது. வழக்கம்போல் ஆதீனத் தேவாரப்பாடசாலை ஆசிரியர் திரு, ஆர். வேலாயுதஓதுவாமூர்த்திகள் தலச்சிறப்பு,பொழிப்புரை எழுதியுள்ளார்கள்.

முன்பணம் கொடுக்கப்படும்

சென்னை டிச 21-

தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் புயலால் பாதிக்கப்பட்ட இடங்களிலுள்ள தலத்தாபன ஊழியர்களுக்கு 2 மாதச் சம்பளம் முன்பணம் அளிப்பதற்குச் சென்னை அரசாங்கம் அனுமதித்திருக்கிறது.

இந்த முன்பணம் புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாத்திரம் அளிக்கப்படும். இந்தப் பணத்தை 24 மாதத் தவணைகளில் திருப்பித்தரவேண்டும்.

சை. சி. மகாசமாசப் பொன்விழா

சிதம்பரம் டிச 20-

சைவ சித்தாந்த மகாசமாசத்தின் பொன்விழா சிதம்பரம்இளமையாக்கினார்கோயில்பகுதிகளில் தனிப்பட அழகு செய்யப்பட்ட பந்தலில் டிச.30ம் நாளிலிருந்து மூன்றுநாட்களுக்கு நடைபெறும் சைவர் மாநாடு, சைவமங்கையர் மாநாடு சைவ இளைஞர் மாநாடு முதலியவைகளும் அவ்விழாவின் போது நடைபெறும்.

சென்னையின் முன்னாளமைச்சர் திரு, ஓ பி இராமசாமிரெட்டியார் மாநாட்டைத் தொடங்குவார். இலங்கைஅமைச்சர் திரு நடேசம்பிள்ளை மகாசமாசத்தின் பொன்விழாவுக்கும், சைவர் மாநாட்டிற்கும் தலைமை தாங்க இசைந்துள்ளார்

நோட்டீஸ்

In the Sub Court of Pudukotah

S. C. 232 of 55

O. S. முகமது இப்பராஹிம் ராவுத்தர் —வாதி

குளத்தூர் தாலுகா, வைத்தூர் வட்டம் தொளுவாம்பட்டியிலிருக்கும் வீரப்பன்சேர்வை மகன் கருப்பண்ணன்சேர்வை

—2ம்பிரதிவாதி

To D. 2. The above Suit Filed against you & others for Rs 1180-0-0, Costs & S. I. on a Pronote stands Posted for final disposal to 6-1-56

Ramanatha Sastri

புதுக்கோட்டை } வாதி
8-12-55 வக்கில்

உங்களுக்குத் தெரியுமா?

தேச மக்களின் நற்குணப் பண்பாட்டின் வளர்ச்சிக்காக நாடுமுழுவதிலும் ரயில்வே ஸ்டேஷன்களில் காந்தீய இலக்கியங்களின் விற்பனைக்கு ஊக்கமளிக்கத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன இது சம்பந்தத்தில் புக் ஸ்டால் கண்டிராக்டர்களின் ஆதரவு கோரப்பட்டிருக்கிறது. குறிப்பிடப்பட்ட சில காந்தீய வெளியீடுகள் தேசம் பூராவிலுமுள்ள ரயில்வே இன்ஸ்டிட்யூட்டுகள், ரயில்வேப் பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றைச் சார்ந்த வாசகசாலைகளில் வைக்கப்பட வேண்டுமென்று ரயில்வே போர்டு ரயில்வேக்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறது.

ஒழுக்க, சமூக ஆரோக்கியக் கமிட்டி, இளங் குற்றவாளிகள், அங்கஹீனர்கள் பிற்காலப் பராமரிப்பு கமிட்டிகளின் சிபாரிசுகளை நிறைவேற்றி வைப்பது பற்றி மத்திய சமூகநல போர்டுக்கு ஆலோசனை கூறுவதற்காக, இந்திய சர்க்காரின் சில மந்திரி காரியாலயங்களின் பிரதிநிதிகள் கொண்டதும், ஸ்ரீமதி இந்திரா காந்தியைத் தலைவராகக்கொண்டதுமான ஒரு விசேஷக்கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்விரு கமிட்டிகளும் ஒழுக்க, சமூக ஆரோக்கியம், இளங்குற்றவாளிகள் தண்டனை பிற்கால கவனிப்பு, அங்கஹீனர் பராமரிப்பு சம்பந்தப்பட்ட பிரச்னைகள் பற்றி அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்காக 1954-ம் ஆண்டில் மத்திய சமூகநல போர்டாரால் நியமிக்கப்பட்டன.

சமுதாய நலத் திட்டப் பிரதேசங்களில் குடிசைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்குத் தேவைப்படும் தொழில் நுட்ப சிப்பந்திகளுக்குப் பயிற்சி அளிப்பதற்காக சமுதாய நலத் திட்ட நிர்வாகத்தினர் ஒரு திட்டத்தை வகுத்திருக்கின்றனர். இதன்படி பம்பாய், சென்னை, டில்லி, கல்கத்தா ஆகிய இடங்களிலுள்ள பிராந்திய தொழில்நுட்ப நிலையங்களில் பயிற்சி கொடுக்கப்படும்.

கொஞ்சகாலத்துக்கு முன்னர் ஏற்பாடு செய்யப்பட்ட எக்ஸ்பிரஸ் கூட்ஸ் செர்வீஸ் வியாபாரத்துறையினரால் பெரிதும் விரும்பப்படுவதால் இதை விஸ்தரிப்பது பற்றி ரயில்வே போர்டு

ஆலோசித்து வருகிறது. பிரயாணிகள் ரயில் வண்டிகளைப் போலவே பிரசுரிக்கப்பட்ட கால அட்டவணைகளின்படி இவைகள் வருவதால், சாதாரண கூட்ஸ் வண்டிகளைவிட இவைகள் ஓடும் நேரம் கிட்டத்தட்ட 50சத விகிதம் குறைவாக இருக்கிறது.

காகிதம், காகிதக்கூழ் தயாரிப்புத் தொழில்களின் அபிவிருத்திக்கான திட்டங்களை வகுப்பதற்குச் சர்க்காருக்கு உதவிபுரிவதற்காக இந்தியசர்க்கார், நிபுணர்கள் குழு ஒன்றை நிறுவியிருக்கின்றனர். இக்குழுவினர் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பலவிதக் காகிதங்களின் தேவைகள் அளவு பற்றி மதிப்பிடுவார்கள். மூலப் பொருள்கள் தோதுக்கள் பற்றியும் இக்குழுவினர் பரிசீலனை செய்வார்கள்.

இந்தியாவில் காகிதத் தயாரிப்புத் தொழிலுக்குத் தேவையான தொழில்நுட்ப ஊழியர்கள் கிடைக்கும்படி செய்வதற்காக உயர்தரப்பயிற்சிக்கும் தொழிலாளர் பயிற்சிக்கும் இரண்டு பாட வகுப்புகளை நடத்த வேண்டுமென்று மத்தியசர்க்கார் உணவு-விவசாய மந்திரி காரியாலய பாடத்திட்டக் கமிட்டி சிபாரிசு செய்துள்ளது; அவையாவன: 1. உயர்தரக் காகிதத் தொழில் நுட்பச் சிப்பந்திகள் பயிற்சிக்காகப்பட்டபிற்கால டிப்ளோமா பயிற்சி; 2.காகித உற்பத்திச்சாலைகளில் வேலைசெய்யும் தொழில் நுட்ப தொழிலாளர் பயிற்சிக்காக ஒரு 'சேர்டிபிகேட்' பட்ட வகுப்பு. இந்த இருவகுப்புகளும் டேராடூன் வனஆராய்ச்சி நிலையத்தின் செல்லுலோஸ்- காகிதப் பிரிவால் நடத்தப்படும்.

வருஷத்துக்கு 1,20,000 மணங்கு நெய், இந்திய சர்க்காரின் மார்க்கெட்டிங். இன்ஸ்பெக்ஷன் டைரெக்டரேட்டின் அதிகாரம் பெற்ற நெய்வியாபாரிகள் 96பேர்களால் பரீட்சிக்கப்பட்டு, தரம் நிர்ணயமாகி, 'அக்மார்க்' அத்தாட்சி கொடுக்கப்படுகிறது. நெய்யைத் தரநிர்ணயம் செய்யும் நிலயங்கள்இப்பொழுது உத்தரப்பிரதேசம், பீஹார், பஞ்சாப், பம்பாய், ஆந்திரா, சௌராஷ்டிராம்,சென்னை, மேற்குவங்காளம் ஆகியராஜ்யங்களில் இருக்கின்றன.

சிசுநலத்துக்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற உணர்ச்சி இப்பொழுது கிராமப்பிரதேச மக்களிடையேயும் பரவியிருக்கிறது.

கிராம ஜனங்களின் தீவிரக் கூட்டுறவுடன்சமுதாயஅபிவிருத்தித் திட்டப் பிரதேசங்கள் பலவற்றில் குழந்தைகளுக்காகப் பல பள்ளிக்கூடங்கள், பொழுது போக்குப் பூங்காவனங்கள், க்ளப்கள் கட்டப்பட்டிருக்கின்றன. உதாரணமாக 1954-ம் வருஷத்தில் கிராமவாசிகள்குழந்தைகளுக்காக 953 பள்ளிக் கூடங்களைக் கட்டினார்கள்; மற்றும் இவர்களின் விளையாட்டு சாதனங்களுக்காகவும், வாசகசாலைகளுக்காகவும் ரூ 1,30,440 நன்கொடை அளித்துள்ளார்கள்.

1954-55-ம் ஆண்டில் சர்க்காருக்குச் சொந்தமான சிந்தரி எரு, ரசாயனங்கள் லிமிடெட் மொத்த லாபம் ரூ 3.96 கோடி சம்பாதித்தது; இது முன்வருஷ லாபத்தொகையைவிட ரூ 1.25 கோடி அதிகம்.

சிந்தரி உர உற்பத்திசாலையில் உற்பத்தி பெருகியவுடன் அம்மோனியம் சல்பேட் விற்பனை விலை மேலும்குறைக்கப்பட்டது. இதன் விலை 1952-53ல் டன்னுக்கு ரூ 350ஆக இருந்தது படிப்படியாகக் குறைக்கப்பட்டு 1954-55ல் டன்விலை ரூ 270ஆக இறங்கிவிட்டது.

கோலாரிலும், ஹைதராபாத்திலும் உள்ள தங்கச் சுரங்கங்களில் 1954-ல் சுமார் 18,300 தொழிலாளர்கள் வேலைசெய்து வந்தனர்; மொத்தத் தொழிலாளர்களில் ஸ்திரீ வேலையாளர் 4.1 சதவிகிதம்.

ஐந்துவருஷத் திட்டத்துக்காகக்கானடா சர்க்கார் அளிப்பதாக வாக்குறுதி செய்துள்ளதும், அளித்திருப்பதுமான மூலதன உதவியின் மொத்த மதிப்பு 770 லட்சம் டாலர் அல்லது ரூ. 37கோடி. இந்த உதவி, விற்பனைப் பொருள்கள் மூலமாகவும், திட்டங்களுக்குத் தேவைப்படும் சாதனங்கள் ரூபமாகவும் வழங்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சமுதாய நலத் திட்ட நிர்வாகத்தினருக்குத் தேவைப்படும் விவசாயப் பட்டதாரிகளின் எண்ணிக்கை 4,928 ஆக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப்பட்டதாரிகள் வட்டார அந்தஸ்தில் விஸ்தரிப்பு அதிகாரிகளாக நியமிக்கப்படுவார்கள்.

ஆசிரியர் பாலகவி இராமநாதன் செட்டியாரால் தேவகோட்டை செட்டிநாடுஅச்சகத்தில் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.